
# தமிழரசு

திங்கள்இருமுறை ஜன. 1-1971 35 காசு



உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2





# தமிழரசு

மலர் 1. 1971 சனவரி 1 இதழ் 13.

## இந்த இதழில்

தமிழைப் பேணுவோம்
—நாமக்கல் கவிஞரின் கவிதை
கல்விச் சிந்தனை
உழவர்களுக்குக் காணிக்கை
கரிகாலன் குளித்த காவேரி
என்ன உணவு ஊட்டலாம் ?
அண்ணா பண்ணை அழைக்கிறது !
குழந்தை ஈன்ற அம்மா
இருதய நோய்களைத் தவிர்ப்பது எப்படி ?
பயிர் செழிக்கப் பாமணி உரம்
கேளுங்கள் கொடுக்கப்படும்
தப்பித்து வந்தானம்மா !
தீராத விளையாட்டுப் பிள்ளை
நன்மைகள் ஆயிரம் ஆயிரம்
வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்
இனியவை இருபது

அட்டையில் :
வேடந்தாங்கலில் காணப்படும்
வண்ணப் பறவைகள்



# தமிழைப்

## நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம் பிள்

### முன்னாள் அரசவைக் கவிஞர்

பாஷைக ளெல்லாம் பசையற நாணிக்
கூசிக் கூசிக் குறைபடச் செய்யும்
வாசத் தமிழை வரையிலாத் தொன்மையை
வீசும் தமிழை விரிந்த கடலினைத்
தேனினும் பாகினும் தெள்ளிய அமுதினும்
ஏனினும் எதனினும் இனித்திடும் தமிழை
தின்னத் தின்னத் தெவிட்டாத் தமிழை
பன்னப் பன்னப் பலக்கும் தமிழை
கொள்ளக் கொள்ளக் குறையாத் தமிழை
கள்ளக் கபடுகள் இல்லாத் தமிழை
படிக்கப் படிக்கப் பயனே தந்து
குடிக்கக் குடிக்கக் குறையா அமுதை
என்தாய் மொழியினை என்னுடைத் தமிழை
உன்தாய் மொழியினை உம்முடைத் தமிழை
எம்மையும் உம்மையும் மற்றுமிங் கெவரையும்
செம்மையாய் நம்முடைச் சிறுபிரா யத்தினில்
தொட்டிலில் விட்டுக் கட்டிலில் வைத்துத்
தோளிலும் மார்பிலும் தூக்கித் திரிந்து
பாலூட்டி வளர்த்த பாவையாம் தமிழை
தாலாட்டி வளர்த்த தாயாம் தமிழை
சீராட்டி வளர்த்த சீர்பெறும் தமிழை
பாராட்டி வளர்த்த பழையதோர் தமிழை
கோவண முடுத்துப் பாவாடை தந்த
தேவியாம் தமிழைத் தெய்வ நற்றமிழை
ஆசையாம் மனைவியை அகத்தினில் விட்டு
வேசையை விரும்பும் வெறியரைப் போன்ற
பாஷையை மறந்த பாதகர் பிறந்து
தேசமிந் நாட்டின் தீவினை யாலே
சீச்சீத் தமிழெனச் சீறிப் பழித்து
நாசியை நீட்டி நாய்போல் விழுந்து
ஏசித் திரியும் இழிவுடை மாக்கள்

# பேணுவோம்

பேசவும் கூசிடும் பேயர்கள் பிறந்து
தன்னை வளர்த்த தமிழைப் பேசுதல்
குன்றுந் தொழிலெனக் கூசியே நின்று
பன்னப் பன்னப் பல்லைக் காட்டிடும்
சின்னஞ் சிறியவர் பிறந்தத னாலே
தாயை மறந்த தடியர்கள் போல
வாயைத் திறந்தொரு வார்த்தை சொல்லவும்
உரிமையாம் பாஷையைத் தெரியா திருப்பது
பெருமையென் றெண்ணும் பேயெனு மாக்கள்
குங்குமம் சுமந்த கழுதையே போலத்
தம்முடைப் பாஷையைத் தாமுண ராமல்
அத்துடன் அதனை அவமதித் தேசும்
பித்தரும் பதரெனும் சுத்தநிர் மூடர்கள்
பிறந்தத னாலே பெருமை மறந்து
சிறந்த நாளும் சீரும் குறைந்து
மண்ணிற் கிடக்கும் மணியே போலும்
எண்ணெயிற் றேய்த்த எழுத்தே போலும்
அற்பரை அண்டிய விற்பனர் போலும்
அணைப்பவ ரில்லாக் குழந்தையே போலும்
அநுபவ மில்லா அறிவே போலும்
மங்கிக் கிடக்கும் மருவிலாத் தமிழை
இங்கிதத் தமிழை இனிமையாம் தமிழை
அந்த நாளினிற் சந்திர முடியோன்
சுந்தரப் படுத்த வந்துநின் றருளி
விருத்தியே செய்யக் கருத்தினி லெண்ணிப்
பெருத்த கேள்வியர் பெரியவர் சபையென
சங்கரன் தானே அங்கத் தலைவனாய்
தங்கியே நடத்திய தனிப்பெரும் சபையெனச்
சுத்தரும் சித்தரும் பக்தரும் துதிக்க
இத்தரை யெல்லாம் இசைகொண்டு நின்று
உலகெலாம் அழியினும் விலகிடாப் புகழொடு
அலகிலாக் கல்விக் களஞ்சிய மாகி
தெய்வப் பலகையைத் தன்னிட மடக்கி
ஐயமில் லாத அருந்தமி ழளித்த
சித்திரச் சபையாம் மெய்த்திருச் சபையாம்
முத்தமிழ்ச் சங்கம் விளங்கிய தமிழை—
தாயெனப் பேணித் தமிழர்கள் யாவரும்
ஓயா துழைத்து ஒப்பிலா மொழியெனப்
புதுப்புதுக் கவியும் புகழ்பெறு நூல்களும்
விதவிதம் படைத்து வேறுள நாட்டவர்
யாவரும் வியக்க அரியா சனத்தில்
மேவிடச் செய்ய விரைகுவம் இன்றே!



## எது வெறி?

பல ஆண்டுகளுக்கு முன் தமிழன்பரின் இல்லத்தில் இந்தி திணிக்கப்படக் கூடாது என்று ஓர் அறிக்கை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப தமிழகத்துப் பெரியவர்கள் ராசாசி—பெரியார் ஈ. வே. ராமசாமி போன்றவர்கள் ஒன்று கூடினர்.

அப்போது பெரியார் அவர்கள் "தமிழ்ப் பற்று இருக்கலாம்; வெறி கூடாது" என்று கூறினார்.

அதற்கு ராசாசி அவர்கள் பதிலளித்தார். "பெரியார் அவர்களுக்கு ஒன்று கூறிக் கொள்வேன். ஒரு இளைஞன் பெண் மீது பற்று வைப்பதை அவன் காதல்—என்பான். ஆனால் மற்றவர்கள் அந்தப் பெண் மீது வெறிபிடித்து அலைகிறான்' என்று சொல்வார்கள். ஆகவே பற்றும்—வெறியும் அவரவரது நிலையை–நினைப்பைப் பொறுத்தது"—என்று ராசாசி அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

• • •

## நமக்குள்ள சிறப்பு!

உலக இலக்கியத்தில் காண முடியாத சிறப்பு நமக்கு உண்டென்றால் பெண்பாற் புலவர்கள் நம் நாட்டில்தான் உண்டு; அவர்கள் தந்த அறநெறிச் சிறப்பு இன்று உலக இலக்கியங்களில் தலை நிமிர்ந்து நிற்கிறது.



# 11. இயற்கையின் தொட்டிலில்

ஜூலைத் திங்கள் நான்காம் நாள் காலையில் ரோம் நகரை விட்டு சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிக் நகருக்குப் புறப்பட்டோம். ரோமிலிருந்து டாவின்ஸி விமான நிலையம் வரை உள்ள எழில் மிகு காட்சிகளும் அகலமான நீண்ட நெடுஞ்சாலைகளும் என்னைக்கவர்ந்தன. நம் நாட்டில் நெடுஞ்சாலைகள் அவ்வளவு சிறந்தவைகளாக எப்பொழுது முன்னேறுமோ என்று எண்ணி ஏங்கினேன். விமான நிலையத்தில் இந்திய தூதரக அதிகாரிகளும் மற்றும் பல நண்பர்களும் வந்திருந்து எங்களை வழி அனுப்பி வைத்தனர். அவர்களிடமிருந்து பிரியா விடை பெற்றோம்.

விமானம் சுவிட்சர்லாந்து நோக்கிப் பறந்தது. சுவிட்சர்லாந்து ஒரு சின்னஞ்சிறு நாடு. ஆனால் சுதந்திர உரிமைகள் பூத்துக் குலுங்கும் சுந்தர பூமி. மண் வளத்தாலும் மக்களின் எண்ணிக்கையாலும் குறைந்த நாடும் நல்வாழ்வு நடத்திடக் கூடும் என்பதற்கோர் அழகான எடுத்துக்காட்டு—என்று தமது எழுத்திலும் பேச்சிலும் அண்ணா அவர்கள் அடிக்கடி உவமை காட்டுவார் சுவிட்சர்லாந்தை.

அவர் நெஞ்சம் கவர்ந்த நாட்டை நேரில் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன் வெளியில் என் பார்வையைச் செலுத்தினேன்.

வழியெல்லாம் மேகமென்னும் மல்லிகைச் சரங்களைச் சொரிந்து கொண்டிருந்தது வானம். பஞ்சு விரித்தது போன்ற பனி முகடுகளும் கண்களுக்கு நல்ல விருந்தளித்தன. சுருங்கச் சொன்னால் இயற்கை அன்னை ஒரு எழிலரசியாகக்காட்சியளித்தாள் ஒரு பழம்பெரும் நாட்டிலிருந்து விடைபெற்றுக்கொண்டு புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் பூமிக்குள் விமானம் நுழைந்தது.

கிழக்கில் ஆஸ்திரியா, மேற்கில் பிரான்ஸ், வடக்கில் ஜெர்மனி, தெற்கில் இத்தாலி என்று நாற்புறமும் சூழப்பட்டு ஐரோப்பாவின் மையத்தில் அமைந்திருக்கும் சுவிட்சர்லாந்து ஐரோப்பாவின் விளையாட்டு அரங்கம் என்று போற்றப் படுகிறது.

கடலை ஓர் எல்லையாகப் பெறாத நாடுதான் எனினும், மேற்கிலும் தெற்கிலும் ஜூரா, ஆல்ப்ஸ் மலைகளும், கிழக்கிலும் வடக்கிலும் வற்றாத ரைன் நதியும் இயற்கை அரண்களாக இருப்பதோடு, காணுமிடமெல்லாம் அழகுக் களி நடனம் புரியும் திருநாடாக சுவிட்சர்லாந்தை மாற்றிவிட்டன.

விமானத்திலிருந்து பார்க்கும் பொழுதே, சுவிட்சர்லாந்தின் இனிய தோற்றம் என் இதய வீணையில் கவிதை நாதங்களை எழுப்பிவிட்டது.

ஆல்ப்ஸ் மலையின் சிகரங்கள், ஆறுகள், அணியருவிகள், அழகு மணிக் கட்டடங்கள், ஏரிகள் என்று இயற்கையன்னையின் சுவைசேர் அமுதக் காவியத்தின் எழில்மிக்க அத்தியாயங்கள் எங்கும் தெரிந்தன. புறத்தில் மட்டுமல்ல, அகத்திலும் அழகு மிக்கது அந்நாடு! ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே கூட்டாட்சியின் பெருமையை உணர்ந்த நாடல்லவா அது?

இத்தாலியர், ஜெர்மனியர், பிரெஞ்சு தேசத்தவர், ஆஸ்திரியர் என்று பல்வேறு மக்கட் பிரிவுகளைக் கொண்டது சுவிட்சர்லாந்து. அவர்களை ஒரே தேசிய இனமாக்கி, ஒரு கூட்டாட்சியின் கீழ்க் கொண்டு வரும் பணியைத் தொடங்கி வைத்தவன் வில்லியம் டெல் என்பான்.

வில்லியம் டெல் ஒரு மாவீரன். விற்பயிற்சியில் வல்லவன். அவன் வாழ்ந்த காலத்தில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திற்கு சுவிஸ் நாட்டின் பெரும் பகுதிகள் அடிமைப்பட்டுக் கிடந்தன. அவன் இருந்த ஊரில் கெஸ்லர் என்ற ஓர் கெடுமதி கொண்ட ஆஸ்திரிய கவர்னர் கொடுங்கோலாட்சி நடத்தி வந்தான். ஒரு நாள் கம்பு ஒன்றை நட்டு, அதன் உச்சியில் ஒரு தலைப்பாகையை வைத்து, அவ்வழியாகப் போவோரெல்லாம் அதனை ஆஸ்திரிய அரசனாக மதித்து வணங்க வேண்டுமென்று ஆணவத்தில் ஆணையிட்டான் அவன்! மனம் புழுங்கிய மக்களும் மண்டியிட்டு வணங்கி வந்தனர். ஆனால்—''ஆஸ்திரிய அரசனே இங்குவந்தாலும் அடிபணியேன்'' என்று கூறினான் வில்லியம்.

அவனைப் பிடித்துவந்து கெஸ்லரிடம் நிறுத்தினர் அவரது காவலர்கள். ''வில்லியம் குறி பார்த்துக் கணை தொடுக்கும் ஆற்றலில் வல்லவனாமே நீ! உனக்கு ஓர் சோதனை வைக்கிறேன். அதில் நீ வெற்றி பெற்றால் உன் தலை தப்பும்'' என்றான் கெஸ்லர்.

வில்லியத்தின் ஆசை மகனை, அவனின் வாரிசை, ஒரு மரத்தில் கட்டச் செய்தான். அச் சின்னஞ்சிறு பாலகனின் சிரசின் மேல் ஒரு ஆப்பிளை வைத்து ''ஒரே அம்பில் அந்த ஆப்பிளை வீழ்த்த வேண்டும். வீழ்த்தினால் விடுதலை—இன்றேல் உங்கள் இருவருக்குமே மரண தண்டனை'' என்றான். கேட்போருக்கு உடலெல்லாம் சிலிர்க்கும்.

வில்லியம் டெல் இரண்டு கணைகளை உருவி எடுத்தான். ஒன்றை இடுப்பில் செருகிக் கொண்டான். மற்றதை நாணில் பொருத்தி வில்லை வளைத்தான்.

கணை பறந்தது.
கனி விழுந்தது.

''சபாஷ்'' என்று கூவினான் கெஸ்லர். ''ஆமாம், இன்னொரு கணையை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டாயே, அது எதற்கு?'' என்று கேட்டான்.

''ஒரு வேளை, முதல் அம்பு என் மகனின் உயிரைக் குடித்திருந்தால், இரண்டாவது கணை உன் இதயத்தில் பாய்ந்திருக்கும்'' என்றான் வில்லியம் டெல். கவர்னரின் ஆத்திரத்திற்குக் கேட்கவா வேண்டும்? ''என்ன ஆணவம் இவனுக்கு. இவனைப் பிடித்து ஏரிக்கு அப்பால் உள்ள சிறையில் அடைத்து வையுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

புயல் ஒன்று தோன்றிற்று திடீரென்று.

அதனைப் பயன்படுத்தி, வில்லிற் கோத்த அம்பெனும் விசையினில் மறைந்து போனான் வில்லியம் டெல். சின்னாட்களுக்குப் பிறகு கெஸ்லரின் உயிரைத் தன் இரண்டாவது கணைக்கு இரையாக்கும் வரை அவன் ஓயவில்லை.

சுவிஸ் நாட்டில் பள்ளிச் சிறுருக்கும் தெரிந்திருக்கும் பழங்கதை இது.

வஞ்சினம் முடிப்பதிலும் தாயகத்தின் வாழ்வுக்கு ஊறு நேரும்போதுவரிவேங்கையெனப் பாய்வதிலும் வல்லவர்கள் சுவிஸ் மக்கள். ஆனால், ஆதிக்க வெறியோ, போர் வெறியோ சிறிதும் அற்றவர்கள். ஆல்ப்ஸ் மலைகளைப் போலவே இவர்கள் ஆற்றல் மிக்கவர்கள்; அமைதி தவழும் இயல்பும் கொண்டவர்கள்.

உலகப் போர்களில் எந்த அணியிலும் சேராது தனித்து நின்று பெருமை கொண்டது சுவிட்சர்லாந்து. இத்தாலியர், ஜெர்மானியர், பிரெஞ்சுதேசத்தவர் என்று பல்வேறு இனங்கள் சேர்ந்து வாழும் இந்நாடு, எந்த அணியில் சேர்ந்தாலும், உள்நாட்டில் கசப்புணர்ச்சி தோன்றி ஒற்றுமையைக் குலைக்கக் கூடும் என்று அவர்கள் அஞ்சியதும் அதற்கோர் காரணமாகும்.

அமைதியை விரும்பும் இவர்கள் குணத்தையும் கூட்டாட்சியில் இவர்கள் கொண்டுள்ள இறுக்கமான பற்றையும், அசைக்கவோ, மாற்றவோ வல்ல சக்தி இது வரை வரலாற்றில் தோன்றவில்லை ; சுவிஸ் மக்களின் கூட்டாட்சி மனப்பான்மையை மாற்ற மாவீரன் நெப்போலியனும் முயன்று தோற்றான்.

தன்னம்பிக்கையும், தளரா முயற்சியும், ஒற்றுமையும் கடமையுணர்ச்சியும் ஒரு நாட்டை ஒப்பற்றதாக்கிவிடும் என்பதற்கு சுவிட்சர்லாந்து ஒரு சிறந்த எடுத்துக் காட்டல்லவா என்ற எண்ணங்கள் என் நெஞ்சத் திரையில் ஓடிக்கொண்டிருந்தபொழுது விமானம் ஜூரிக் நகரின் தரையைத் தொட்டது.

அப்பொழுது நேரம் சுவிஸ் நேரப்படி காலை 9-30 மணி. நேரம் என்றதும், கடிகாரம் என்றதும் சுவிட்சர்லாந்துதான் நமக்கு நினைவுக்கு வரும். தாஷ்கண்ட் என்றால் லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு வருவது போல, சுவிட்சர்லாந்து என்றதும் மறைந்த பிரதமர் நேருவின் மனைவி திருமதி கமலாவின் நினைவு எனக்கு வரத் தவறவில்லை.

ஏர் இந்தியாவைச் சேர்ந்த அதிகாரிகளும், சுவிஸ் நாட்டுத் தொழில் அதிபர் திரு. விண்டன் மெயர் முதலியோர் பலரும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். அங்கே பிரான்ஸைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவர் அரசியல் பற்றியும் தி. மு. கழகம் பற்றியும் காட்டிய ஆர்வம் என்னை மிகவும் கவர்ந்தது.

பொதிகை மலைத் தென்றலின் சுகத்தை அங்கு அனுபவித்த நான், ஒரு கணம் என்னை மறந்து, தமிழ் நாட்டில்தான் இருக்கிறோமா என்று எண்ணினேன். ஆனால், பின்னர்தான் ஆல்ப்ஸ் மலை தரும் ஆனந்தக் காற்று அது என்பது என் நினைவுக்கு வந்தது.

நுரையீரல் நோய்களைத் தீர்க்க வல்ல இந்தத் தூய்மையான இனிய காற்றை நுகர்ந்து உடல் நலம் பெற இலட்சக் கணக்கில் வெளி நாட்டார் வருகின்றனராம் இங்கு. அவர்களுக்காக ஆயிரக் கணக்கில் மலைகளின் மேல் சிறு குடில்களும் உணவு விடுதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மருந்துச் சக்தியையுடைய இரண்டரை இலட்சம் நீரூற்றுகள் ஆல்ப்ஸ் மலையின் சரிவுகளில் இருக்கின்றன. இதே போல் நம் நாட்டிலும் பல பகுதிகளில் உடலுக்கு வலுவூட்டும் காற்றையள்ளி வீசும் பல மலைகளிருக்கின்றனவே, ஆனால் அவற்றை ஒழுங்காகப் பயன்படுத்த வில்லையே யென்ற குறையும் எழத்தான் செய்தது. இனியாவது வெளி நாட்டினரைக் கவர முயற்சிகள் செய்வது அவசியம் என்ற எண்ணமும் உள்ளத்தில் எழுந்தது.



காணுமிடமெல்லாம் நீர் நிறைந்த ஏரிகள் ; அவைகளில் படகுகளில் செல்லும் எழில் தோற்றங்கள்; மரம் செறிந்த மலைத் தொடர்கள் ; அவைகளில் தேன் சிந்தும் காட்சிகளும் தெரிந்தன. எழுத்தறியா மூடனையும் ஏடெடுத்துக் கவிதை எழுதத் தூண்டும் எழில் மிக்க இயற்கைக் கோலங்கள் எட்டுத் திக்கும். அந்தக் காட்சி மலர்களில் படுத்து கவிதைத் தேன் உண்ண மனவண்டு துடித்தது.. கண்பாயும் இடமெல்லாம் கால் வலிக்க நடக்க மாட்டோமா என்று இதயம் ஏங்கிற்று.

ஆனால், நான் ஒரு மாநிலத்தின் முதலமைச்சனாயிற்றே.... உள்ளத்து ஏக்கங்களை யெல்லாம் அடக்கி வைக்க வேண்டுமே.... மற்றவர்களைப் போல் தன்னிச்சையாக யாவற்றையும் செய்ய முடியாத சூழ்நிலையின் கைதி தானே முதலமைச்சர் பதவி எனக் கூட எண்ணினேன்.

10-45-க்கு ''குளோபஸ்'' என்று கூறப்படும் மிகப் பெரிய சிறப்பங்காடியைச் சுற்றிப்

பார்த்தோம். உணவுப் பொருள்கள் முதல் மக்களுக்குத் தேவையான எல்லா வகையான பொருள்களையும் அங்கே விற்றார்கள். நாம் நடத்துகின்ற கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளும் அந்த அளவுக்கு வளர வேண்டும் என்ற அவா என் நெஞ்சைப் பற்றிக்கொண்டது.

சுவிஸ் நாட்டில் என்னை மிகவும் கவர்ந்தது, அதன் கூட்டாட்சி முறைதான். இருபத்து மூன்று மாநிலங்களைக் கொண்ட அரசு அது. தனி மனிதருக்கு அங்கே உள்ள உரிமைகள் தரணியில் வேறெங்கும் இல்லை எனலாம். மாநிலங்களுக்கு அங்கே உள்ள அதிகாரங்களும் தரப்படும் மதிப்பும் தனித்தன்மை வாய்ந்தனவாகும். இவற்றால் அந்நாட்டின் ஒற்றுமை துளியும் பாதிக்கப்படவில்லை.

செப்பும் மொழிகள் நான்கு எனினும் சிந்தனை ஒன்றுடையோராய், செகத்தினில் எந்தச் சக்தியாலும் அழித்திட இயலாத கூட்டுணர்வு மிக்கவராய் சுவிஸ் மக்கள் விளங்குகின்றனர்.

வெளி நாட்டு உறவு, தேசியப் பாதுகாப்பு, சுங்கம், அஞ்சல், இரயில்வே போக்கு வரத்து போன்றவை தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் 'கன்டோன்கள்' எனப்படும் மாநிலங்களே பெற்றிருக்கின்றன. மாநில நிலையிலும் இந்த அதிகாரங்கள் மேலும் பரவலாக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்கு ஒரு முறை மக்கள் அனைவரையும் கூட்டி நேரடியாக முடிவுகள் எடுக்கின்ற முறையை இன்னும் மூன்று 'கன்டோன்கள்' கடைப்பிடித்து வருகின்றன.

ஒவ்வொரு கன்டோனும் மத்தியில் உள்ள மாநிலங்கள் அவைக்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில் மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தேசிய அவை ஒன்றும் உண்டு. இவை இரண்டும் இணைந்ததே கூட்டுப் பேரவையாகும். இந்த அவை ஏழு பேரைக் கொண்ட கூட்டாட்சி நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இந்தக் குழுதான் மத்தியில் ஆட்சியை நடத்துகிறது. ஆம்! தலைமையமைச்சர் என்றோ, குடியரசுத் தலைவர் என்றோ, எவருமற்ற குடியரசுக் கூட்டாட்சி ஒன்று உலகில் உண்டென்றால், அது சுவிட்சர்லாந்து நாட்டில்தான்.

நாடாளுமன்றங்களும், நிர்வாக அமைப்புகளும், நீதி மன்றங்களும் கன்டோன்கள் ஆட்சியின்கீழ் சக்தியுடன் விளங்குவதால் மத்திய அரசின் கடமைகளும் பொறுப்புகளும் எளிதாக்கப்பட்டு விட்டன.

இப்படி உதிரிகளாக மாநிலங்கள் வாழ்ந்து வந்தால் மத்தியில் உறுதியான ஆட்சி ஏற்படாதே! தேசப் பாதுகாப்பிற்கு என்ன செய்வது? என்று தயங்குவோருக்கும் சுவிட்சர்லாந்து இணையற்ற பாடத்தைப் போதிக்கிறது. இருபது வயது வந்த தகுதிமிக்க இளைஞர்கள் படைப் பயிற்சிக்குக் கட்டாயமாக அழைக்கப்படுகின்றனர். சில கிழமைகள் தீவிரப் பயிற்சி பெற்று இல்லம் திரும்புகின்றனர். பின்னர் ஆண்டுதோறும் அவர்கள் சில நாட்கள் படைக்கு வந்து புதிய போர் முறைகளைக் கற்றுப் பணியாற்ற வேண்டும். துப்பாக்கியும் வெடிமருந்துகளும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. அவற்றை அவர்கள் வீடுகளிலேயே வைத்திருக்க வேண்டும். நாட்டின் எல்லைகளைக் காக்கும் காலம் நேரிட்டால் அனைவரும் எழுபத்திரண்டு மணி நேரத்தில் போருக்குத் தயாராக வேண்டும். இவ்வாறு, தயாரிக்கப்பட்ட 10 இலட்சம் இளைஞர்கள் இருக்கின்றனர் இன்றைய சுவிட்சர்லாந்தில். இதனால், போர் வந்தால், "எவனோ போராடிக் கொண்டிருக்கிறான் எல்லையில், நாம் விலையைச் சற்று ஏற்றி விற்போம்" என்ற துரோக சிந்தை சிறிதும் இல்லை அங்கு. பாதுகாப்புக்கு ஆகின்ற செலவும் குறைவு. பலனும் பெரிது. ஒரு சிறிய நாடு தன்னைக் காத்துக் கொள்ள இவ்வளவு சிறந்த வழியைக் கடைப்பிடிக்கும்போது நாம் ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் பாதுகாப்புக்காகச் செலவழிக்கிறோமே; அந்த நாட்டின் முறையை மற்ற நாடுகளும் பின்பற்றினால் என்ன என்ற ஒரு கேள்வி என் மனத்தில் எழுந்தது.

1848-ம் ஆண்டு கண்ட அரசியலமைப்பைத் திருத்துகின்ற வாய்ப்பு இதுவரையில் ஏற்படவில்லை சுவிஸ் நாட்டு மக்களுக்கு. தீட்டுகின்றபொழுதே திட்டம் செவ்வையாக இருந்து விட்டால் திருத்துகின்ற அவசியம் எதற்கு?

சுவிட்சர்லாந்துக் குடிமகன் முகத்தில் நிம்மதியும் களிப்பும் நிலவக் கண்டேன். ஐம்பதாயிரம் குடிமக்கள் கூடினால் ஒரு சட்டத் திருத்தம் தேவையென்று






சூரிக் விமான நிலையத்தில் முதல்வர்

அரசை வற்புறுத்தலாம். பிரதிநிதி என்று இடையே ஒருவர் அவர்களுக்குத் தேவையில்லை. முப்பதாயிரம் பேர் சேர்ந்தால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தைப் பொதுமக்கள் வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்று கோரலாம். அரசினரும் சிக்கல்மிக்க பிரச்னைகள் சிறியதாயினும் சரி, பெரியதாயினும் சரி, பொதுமக்களின் விருப்பத்தினை நேரடியாகக் காண வாக்கெடுப்பு நடத்துகின்றனர். ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் சுவிட்சர்லாந்து அங்கம் வகிக்கத் தேவையில்லை என்ற கருத்தும் இத்தகைய வாக்கெடுப்பு மூலமாகத்தான் அறியப்பட்டது.

அங்கு நம் நாட்டைச் சேர்ந்த நண்பர் ஒருவர் மத்திய உணவிற்காக எங்களை விருந்திற்கு அழைத்திருந்தார் அவர் வீட்டிற்கு. வண்ணத் தொலைக் காட்சியில் ஐந்நூறு மைல்களுக்கும் அப்பால் உள்ள இலண்டன் மாநகரில் நடந்து கொண்டிருந்த விம்பிள்டன் பந்தயத்தை டெலிவிஷன் மூலம் கண்டு களித்தோம். விஞ்ஞானத்தில் மிகவும் விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது சுவிட்சர்லாந்து. ஆனால் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையே இன்னும் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள்—விரும்புகிறார்கள்.

நாடு முழுவதும் சிறு பட்டணங்களாகவும் கிராமங்களாகவுமே இருக்கின்றன. விஞ்ஞான வளர்ச்சியால் உண்டாகும் பெரும் நகரங்களை சுவிட்சர்லாந்தில் காணமுடியாது. நாங்கள் தங்கியிருந்த சூரிக் நகரம் தான் அந்நாட்டின் மிகப் பெரிய நகரம் என்று சொன்னார்கள். அதன் மக்கள் தொகை ஏறக்குறைய ஆறு இலட்சம். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் நகரங்கள் மொத்தம் ஆறுதானம்.

நாங்கள் தங்கியிருந்த "அம்பாசிடர் ஹோட்டல்" பகுதியின் அருகிலிருந்த ஏரி ஒன்றைச் சுற்றிப் பார்த்தோம். அதில் மிதந்த சிறு படகுகளும், கப்பல் போன்ற பெரிய உல்லாசப் படகும் காண வேண்டிய காட்சிகளாகும். ஆல்ப்ஸ் மலையின் பனிமூடிய சிகரங்கள் ஆதவனின் அந்திக் கதிர்கள் பட்டுத் தங்கப் பாளங்களென மின்னிக் கொண்ருந்த மாலை நேரம்.

கானல்வரியோ ?

கவிதைத் தேனூற்றோ?

'அழகின் சிரிப்பு' தானோ?

நெஞ்சை அள்ளுகின்ற 'குற்றாலக் குறவஞ்சியோ'?

'முத்தொள்ளாயிரம்' தரும் முத்துநிகர் காட்சிகளோ? என ஏரியின் அழகும் அதனைச் சுற்றி அமைந்திருந்த நகரின் வனப்பும், தமிழ் இலக்கியத்தில் நாம் காணுகின்ற வர்ணனைகளை உயிரோவியங்களாக வடித்துத் தந்தன.

சுவிட்சர்லாந்தின் நிலப்பரப்பளவு பழைய திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்தைவிடச் சற்று அதிகம். அறுபது இலட்சம் பேர் அங்கு வாழ்கின்றனர். அவர்களுக்காக ஒன்பது பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. நாலாயிரம் அஞ்சல் அலுவலகங்கள் பணிபுரிகின்றன. ஆயிரத்து அறுநூறு வங்கிகள் அவர்களின் தேவையைக் கவனிக்கின்றன.

இவ்வசதிகள்அனைத்தும் பெற்று மகிழ்ச்சியோடு நம் நாட்டு மக்கள் வாழும் நன்னாள் என்று வருமோ என்ற எண்ணம் என் மனத்திலே எழுந்தது.

ஏழுபேருக்கு ஒரு கார் இருக்கிறது சுவிட்சர்லாந்தில், ஆனால், மக்கள் சைக்கிள்களையும் விரும்பி ஓட்டுகின்றனர். சைக்கிளில் செல்வோரின் வசதிக்காக, சைக்கிள்களுக்காக இரயிலில் கூட ஒரு பெட்டி ஒதுக்கப்படுவதாகச் சொன்னார்கள்.

சுவிஸ் நாட்டின் இயற்கை எழில், பொருளாதார வளம், அரசியல் அமைப்பு இவைகளைப் பார்த்த வண்ணம் எங்களது பயணத்தின் நான்காவது நாள் முடிவுற்றது.

(தொடரும்)




உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், வருவாய் பெருகிடவும் இன்றைய தமிழ் நாடு அரசு செய்துள்ள நன்மைகள் சிலவற்றைச் சென்ற இதழில் விளக்கியிருந்தோம். தமிழ் நாடு அரசு, உழவர் பெருமக்களின் நலனுக்காக என்ன செய்து விட்டது என்று கேட்பவர்களின் வாயை அடைத்திடவும், பொதுமக்களும், உழவர் பெருமக்களும் தெளிவுபெறவும் இந்த இதழில் மேலும் சில நன்மைகளையும், புள்ளி விவரங்களையும் அள்ளித் தந்துள்ளோம்!

**1 உணவுப் பற்றுக்குறையை அகற்றி, தன்னிறைவு பெற வைத்த அரசு இது!**

இன்றைய தமிழ்நாடு அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, தமிழ் நாடெங்கும் உணவுப் பற்றுக்குறை நிலவியிருந்தது. அன்று அரிசி கிடைக்காமல் மக்கள் பட்ட தொல்லை ஏராளம்! ஏராளம்! அதிலும் குறிப்பாகச் சென்னைநகர மக்கள் அரிசிக்காகப் பட்ட பாட்டை இன்று நினைத்தாலும் நெஞ்சம் பதைக்கிறது. உதயசூரியன் உதிப்பதற்கு முன்பே, அரிசிக் கடைகளின் முன்பு வரிசை வரிசையாக நின்ற பொதுமக்களை— பட்டினிப் பட்டாளங்களை— கையிலே ஒரு குழந்தையைப் பிடித்துக்கொண்டு, இடுப்பிலே ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு, வயிற்றிலே ஒருகுழந்தையைச் சுமந்து கொண்டு அரிசிக்காகக் காத்து நின்ற தாய்மார்களை நினைத்துப்பார்க்கும் போதெல்லாம் இரக்கமுள்ளவர்களின் கண்களில் நீர் சுரக்கும்! பலர், அதிகாலை முதல் இரவு நெடுநேரம் வரை அரிசிக்கடைகளின் முன்பு அரிசி வரும், வரும், என்று எண்ணிக் கால்கடுக்க நின்ற காட்சி இன்னும் நம் நெஞ்சைவிட்டு அகலவில்லை.

ஆனால் இன்று எங்கு பார்த்தாலும் தேவையான அளவு அரிசி கிடைக்கிறது என்றால் என்ன காரணம் ?

20 ஆண்டுக்காலத்தில் சாதிக்க முடியாததை, 3 ஆண்டுகளில் இன்றைய அரசு சாதிக்க முடிந்தது எவ்வாறு ?

இந்த நிலை ஏற்படுவதற்கு இன்றைய அரசின் திட்டமிட்ட செயல்கள் தான் காரணம் என்று சொன்னால் மிகையல்ல! அப்படி என்ன புதிய திட்டங்களை இன்றைய அரசு செயல் படுத்தியுள்ளது என்று சிலர் கேட்கலாம். புதிய திட்டமோ பழைய திட்டமோ எதுவாயினும் சரி, அதைத் திறம்படச் செயல் படுத்தி வருகிறது இன்றைய அரசு! அதற்கோர் எடுத்துக்காட்டு இதோ!

இன்றைய அரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழிவகைகளை ஆராய்ந்து கூறுமாறு அன்றைய உணவு உற்பத்தி ஆணையாளராக இருந்த—இன்றைய தலைமைச் செயலாளராக உள்ள-திரு. ராயப்பா அவர்களை தமிழ்நாடு அரசு பணித்தது. அவர் கொடுத்த அறிக்கைகளை நன்கு ஆராய்ந்து பார்த்தது தமிழ்நாடு அரசு.

உணவு உற்பத்தியைக் குறுகிய காலத்தில் பெருக்குவதற்குள்ள சாதனங்களுள் முதன்மையானது உயர்விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டமே (High Yielding Varieties Programme) என்பதை உணர்ந்த இன்றைய அரசு, உயர்விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. இதன் காரணமாக உயர்விளைச்சல் தானிய வகைகளின் பரப்பு, ஆண்டுக்கு ஆண்டு கூடி வருகிறது.

உயர் விளைச்சல் தானிய வகைகள் 1966-67 ஆம் ஆண்டில் 5,27,402 ஏக்கரில் மட்டுமே

பயிரிடப்பட்டன. ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இன்றைய அரசு உழவர் பெருமக்களுக்கு அளித்த ஊக்கத்தின் காரணமாகவும், உதவிகளின் பயனாகவும் 1967–68 ஆம் ஆண்டில் 12,79,559 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் தானிய வகைகள் பயிரிடப் பட்டன. இது 1966–67 ஆம் ஆண்டின் சாதனையைவிட $1\frac{1}{2}$ மடங்கு அதிகமாகும். 1968–69-ஆம் ஆண்டில் 17,63,664 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் தானிய வகைகள் பயிரிடப்பட் டன. இது 1966–67 ஆம் ஆண் டின் சாதனையைவிட 2 மடங் கிற்கு மேலும் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் 1969–70-ஆம் ஆண்டில் மிகவும் கடுமையான வறட்சி நிலவியது. அந்நிலையி லும் இன்றைய அரசு 1969–70-ஆம் ஆண்டில் 23 லட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளையும், 1·75 லட் சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் சிறு தானிய வகைகளையும் பயிரிடத் திட்டமிட்டது.

''நெல் பயிரிட்டால் கட்டாயக் கொள்முதல் செய்து விடுவார் கள்; நெல் பயிரிடுவதால் இலா பம் இல்லை; எனவே கரும்பு பயி ரிடுங்கள்'' என்று சிலர் கூக்குர லிட்டு வந்தனர்.

வறட்சி வாட்டிய போதிலும், நெல் பயிரிட வேண்டாம் என்று சில கொடியவர்கள் கூக்குர லிட்ட போதிலும் 1969–70-ஆம் ஆண்டில் 28,21,421 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல்வகைகளையும், 2,25,350 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் சிறுதானிய வகைகளையும் பயிரிட முடிந்துள்ளது.

'உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளுள் அதிக மகசூல் அளிக்கும் ஐ.ஆர்.8 நெல்லை ஏழை உழவர்களும் பயிரிட ஆரம்பித்தால், அவர்களும் பணக்காரர்களாகி விடுவார்கள்; அதனால், பழைய பணக்காரர் களுக்கு மதிப்புப் போய்விடும்' என்ற எண்ணத்தில் ஐ.ஆர். 8 நெல்லை உழவர்கள் பயிரிடுவ தைத் தடுக்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டு 'ஐ. ஆர். 8 நெல் பயிரிடச் செலவு அதிகம்; அதிகம் செலவு செய் தாலும் அதற்கேற்ப மகசூல் கிடைப்பது நிச்சயமில்லை' என்று ஒரு பத்திரிகை ஆசிரியர், தம் பத்திரிகையில் பத்தி பத்தியாகத் தொடர்ந்து எழுதிப் பார்த்தார்.

அப்படியிருந்தும், சென்ற ஆண்டில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஐ.ஆர். 8 நெல் பயிரிடும் தீவிர திட்டத்தின் கீழ் (I. R. 8. Crash Programme) 6·25 லட்சம் ஏக்கரில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது. இது உண்மையிலேயே தமிழ்நாட்டு வேளாண்மையில் வரலாறு காணாத சாதனையாகும்! சென்ற ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 9,77,655 ஏக்கரில் ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்யப்பட்டது.

இத்திட்டம் அளித்த வெற்றி யினால் கிடைத்த ஆர்வம், இத் திட்டத்தை மேலும் பெரும் பரப்பில் செயல்படுத்திட முடி யும் என்ற நம்பிக்கையை உரு வாக்கியது. எனவே, இந்த ஆண்டில் (1970–71) 37·50 லட் சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளையும் 2·50 லட்சம் ஏக்கரில் உயர் விளைச் சல் தரும் சிறுதானிய வகை களையும் பயிரிடத் திட்டமிட்டது அரசு. இந்த இலக்கில் 28—11—1970 வரை ஏற்பட் டுள்ள சாதனை பின்வருமாறு உள்ளது.

| | (லட்சம் ஏக்கர்.) |
|---|---|
| உயர் விளைச்சல் தரும் நெல் வகைகள். | 32·29 |
| உயர் விளைச்சல் தரும் சிறு தானியங்கள். | 2·01 |

மானாவாரி நிலங்களில் எச்.பி. 3 கம்பு பயிரிடும் திட்டத்தின் கீழ் 1·5 லட்சம் ஏக்கர் இலக்கு நிர்ண யிக்கப் பட்டதற்கு, 28–11–70 வரை 1·26 லட்சம் ஏக்கரில் எச். பி. 3 கம்பு பயிரிடப்பட்டுள்ளது. அடுத்துவரும் மாதங்களில் மீதி யுள்ள இலக்கை அடைவதுடன், மேலும் அதிகப் பரப்பில் உயர் விளைச்சல் தரும் தானியவகை களைப் பயிரிட ஆவன செய்து வருகிறது இன்றைய தமிழ்நாடு அரசு.

உயர் விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டத்திற்கு அடுத்த படியாக இன்றைய அரசால் முக்கியத்துவம் அளிக்கப்படும் திட்டங்கள் இருபோக சாகுபடித் திட்டமும், பல பயிர் சாகுபடித் திட்டமும் ஆகும். இத்திட்டங் களிலும், மாற்றாரும் வியக்கும் வண்ணம் சாதனைகளை ஏற்படுத் தியுள்ளது தமிழ்நாடு அரசு.

''செய்வன திருந்த செய்'' என்பது போல, தமிழ்நாடு அரசு ஒவ்வொரு திட்டத்திலும்ஆழ்ந்த கவனம் செலுத்தித் திறம்படச் செயல்படுத்தி வருவதனாலேயே தமிழ்நாட்டின் உணவு உற் பத்தி ஆண்டுதோறும் பெருகி வருகிறது.

தமிழ்நாட்டில் 1966–67-ல் உற்பத்தியான உணவு தானியங் களின் மொத்த அளவு 57·88 லட்சம் டன்களேயாகும். ஆனால் சென்ற ஆண்டில்-வறட்சி வாட் டிய ஆண்டில்-உற்பத்தியான உணவு தானியங்களின் மொத்த அளவு 63 லட்சம் டன்கள்.

மூன்றே ஆண்டுக் காலத்தில் இவ்வாறு உணவு உற்பத்தி யைப் பெருக்கமுடிந்ததனாலேயே தமிழ்நாடு உணவுத் தேவையில் தன்னிறைவு பெற்றுவிட்டது! அது மட்டுமா? தமிழ்நாட்டில் கட்டாயக் கொள்முதல் நிறுத் தப்பட்டுவிட்டது! உணவுக் கட் டுப்பாடு அகற்றப்பட்டு விட் டது! அண்டை மாநிலத்திற்கு அரிசி ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகியுள்ளது! பொது ஏலத் தில் அரிசியை விற்பனை செய்யும் நிலைமை மலர்ந்துள்ளது. இந் நிலை தமிழ்நாடு அரசின் செயல் திறனையும், உழவர் பெருமக்கள் தமிழ்நாடு அரசுக்கு அளித்து வரும் ஒத்துழைப்பையும் அல்லவா பறை சாற்றுகின்றன?

**2. பயிர்ப் பாதுகாப்பு செய்து உழ வர்களுக்கு உதவி செய்யும் முன் னோடி அரசு இது.**

உழுது, பரம்படித்து, உர மிட்டு, நாற்று நட்டு, தண்ணீர் பாய்ச்சி, களையெடுத்து விட் டால் மட்டும் பயிர் விளைந்து விடுமா? விளையாது! பூச்சிகள், நோய்கள், விலங்குகள் ஆகிய வற்றின் தாக்குதலில் இருந்தும் பயிர்களைக் காப்பாற்றினால் தான் பயிர் விளையும்! எனவேதான், இன்றைக்கு ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த திருவள் ளுவர்,

''ஏரினும் நன்றால் எருவிடுதல்
கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு''

என்று பயிர்ப் பாதுகாப்பின் சிறப்பினை வலியுறுத்தியுள்ளார்.

இக்கருத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த இன்றைய அரசு, பயிர்ப்பாதுகாப்புப் பணிகளில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. உழவர் பெருமக்களுக்குத் தேவையான பூச்சி, பூஞ்சாள மருந்துகளைச் சலுகை விலையில் கொடுப்பதுடன், தெளிப்பான் (Sprayers) தூவான் (Dusters) ஆகிய கருவிகளையும் உழவர் பெருமக்களுக்குக் குறைந்த விலையில் வழங்குகின்றது. விலை கொடுத்து வாங்க இயலாத ஏழை உழவர்களின் நன்மையைக் கருதி, மேற்படி கருவிகளை அரசாங்கச் செலவில் வாங்கி, வேளாண்மை அலுவலகங்களில் இருப்பு வைத்துத், தேவையானவர்களுக்குத் தேவையான பொழுது வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது.

குறுகிய காலத்தில் நிறைந்த பரப்பில் மருந்துதெளித்து, பூச்சி, நோய் ஆகியவைகளைக் கட்டுப்படுத்த வானவெளி மருந்துத் தெளிப்பிலும் (Aerial Spraying) இன்றைய தமிழ்நாடு அரசு பேரார்வம் காட்டி வருகிறது. 1966-67-ஆம் ஆண்டில் 28,227 ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய அரசு 1967-68-ஆம் ஆண்டில் 2,00,265 ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளித்தது; அத்துடன் அவ்வாண்டில் முதன் முதலாகப் பருத்திக்கும் வானவெளி மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் முதன் முதலாக 1968-69-ஆம் ஆண்டில், இன்றைய அரசின் முயற்சியால் ஹெலிகாப்டர் விமானம் மூலம் நெல் வயல்களில் மருந்து தெளிக்கப்பட்டது. 1968-69ஆம் ஆண்டில் இன்றைய அரசின் முயற்சியால் தமிழ் நாட்டில் 2,89,640 ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. 1969-70ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக 1,82,000 ஏக்கரில் மட்டுமே வானவெளி மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

வானவெளி மருந்துத் தெளிப்பு மிகவும் பயனுள்ளது என்று கூறிப் பலரும் வரவேற்றதால், இந்த ஆண்டில் 10 லட்சம் ஏக்கரில் வானவெளி மருந்துத் தெளிப்பு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. ஹெலிகாப்டர் விமானங்கள் தேவையான காலத்தில் கிடைக்காத நிலைமையிலும், தமிழ்நாடு அரசு இது வரை 4,23,823 ஏக்கரில் வானவெளி மருந்துத் தெளிப்பு செய்து உழவர் பெருமக்களுக்கு உதவியுள்ளது.

அண்மையில் வானவெளி மருந்துத் தெளிப்புப் பற்றிய ஆராய்ச்சிப் பள்ளிக்கூடம் (Aerial Spraying School) ஒன்றை, கோவை வேளாண்மைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது. இது தமிழ்நாடு அரசின் ஒருபுதிய முயற்சியாகும்!



**3. தரமான விதைகள் கிடைக்க வழி செய்த அரசு இது!**

தரமான விதைகளையே உழவர் பெருமக்களுக்கு வழங்க வேண்டுமென்பதில் ஆர்வம் கொண்ட இன்றைய தமிழ்நாடு அரசு, விதைச் சட்டத்தைச் சென்ற ஆண்டு முதல் அமுல் செய்து வருகிறது. இந்தச் சட்டத்தின்படி பொறுக்கு விதைகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

விதை பக்குவப்படுத்தும் நிலையங்களை (Seed Processing Unit) தமிழ்நாட்டில் ஏற்படுத்தியதும் இன்றைய அரசேயாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள 'நவலாக்' மாநிலப் பண்ணையில் சிறுதானிய விதை பக்குவப்படுத்தும் நிலையத்தைத் துவக்கிய இன்றைய அரசு, அடுத்து குடுமியான் மலையிலுள்ள 'அண்ணா பண்ணை'யில் மற்றுமொரு சிறு தானிய விதை பக்குவப்படுத்தும் நிலையத்தையும், தஞ்சை மாவட்டத்திலுள்ள சாக்கோட்டை மாநில விதைப் பண்ணையில், நெல் விதை பக்குவப்படுத்தும் நிலையத்தையும் இவ்வாண்டில் ஏற்படுத்த ஆவன செய்துவருகிறது. தற்பொழுது விதைப் பரிசோதனை நிலையம் (Seed Testing Laboratory) ஒன்று கோவை வேளாண்மைக் கல்லூரியில் உள்ளது. மற்றும் ஒரு, விதைப் பரிசோதனை நிலையத்தை மதுரையில் அமைக்க இன்றைய அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தரமான விதைகளை உற்பத்தி செய்து, உழவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக மிகப் பெரிய மாநிலப்பண்ணையை (State Agricultural Farm) அமைக்க முடிவு செய்து, அதன்பின் குடுமியான் மலையைச் சார்ந்த காடுகளைத் திருத்தி 3,000 ஏக்கர் பண்ணையை நிறுவியதும் இந்த அரசே! தற்பொழுது 1,000 ஏக்கர் காடுகளை வெட்டித், திருத்திப் பண்ணை நடத்தப்பட்டு வருவதுடன், நல்ல லாபத்துடனும் இயங்கிவருகிறது. மற்ற மாநில அரசுகள் செய்யாத பணியில் இதுவும் ஒன்று!

தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டில், 'கருணை' நெல், 'பாரதி' பருத்தி போன்ற 14 புதிய ரகங்களை வெளியிட்டது. சென்ற மாதக் கடைசியில் 9 புதிய ரகங்களைத் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. ஆக ஓராண்டுக் காலத்தில் 23 புதிய ரகங்களை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனைக்கு ஈடும் இல்லை! இணையும் இல்லை! இந்தப்புதிய ரகங்களினால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகி, வாழ்வு வளம் பெறும் என்பது திண்ணம்!

**4. உழவர்களுக்குத் தேவையான இரசாயன உரங்களை வழங்குவதிலும் தமிழ்நாடு அரசு முன்னால் நிற்கிறது.**

தமிழ்நாடு அரசு உழவர்களுக்குத் தேவையான உரங்களைத் தேவையான பொழுது கொடுத்து உதவுகிறது என்பதைப் பலர் இன்று கூறுகின்றனர். ஆனால் தமிழ்நாடு அரசே மற்ற தென்

மாநில அரசுகளைவிட அதிக அளவு இரசாயன உரங்களை வழங்கி வருகிறது என்பது பலர் அறிந்திருக்க முடியாது. இதை 1968-69-ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன. அப்புள்ளி விவரங்கள் இதோ;

**1968-69-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரங்கள்**

தழைச்சத்து உரங்கள் (மெட்ரிக் டன்னில்).

| | |
|---|---|
| கேரளா | 40,500 |
| மைசூர் | 1,22,900 |
| ஆந்திரா | 1,23,500 |
| தமிழ்நாடு | 1,57,700 |

மணிச்சத்து உரங்கள் (மெட்ரிக் டன்னில்)

| | |
|---|---|
| கேரளா | 20,300 |
| மைசூர் | 35,000 |
| ஆந்திரா | 35,600 |
| தமிழ்நாடு | 68,200 |

சாம்பல் சத்து உரங்கள் (மெட்ரிக் டன்னில்).

| | |
|---|---|
| கேரளா | 5,600 |
| மைசூர் | 21,400 |
| ஆந்திரா | 33,300 |
| தமிழ்நாடு | 58,800 |

இவ்வாறு இரசாயன உரங்களைப் பெருமளவில் இன்றைய அரசு, உழவர் பெருமக்களின் நன்மையைக் கருதி வழங்கி வருவதாலேயே, சராசரியாக ஒரு ஹெக்டர் நிலத்திற்கு இடப்படும் உரச்சத்துக்கள் மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது. தமிழ் நாட்டில் ஒரு ஹெக்டருக்குச் சராசரியாக 18·01 கிலோ உரச் சத்துகள் இடப்படுகின்றன. ஆனால் மைசூரில் 10·81 கிலோவும், ஆந்திராவில் 10·17 கிலோவும் தான் இடப்படுகிறது. இந்தியாவின் சராசரி, 9·63 கிலோ என்பதை அறியும்போது, தமிழ்நாடு இரசாயன உர உபயோகத்தில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பது புரிகிறதல்லவா! 1966-67-ல் 85,000 மெட்ரிக் டன் தழைச் சத்து உரமே உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் 1969-70-ல் 1,48,000 மெட்ரிக் டன் தழைச்சத்து உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இச்செய்தி, உழவர் பெருமக்களுக்கு இரசாயன உரத்தின்மேல் ஏற்பட்டுள்ள அளவற்ற நம்பிக்கையை அல்லவா காட்டுகிறது! இதற்குக் காரணம் இன்றைய தமிழ் நாடு அரசே என்று சொல்லிடத் தேவையில்லை.

**5. சாகுபடிச் செலவுக்குத் தேவையான தொகையைக் கடனாகக் கொடுத்து உதவிடும் உழவர் அரசு இது.**

அரசாங்கம் எத்தனை வசதிகளை அளித்தாலும் சாகுபடிச் செலவுக்குக் கடன் அளிக்கப்படாவிட்டால் பெரும்பாலான உழவர் பெருமக்கள் சாகுபடி செய்யமுடியாத நிலையிலேயே இருப்பர் என்பதை உணர்ந்த இன்றைய அரசு, உழவர் பெருமக்களுக்குக் காலத்தில் கடன் கிடைக்க வழிசெய்து வருகிறது. 'விதைப்பதற்குக் கடன் கேட்டால், அறுப்பதற்குத்தான் கடன் கிடைக்கும்' என்று முன்பு இருந்த நிலையை மாற்றி, கூடுமானவரை விரைவில் கடன் கிடைத்திடச் செய்தது, இந்த அரசேயாகும்.

தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் (Intensive Manuring Scheme) அதிக நிதியை ஒதுக்கியுள்ளது. இந்த ஆண்டிற்கு மட்டும் 6·26 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறை மூலம் 1966-67-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாகவும், நீண்ட காலக் கடனாகவும் வழங்கிய தொகை 31·44 கோடி ரூபாய். ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாண்டிலேயே (1967-68) இன்றைய அரசு குறுகிய காலக் கடனாகவும் நீண்ட காலக் கடனாகவும் வழங்கிய தொகை 37·26 கோடி ரூபாய். இவ்வகையில் 1968-69-ல் 44·12 கோடி ரூபாயும், 1969-70ல் 42·77 கோடி ரூபாயும் வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டில் (1970-71) கூட்டுறவுக் கடன்களாக மொத்தம் 67·00 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, நில அடமான வங்கி என்றிருந்த பெயரை நிலவள வங்கி என்று ஆக்கியது இன்றைய அரசு. பெயரை மட்டும் மாற்றவில்லை; அங்கு கடன் தரும் கொள்கையையும் மாற்றியது இன்றைய அரசு. நில அடமான வங்கி மூலம் 1966-67-ல் அளிக்கப்பட்ட நீண்ட காலக் கடன் தொகை ரூபாய் 4·27 கோடி. இன்றைய அரசு ஆட்சிக்கு வந்த முதலாண்டிலேயே (1967-68) நீண்ட காலக் கடனாக வழங்கிய தொகை ரூபாய் 7 கோடி. 1968-69-ல் இவ்வகையில் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 14·67 கோடி. இந்த ஆண்டில் நிலவள வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடனாகக் கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் தொகை ரூபாய் 30 கோடி.

இப்படிப் பல்வேறு திட்டங்களைத் திறம்படச்செயல்படுத்தும் இன்றைய தமிழ்நாடு அரசுக்கு, முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டியது ஒவ்வொரு உழவர் பெருமகனின் கடமையல்லவா?




சோவியத் நாட்டில் வட காகஸஸ் பகுதியிலுள்ள கிஸ்லோவோட்ஸ் என்ற சுற்றுலாத்தலத்தில் கார்கள் ஓட்டுவது தடை செய்யப் பட்டுள்ளது. அந்நகரின் எல்லைக்குள்ளே பயணம் செய்யப் போக்குவரத்துப் பேருந்துகளையோ அல்லது வாடகை ஊர்திகளையோ தான் பயன்படுத்தலாம்.

ஆயிரக்கணக்கான சோவியத் மக்கள் சுற்றுலா வரக்கூடிய இந்த நகர் சுத்தமாகவும் சுகாதாரத்துடனும் விளங்கவேண்டுமென்பதற்காகவே நகர் மன்றம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.


உள்ளூர் வாசிகளாயினும், சுற்றுப்பயணிகளாயினும், தங்களது கார்களை நகர் எல்லைக்கு வெளியே நிறுத்திவிட்டு வரவேண்டும். இதற்காகக் கார் நிறுத்துமிடங்கள் ஊருக்கு வெளியே உள்ளன.

# சுகாதார முறையிலே சாக்கடை நீரை அப்புறப்படுத்த, உடனடியாக நிறுவத்தக்க சாதனம், இதோ.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட்

## ஸெப்டிக் டாங்க்



புதை வடிகால் வசதி இல்லாத இடங்களிலே, சுகாதார முறையில் சாக்கடைக் கழிவை அப்புறப் படுத்த உதவுகிறது எவரெஸ்ட் ஸெப்டிக் டாங்குகள் (சுத்திகரிப்புத் தொட்டிகள்). கிருமிகளின் செயலால் அந்த சாக்கடைக் கழிவுகள் திரவமாகவும் ஆவியாகவும் மாற்றப்பட்டு, தேக்கக் குழிகளிலோ, பள்ளங்களிலோ விடப்படுகின்றன. தயார் நிலையிலுள்ள ஸெப்டிக் டாங்குகள் இவை, நிறுவ இலகுவானவை, சுகாதாரத் தூய்மைக்கு உறுதி தருபவை. நம் நாடெங்கும் ஏற்கெனவே உபயோகத்திலுள்ள எவரெஸ்ட் ஸெப்டிக் டாங்குகள். ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள எவரெஸ்ட் ஸ்டாக்கிஸ்டைப் பாருங்கள்.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய வினியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

**ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,**

(டர்னர் & நியூவால் க்ரூப்பின் ஒரு உறுப்பினம்)

பம்பாய் . கல்கத்தா . ஜபல்பூர் . சென்னை . நியூ டெல்லி

போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

Focus. Q.10TM



# கரிகாலன் குளிக்க





ஆறுவகை உபசாரம் உண்(டு)அ தற்கும்
அப்பாலே தரும்அதரச் சாரம் தன்னைக்
கூறுவதா அச்சாரம் என்று? பின்னல்
கொள்கின்ற வியாபாரம் எதுவோ? என்று
சேறுநிறை ஆற்றோரப் படகில் காதல்
சிரிப்பழகி கேட்கின்றாள்; ஊன்றும் போதில்
ஊறுமெச்சில் பரிமாறும் முத்தி ரைக்கோ
ஒருதிரையும் கிடையாதே! என்றான் காளை.

இரவுக்கும் அதுதரும்உத் திரவுக் கும்நான்
என்னபதில் கூறிடுவேன் நீயில் லாமல்?
நரம்புகளின் இசைவன்றோ சங்கீ தம், நம்
நால்விழியின் இசைவன்றோ காதல்? எண்சாண்
நிருவாண விடைநீஎண் சாண்கேள் விக்கு
நித்திரையாம் நீலநிறத் திரைக்குள் ஏழு
வருணத்தில் வில்எழுதும் கனவுக் காதல்
வளர்க்கவன்றோ வருகிறது மாலை-என்றான்.

பருவமுற்ற காற்றுத்தான் இசை; ஆ னால்நீ
பழஉதட்டைத் திறக்காமல் இசைவ துண்டு!
சிரிக்கின்ற அழல்தீப இரவில் காமச்
சிலிர்ப்புதரும் பெண் மயிலே! பிரியச் சேர்க்கை
புரிபவளே! மஞ்சள்பொன் மாலைப் போழ்தைப்
போதையிலே போக்குதற்குத் துணையே! இன்பத்
திரவியமே! உனைஉப்புத் தெப்பம் என்பேன்
திரையில்லா நம்மிடைநித் திரைதான் உண்டு.

விழுவதுவும் அவிழுவது மாக ஆடை
விருந்துபரி மாறுகின்ற மேடை யாக
அழுவதுவும் சிரிப்பதுவு மாக எல்லை
ஆனந்தம் காணுகையில் மயில்க ழுத்து
நிழல்காட்டும் கடல்நீரில் நீந்தும் உப்பை
நித்திரையில் சேகரிப்போம்; ஆனைக் கொம்பால்
உழமார்பு மைதானம்; மற்ற வர்பால்
ஒப்படைக்கப் படைத்ததன்றோ இவ்வு டம்பு ?



# காவேரி

நீலமணி



முகவுரைதான் தேன்முத்தம்; உதட்டு யுத்தம்.
மூடுகின்ற பழக்கதவின் சுளேவ மூக்கம்
பகல்என்றல் பிரிவினேதான்; அதனு லேநான்
பாகல்என்பேன் அதை! இரவைப் பா(கு)அல் என்பேன்!
தொகும்இரவை ஆரம்பம் செய்து வைக்கும்
தொடர்புஇது: எச்சிலினுல் எழுது கின்ற
அகநானூ றும்இதுதான். தட்டுப் பாடா ;
அல்ல; இது தான்இரவின் உதட்டுப் பாடு !

கடல்கடந்த நாடுகளே வென்று வீரக்
கதைவளர்த்த கரிகாலன், சொந்த நாட்டில்
நடைபோடும் காவேரி ஆற்றி னுக்கு
நல்முறையில் கரைபோடத் தீர்மா னித்து
படுதோல்வி அடைந்திட்ட மாற்று மன்னர்
படைஞர்களே மண்சுமக்க வைத்தான்; ஆய்தம்
எடுத்தாரே தமிழர்களே எதிர்க்க, அந்த
இழுக்கையவர் மண்சுமந்து தீர்க்க லானுர் !

தமிழ்மண்ணே விடச்சிறந்த தென்ன உண்டு
தடந்தோளர் சுமப்பதற்கு? மகுடம் சூடச்
சுமைதானே! பயனுண்டா அதனுல்? என்று
சுவைசுமக்கும் பத்தினியை மன்னன் கேட்டான்.
அமைதியற்று நாடழிக்கும் நீர்க்கா வேரி
அடங்குதற்கென் றுருவாகும் கரையைக் கண்டு
இமைக்காமல் இருந்திட்ட அழகி, மன்னன்
எஃகுமலே மார்மீது சாய லானுள்.

நெருப்புக்கு எதிர்ப்பதந்தான் தண்ணீர் என்றுன்;
நீந்துகின்ற வீதிஎன்றுன்; வயற்கு வண்டல்
தருகிறஊர் வலமென்றுன்; நீல ஓட்டம்,
சாயநெடில், என்றெல்லாம் சொன்னுன்; பன்னுள்
இருக்கின்ற உப்பில்லாப் பத்தி யத்தை
இறுதிக்குக் கொண்டுவரக் கடலே நோக்கி
விரைகின்ற தண்ணீர்க்கண் ணுடி ; பூமி
வெளிப்படுத்தும் ஒருபக்க மூச்சு-என்றுன் !



கட்டிலிலும் காதலரின் மார்பு மீதும்
காவேரிப் புனலிடத்தும் சேலை மாதர்
எட்டிக்காய் நிலவாவ தில்லை; தொட்டு
எப்போதும் ஒட்டிக்காய் நிலவே ஆவர்.
ஒட்டிக்காய் நிலவென்று சொன்னேன்?- ஊகூம்
ஒட்டிஒட்டிக் கனிகின்ற நிலவே ஆவர்.
தொட்டில்ல றந்தொடங்கிக் கனிந்து பின்னர்
தொட்டில்அறம் வளர்த்திடுவர் என்றான் மன்னன்.

பொன்னிநதி உடலெங்கும் வளம்இ ருக்கும்
பொன்மாதர் உடலெங்கும் அழகி ருக்கும்
அன்னம்போல் அவர்நடப்பார்; அரசன் ஏறும்
ஆனையைப்போல் நடப்பதிந்த ஆறும்; ஒற்றித்
தின்னும்தோ றுமினிக்கும் உதடு! மண்மேல்
தினந்தோறும் நடப்பதிந்தத் தண்ணீர் மந்தை.
கன்னிக்குக் கரை, ஒட்டிக் களிம ணாளன்
காவேரிக் குக்கரையோ களிமண் ணாளன்!

மேலைமலைப் பள்ளத்தில் பிறந்து, வண்டல்
மேவுகின்ற வயல்நாட்டில் நடந்து, உப்பும்
நீலநிற மும்சுருங்கும் அலையும் கொண்ட
நெடுங்கடலில் மூழ்குகிற இந்த ஆறு
சேலைபோல் நீண்டிருக்கும்; தோண்டு வோர்க்குத்
தெண்ணீரைத் தரஅடியில் வைத்தி ருக்கும்.
மாலைமலை சுமப்பவளே! இதுந டக்கும்
வழியெங்கும் வைக்குதடி ஈர முத்தம்.

என்உடலை உன்விழிமீன் என்றும் தீண்டும்
எதிர்நீச்சல் போடுகையில் நதிமீன் தீண்டும்.
அன்னியமாய் எவரையுமே நினைத்தி டாமல்
அணைப்பதிந்த நீர்; இங்கே அணைகட் டென்று
சொன்னாயேல் செய்திடுவேன்; இந்த ஈரத்
தொடர்கதையோ நீடிக்கும்; முதுகி னாலே
என்றுமணல் மெத்தையின்மேல் நகரும் ஆறு
இடைபோலச் சிலவிடத்தில் சிறுப்ப துண்டு!

முந்நீரைச் சந்திக்கச் செல்லும் இந்நீர்
மூத்ததல்ல; புதிதாகும் எச்சில் போல!
கன்னலைப்போல் கன்னியைப்போல் நீண்டி ருக்கும்!
காலத்தின் சரித்திரத்தைக் கண்டி ருக்கும்.
வெந்நீரில் உப்பெடுக்கும் கன்னக் கண்ணீர்
விளையாடும் காதலருக் கிதுவோ பன்னீர்.
அன்பேவா ஆடிடுவோம் ஆற்றில்; தண்ணீ
ராம்கூண்டுள் கொஞ்சுகிற கிளிகள் ஆவோம்.

பட்டுக்குள்ளே யிருப்பாய்; இல்லா விட்டால்
பழமே, என் கட்டுக்குள் ளேயி ருப்பாய்.
ஒட்டப்பந் தயம்நடத்து வாய்; பின் னால்கண்
ணோட்டப்பந் தயம்நடத்து வாய்இப் போதோ
தொட்டுக்கொண் டிருக்கின்றாய் ஆற்றுத் தண்ணீர்
தொட்டுக்கொண் டிருக்கிறது உன்னை; பூத்த
வட்டமல ரைத்தொட்டு மணக்கும் தென்றல்;
வரும்நீரோ மணக்கிறது உன்னைத் தொட்டு!

ஊர்ப்பயணம் போகின்ற ஆறு, மூச்சு
உடம்புகளைச் சுமந்துசெல்லும் கூலி இன்றி!
வேர்க்குள்ளே புகுந்துமர மேறிப் பூவாய்
விரிந்தே, தான்; பிறந்தமுகில் ஈர வானைப்
பார்த்திந்த நீர்சிரிக்கும்; மன்னன் என்னைப்
பார்த்தோநீ சிரிக்கின்றாய் கைகள் கோத்து
வேர்ப்பமென முத்தச்சர்க் கரைப்போட் டான்கா
வேரிக்குக் கரைபோட்ட கரிகால் வேந்தன்!

குழந்தைகளின் வளர்ச்சிக்குப் புரதச்சத்துக்கள் மிகவும் முக்கியமானதாகும். நம் நாட்டில் குழந்தைகள், வளர்ச்சி குன்றிப்போவதற்கும், அவர்கள் நோய்களால் பாதிக்கப்படுவதற்கும், அவர்களின் கண்பார்வை குறைவதற்கும் சத்துக் குறைவான உணவே முக்கிய காரணமாகும்.

இந்நிலையை மாற்றியமைக்க அரசினரும், அறிவியல் வல்லுநர்களும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் சென்னை இராசாசி மண்டபத்தில் பள்ளிப் பருவ வயதை அடையாத குழந்தைகளைப் பற்றிய (Pre-School Children) அதாவது ஒன்று முதல் மூன்று வயது வரையுள்ள குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பது பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் திரட்டப்பட்ட சில தகவல்களை இங்கே தருகிறோம்.

### குழந்தைகளின் சராசரி வளர்ச்சியும் எடையும்

பிறக்கும்போது எடை சுமார் 7 பவுண்டு (3.18 கிலோ) உயரம் 20 அங்குலம் (50.8 செ.மீ.).

ஒரு வயதில் எடை 21 பவுண்டு (9.53 கிலோ), உயரம் 28 அங்குலம் (71.1 செ.மீ.).

இரு வயதில் எடை 27 பவுண்டு (12.25 கிலோ), உயரம் 33 அங்குலம் (83.8 செ.மீ.).

மூன்று வயதில் எடை 31 பவுண்டு (14.06 கிலோ), உயரம் 37 அங்குலம் (94 செ.மீ.).

### குழந்தைக்குத் தரவேண்டிய உணவு

காலை 7 மணிக்கு :

பால்—1 டம்ளர்
இட்லி—1 முதல் 2 வரை
நாட்டுச் சர்க்கரை—2 தேக்கரண்டி

காலை 10 மணிக்கு :

கேழ்வரகுக் கஞ்சி $\frac{1}{2}$ கப்

நண்பகல் 12-30 மணிக்கு :

சோறு 1 அவுன்ஸ் (1 பிடி)
அவித்த மீன்—ஒரு சிறு துண்டு
சிறிது வேகவைத்த தக்காளிப்பழம் (சர்க்கரை கலந்து)—1
தயிர்—1 தேக்கரண்டி

மாலை 3-30 மணிக்கு :

பொரி கடலை உருண்டை—1
வாழைப்பழம்—பாதி
பால்—1 தம்ளர்

இரவு 7-30 மணிக்கு :

சோறு—1 அவுன்ஸ்
பருப்பும் கீரையும்—$\frac{1}{2}$ கப்
பால்—1 தம்ளர் (6 அவுன்ஸ்)

### பிற சத்துணவுகள்

குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய பிற சத்துணவுகள் ஆரஞ்சுச்சாறு, கீரைத் தண்ணீர் (அவித்த கீரையில் வடித்தது), தக்காளிச்சாறு, காரட், முளைக்கீரை முதலியன.




### புரதச் சத்துள்ள மற்றொரு உணவு

தேவை :

பொரிகடலை—2 பங்கு
சிறிய காராமணி—1 பங்கு
கைக்குத்தல் அரிசி—1 பங்கு
நாட்டுச் சர்க்கரை—2 பங்கு
ஏலக்காய்—வாசனைக்குத் தக்கபடி

தயாரிக்கும் முறை :

காராமணியையும், அரிசியையும் வறுக்கவும். பின் இதனைப்பொரிகடலையுடன் சேர்த்துஅரைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையுடன் நாட்டுச் சர்க்கரையைக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

தேவைப்படும்போது இந்த மாவில் சிறிது எடுத்து வெந்நீர் தெளித்துச் சிறு உருண்டையாகப் பிடித்துக் குழந்தைக்கு உண்ணக் கொடுக்கலாம்.

இந்த உணவு மிகுந்த புரதச் சத்துள்ளது. ஒரு அவுன்ஸ் மாவில் சுமார் 3·1 கிராம் புரதச்சத்து அடங்கியிருக்கிறது.




அண்ணா பண்ணை, 100 ஏக்கர் நிலப்பரப்பில், புதுக்கோட்டையினின்று 12 மைல் தொலைவில் அமைந்துள்ள தமிழக அரசின் மிகப் பெரிய விவசாயப் பண்ணையாகும்.

மற்ற மாநிலங்களில் உள்ளவை போல் அல்லாமல்-அரசுக்கு இலாபத்தைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பண்ணை இது. மறைந்த தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே இப்பண்ணை உருவாகத் திட்டமிடப்பட்டது. வரலாற்றுத் தொடர்பும், சிறப்புகளும் உடைய குடுமியான்மலைப் பகுதி, மற்றும் வயலோகம், புல்வயல் கிராமங்களில் அமைந்து கிடக்கின்ற, பாதுகாக்கப்பட்ட காடுகளைத் திருத்திக் கழனிகளாக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். இதனால் உணவு உற்பத்தி, விவசாயத்தொழில் துறைகளில் பின்தங்கியஅன்னவாசல் ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு வேலை வாய்ப்புகள், அரசுக்கு வருவாய்-எனப் பலநோக்குடைய தமிழக அரசின் கொள்கை நிறைவேற்றப் படுகிறது. மேலும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், "விவசாய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்படும்" என அறிவித்துள்ளார். இது இப்பகுதியை மேலும் சிறப்படையச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

அரிசிக்காக மக்கள் அவதிப்பட்டு அல்லற்பட்ட காலம் மாறி, டெல்லிக்கும், வெளி மாநிலத்துக்கும் கூட உணவுப் பொருள்கள் வழங்கத் தமிழகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மேலும் வலுவடையக் குடுமியான் மலை விவசாயப் பண்ணை உதவப் போகிறது. சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்புள்ள-இம்மலையில் 1,000 ஏக்கர் விளை நிலமாக்கப்பட்டு, அதில் 50 கிணறுகள் வெட்டப்படும். காட்டைத் திருத்திக் கழனியாக்கி நாட்டு மக்கள் வாழ்ந்திடத் தம்மையே அர்ப்பணிக்கும் தமிழ் மக்கள், குடுமியான் மலைக் காடுகளைப் பயனுடைய விளை நிலமாக்க அயராது உழைக்கின்றனர். முக்கியப் பங்கை, அண்ணாவால் உருவாக்கப்பட்ட சீரணிப் படையினரே ஆற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும், குறிப்பாகச் சீரணிப்படையினரின் சீரான பணியால்-ஏற்கனவே இருந்து தூர்ந்து போன, புல்லுபூரான் கண்மாய் புதியதாகத் தோண்டப்பட்டு, சுமார் 15 ஏக்கர் நிலம் அதனால் பயன் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், டிராக்டர்கள், துளைக் கருவிகளை இயக்கவும், நவீன முறையில் விவசாயம், மருந்து தெளிக்கும் முறை ஆகியவற்றை அறியவும் சீரணிப் படையினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. குடுமியான் மலைப் பகுதியில் புன்செய் சாகுபடிக்கான பொறுக்கு விதைகள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டுப் பிற இடங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

கால ஓட்டத்துக்குத் தக்கவாறு மனிதர்களும்-தம்மை அதனுடன் மாற்றிக் கொண்டு வாழக் கற்றுக் கொண்டுள்ளது கண்கூடு. உலகின் பல பாகங்களில் நிலச் சீரமைப்புத் திட்-



டங்கள் உருவாகி, அவை பயனளித்து வருகின்றன. தாய்லாந்தின் வட கிழக்குப் பகுதியிலும், வட பகுதி பர்மாவிலும், இரண்டாவது உலகப் போரில் பணியாற்றிய படைவீரர்களைக் கொண்டு நிலச்சீரமைப்புகள் உருவாகி உள்ளன. இன்று அவைகளைப் போலவே தமிழக அரசு தன் ஆட்சிக் காலத்தில் நிறுவியுள்ள ''குடுமியான் மலை விவசாயப் பண்ணைத்'' திட்டம் காலப் போக்கில் மற்ற நாட்டவருக்கும் உணவு உற்பத்தித் துறையில் வழி காட்டியாக அமையப் போவது உறுதி. வளம் இல்லாப் பகுதியாயினும் பகுதி மக்கள் தம் அயரா உழைப்பால், இப்பகுதியை-ஓர் சிறந்த உணவுக் களஞ்சியமாக மாற்றிக் காட்டுவதன் மூலம் நம்மவரின் மதிப்புப் பிற இடங்களில் மேலும் உயரப் போவது திண்ணம். வளம் கொழிக்கும் பொன்னிவள நதி சுமார் 30 அல்லது 40 மைல் தூரத்தில் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நீரை இப் பகுதிக்குப் பயன்படுத்தினால் பலன் பெறப்போவது உறுதி.

நீர்ப்பாசன வசதியைப் பெருக்கியதுடன் வாளாவிருந்து விடவில்லை நம் அரசு. ஆக்கப் பணிகளுக்கென்று சுமார் இரண்டு லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. 2 டிராக்டர்களும் 2 புல்டோசர்களும் மாநில விவசாயத்துறை அளித்து உதவியுள்ளது. இவை, மரங்களை அழித்து மேடு-பள்ளத்தைச் சமமாக்கும் வேலையைச் செய்கின்றன. விவசாயத் துறையினரால் துளையிடும் இயந்திரங்கள் உதவப்பட்டன. இவை பூமியைத் துளையிட்டு நீர் ஊற்றை வெளிக்கொணர உதவுகின்றன. 21 ஏக்கர் நிலத்தில் கம்பு, உளுந்து, கொள்ளு முதலியவை பயிர் செய்யப்பட்டுள்ளது. சுமார் 5 ஏக்கரில் காய்கறி பயிரிடப்பட்டு, அவை பசுமை குன்றாமல் மாலை நேரங்களில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய மக்களுக்குச் சந்தைகளில் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆகவே ஒரு பக்கத்தில் சுய தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது. மேலும் வளர்ச்சி பெறுகின்ற வேலையில் அரசும் இலாபகரமான ஒரு திட்டத்தை உருவாக்கிய முழு மன நிறைவையும் பெறும்.

உணவு உற்பத்திக்கு இன்றியமையாத தேவை எல்லாவற்றைக் காட்டிலும் மிக முக்கியமாகத் தண்ணீர்தான். குடுமியான் மலைப்பகுதி, அந்த வழியில் இயற்கையிலேயே நலம் பல பெற்றுத் திகழ்கின்றது. தமிழ்நாடு அரசும் குழாய்க் கிணறுகள் தோண்டி—தன் முழுக் கவனத்தையும் அதில் செலுத்தியதன் மூலம் அப்பகுதியின் இன்றியமையாத் தேவை நிறைவேற்றப்படுகின்றது. தற்பொழுது 20 கிணறுகள் வெட்டப்பட்டு முழுமையாக மின்சார மோட்டார்களும் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 12 கிணறுகள் முடிவடைந்து மின் இணைப்புப் பெறும் கட்டத்தில் உள்ளன. செலவுகள் ஏராளம் என்றாலும், வருங்காலப் பயனைக் கருத்தில் கொண்டால் அவை பயனுள்ள செலவுகள்தாம் என்பது விளங்கும். நீர்ப்பாசன வசதியைப் பெருக்கிவிடுவதன் மூலம், தமிழ்நாடு அரசு—அப்பகுதி மக்களின் மிகத் துன்பமான சூழலை அகற்றிவிட்டிருக்கிறது. மக்கள், தாம் ஆற்ற வேண்டிய ஆக்கப் பணிகளைப் பொறுத்தே இனி அப்பகுதியின் முன்னேற்றம் அமைந்துள்ளது.

குடுமியான் மலை பண்ணைக்குரிய இடத்தை
அண்ணா பார்வையிடுகிறார்.





மக்களும் அரசும் இணைந்தால் தான் திட்டம் நல்ல முறையில் உருவாகும் என்பதை அனைவரும் கருத்தில் கொள்வது நல்லதாகும்.

செழிப்பான பூமியில் விவசாயத்தைப் பெருக்குவது என்பது சாதாரணமான ஒன்று. ஆனால் வளம் இருந்தும் வசதி இன்மையால் மேற்கொண்டு எத்தொழிலையும் தொடர இயலாப் பகுதியான, புதுக்கோட்டைப் பகுதியில்—குடுமியான் மலைப் பகுதியை வளம் கொழிக்கும் பகுதியாக்குவதன் மூலம் தான் நம் அரசின் சாதனையை நாட்டு மக்கள் உணர வழி செய்ய முடியும். அம்முயற்சியில் பெரும் வெற்றியைத் தமிழ்நாடு பெற்று விட்டது.

குடுமியான் மலை விவசாயப் பண்ணை, திட்டமிட்டபடிச் செயல்படத் தொடங்கிவிட்டால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 லட்சத்திற்கும் மேல் இலாபம் கிடைக்கும். மேலும், வாழவழியின்றி, எந்த வேலையுமே செய்ய வகையில்லாமல் வாழும் பகுதி மக்கள் குறை தீர்க்கும் திட்டம் இத்திட்டம். மக்கள் வாழ்வே தன் கொள்கை என இயங்கும் தமிழ்நாடு அரசும் மேன்மேலும் பல திட்டங்களை உருவாக்கி, மக்கள் நலம் பெறச் செய்ய வழிகளை வகுத்துக் கொண்டே வருகிறது.


## தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இ‌லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால்அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இ‌லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.

போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1

போன்: 21448



## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath



இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும், வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9.
முத்து




அம்மா என்னுஞ் சொல் மனித இனத்தின் முதற்சொல். இச் சொல் குழந்தையினது உணர்ச்சி வெளிப்பாட்டின் ஒலியுருவம். மேலும் ' தமிழ், மாந்தரினத்தின் இயல்புப் போக்கில் எழுந்த மொழி ' என்ற உண்மைக்குச் சான்ருகத் திகழ்வது.

இயற்றமிழ் எழுந்த சிறப்பைக் குறிக்க எழுந்த பாவேந்தர் பாரதிதாசனுர்

'' அம்மாவென் றழைத்தல், காகா
எனச்சொல்லல், அஃகென் றென்றைச்
செம்மையிற் சுட்டல் என்னும்
இயற்கையின் செறிவி னுலே
இம்மாநி லத்தை யாண்ட
இயற்றமி ழேயென் னன்பே ;
சும்மாதான் சொன்னுர் உன்னை
ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே ''
— என்று பாடினுர்.

பாவேந்தர், பாட்டின் முதலில் ' அம்மா ' என்னுஞ் சொல்லினை அமைத்து ' அது முதற் சொல் ' என்பதனைக் குறிப்பில் கொள்ள வைத்தார். '' இயற்கையின் செறிவினுலே இம்மா நிலத்தை ஆண்ட இயற்றமிழ் '' என்று தமிழ், இயற்கைப் போக்கில் தோன்றிய மொழி என்பதைக் காட்டினுர். தமிழை '' ஆதிசிவன் பெற்றுவிட்டான் '' என்பது போன்ற கருத்தை நயமாக மறுப்பவராய்ச் '' சும்மாதான் சொன்னுர் உன்னை ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே'' எனக் குறித்தார்.

மேலை நாட்டு மொழியியல் அறிஞர் எர்டர் என்பார், '' மொழியை மாந்தன் தோற்றுவிக்கவில்லை ; அது இயற்கையில் தோன்றியது '' என்ருர். இக்கருத்தை, ' மாந்தன் மொழியைத் திட்டமிட்டு வலிந்து உண்டாக்கவில்லை ; மாந்த உயிரினத்து உறுப்பு இயங்கும் இயற்கைப் போக்கில் மொழி தோன்றியது ' என்னும் கருத்தில் கொள்ளலாம். இக்கருத்து எல்லா மொழிகளுக்கும் பொருந்தாது. மிகத் தொன்மை வாய்ந்த சில மொழிகளுக்கே பொருந்தும். நம் தமிழுக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

இயற்றமிழ் (இயல் + தமிழ்) என்னுஞ் சொல்லமைப்பே ' தமிழ் இயற்கைப் போக்கில் இயங்கத் துவங்கிய மொழி ' என்னும் உண்மையைச் சொல்கிறது. ' அம்மா ' என்னுஞ் சொல் இவ்வுண்மைக்கு முதற் சான்ருய்த் திகழ்வது. இச்சொல்லின் வழக்காற்றையும் வரலாற்றையும் காண்போம்.

### வழக்காறு

' அம்மா ' அழைக்கும்—விளிக்கும் பொருளைத் தரும் சொல். அந்த விளிப்பொருளோடு இச்சொல், இக்காலத்தில் பல முனைகளில் வழங்கப்படுகிறது.

'' அம்மா ''—எனக் குழந்தை தன் தாயை அழைக்கிறது.

'' அம்மா ''—என எப்பருவத்தினரும் தம் தாயை அழைக்கின்றனர்.

'' அம்மா ''—என எவரும் தாய் முறையில்லாது எத்தாயரையும் அழைக்கின்றனர்.

'' அம்மா ''—என எவரும் எப்பருவப் பெண்டிரையும் அழைக்கின்றனர்.

'' பெரியம்மா '', '' சின்னம்மா ''—என அடைமொழியுடன் பெரிய, சிறிய தாயாரை அழைக்கின்றனர்.

''கண்ணம்மா''—எனப் பெயர்ச்சொல்லின் பின் அமைத்துப் பெண்டிரை அழைக்கின்றனர்.

இவ்வாறு பலமுனையில் விளிப் பொருளில் அமையினும், முதலில் குறிக்கப்பட்ட குழந்தையின் குரல்தான் சொல்லின் மூலப் பொருளுக்கும், முதற் பொருளுக்கும் இயைபாவது. பிறவெல்லாம் பரந்துபட்ட வழக்கால் விரிந்தன.




இவ்விரிவில் ' அம்மா ' அழைப்புப் பொருளோடு பெயர்ப் பொருளையுங் கொண்டது.

' என் அம்மா சமைத்தது '
' உன் அம்மாவைக் கூப்பிடு '
—என உரையாடல்களில்

' அம்மா ' விளிச் சொல்லாக அன்றி ' அம்மா ' வையே குறிக்கும் பெயர்ச் சொல்லாகவே அமைவதைக் காண்கிறேம்.

' அம்மா ' வைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் பல :

'' அவ்வை அம்மனை பயந்தாள்
அம்மையே யாயே அன்னை
எவ்வம் இல் ஆயி மோய்தாய்
ஈன்றவள் நாமம் ஒன்பான் ''
—எனச் சூடாமணி.

நிகண்டு ஒன்பது பெயர்களைக் குறிக்கிறது. இப்பட்டியலில் அமையாத ' ஞாய் ' என்னுஞ் சொல்,

'' யாயும் ஞாயும் யாரா கியரோ ''
—(குறுந்தொகை)

'' கைம்மிக ஞாயையும் அஞ்சுதி யாயின் ''
—(கலித்தொகை)

—என இலக்கியங்களில் ' உன் தாய் ' என்னும் பொருளில் அமைந்துள்ளது. மேலும், மரூஉ மொழியாகவும், திரிபுச் சொற்களாகவும் சில சொற்கள் உள.

இச் சொற்களில் ' தாய் ' என்னுஞ் சொல் ஒன்றே உலக வழக்கில் பேசப்படுகிறது. அஃதும் உரையாடல்களில் '' தாய் சொல்லைத் தட்டாதே '' என்பது போன்று பெரும் பான்மையும் மேற்கோள் குறிப்பில்தான் பேசப்படுகிறது. ' உன் தாய் எங்கே ; என் தாயிடம் சோறு கேள் ' என நடை முறைப் போக்கில் ' தாய் ' என்னுஞ் சொல்லும் வழங்கப்படுவதில்லை. இரவலர்கள் ' தாயே, பிச்சை போடுங்க தாயே ' என்று ஈன்றவள் என்னும் பொருட் குறிப்பில் அன்றிக் கூறுவர். ஈன்றவளைக் குறிக்கும் பிற சொற்களோ உலக வழக்கில்—நடை முறைப் பேச்சு வழக்கில் இல்லை.

' அம்மா ' என்னுஞ் சொல்லோ பெயர்ப் பொருளிலேயே பரந்துபட்ட பெருவழக்காய் காலந் தோறும், நாள் தோறும், நேரந்தோறும், இல்லந்தோறும் நிறைந்து உலவுகிறது. மேலும், இச் சொல் பெண் பால் விகுதி ஒற்ருய் ளகர(ள்) இறுதிபெற்று ' அம்மாள் ' என்று தாயைக்குறிக்கும் சொல்லாகவும் நிற்கிறது. ' கண்ணம்மாள் ' பொன்னம்மாள் ' எனப் பெண்டிரைக் குறிக்கும் சொல்லாகவும் நிற்கிறது. ' அம்பாள் ' என்பதே ' அம்பாள் ' எனத்திரிந்து வடமொழியில் இறைவியைக் குறிக்கிறது. '' வடமொழியில் அம்பா என்ற சொல், அம்மா என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே '' எனத் தமிழ்ப் பேரறிஞர் கா. சு. பிள்ளையவர்கள் குறித்துள்ளார்கள். மொழியியற் பேரறிஞர் பாவாணர் அவர்களும் அம்மாவின் திரிபே ' அம்பா ' எனக் காட்டினுர்கள்.

இத்துணை பரந்துபட்ட பெருவழக்காற்றுச் சொல்லாம் ' அம்மா ' உரிய இடத்தை இலக்கியத்திலும், நிகண்டிலும்—ஏன்—பெரும்பான்மையான அகர முதலிகளிலும் பெயர்ப் பொருளில் பெற வில்லை. சீவக சிந்தாமணியில், '' கோர் அம்மாவாகி '' என்னும் தொடரில் அரசனுக்குத் தாய் ஆகி ' எனப் பொருள் படும் நிலையில் உளது. அவ்விடத்தும் செய்யுளின் ஆற்ருெழுக்கு நோக்கி நச்சினர்க்கினியர் ' அம் + மா = அழகிய திரு ' என்று உரை வகுத்தார்.

' அம்மா ' என்பதற்குப் பெயர்ப் பொருள் அச் சொல்லின் முதற் பொருளன்று. வழக்குப் பெருக்கத்தில் அமைந்ததே. ஆதலின், இலக்கியம் முதலியவற்றில் உரிய இடம் பெருமை இயல்பாகலாம். ஆனுல், ' அம்மா ' என அழைக்கும் விளிப் பொருள் அச்சொல்லின் முதற் பொருள். முதற் பொருள் என்று குறிக்கும்போதே அது மூலப் பொருள் அன்று என்பதையும் குறிக்க வேண்டும்.

அதனைப் பின்னர்க் காண்போம். மக்கள் எல்லாரும் விளிப் பொருளில் இச் சொல்லை வழங்குகின்றனர். நாடோறும் இச்சொல்லால் தாயை அழைக்கின்றனர். அழைக்கும் எண்ணத்தின் வெளிப்பாடாக மட்டுமன்று ; உள்ளத்தே ஊறிய உவப்பை அழைப்பாக்கி, அவ்வழைப்பின் வெளிப்பாடாகின்றது. 'அம்மா' என்னும் அழைப்பில் அழைப்போனின் ஆர்வ உணர்வு உள்ளீடாக இசைக்கிறது. 'அம்மா' என்னுஞ் சொற்கு இத்துணைப் பொருட் செறிவு உண்டென, அச்சொற்கு இலக்கியப்பொருள் விரிப்பது போன்று திவ்வியப் பிரபந்தத்தில், பெருமாள் திருமொழி,

"அம்மா என்று உகந்து அழைக்கும் ஆர்வச் சொல்"—என்று பேசுகிறது.

"அம்மா என்று அழைத்தல்"—என்று பாவேந்தர் விளிப்பொருளைச் சுட்டிச் சிறப்பிக்கிறார்.

"போ அம்மா என்று உரைப்பப் போவேன்" என்று திருத்தக்க தேவர், சிந்தாமணியில் அமைக்கிறார்.

இவ்வாறு அங்கொன்றும் இங்கொன்றுமாக 'அம்மா' இலக்கியங்களில் அமைந்துள்ளதேயன்றிப் பரந்துபட்ட ஆட்சியாக இல்லை. இல்லை என்னும் போதே இருப்பதற்கு வழியிருந்தும், விதியிருந்தும் இல்லை என்பதைக் காண வேண்டும்.

தாய், தந்தை, மகள், மருகன், அத்தை முதலிய பெயர்களை இலக்கணநூல் முறைப் பெயர் எனக் குறிக்கும். தாயைக் குறிக்கும் முறைப் பெயர்ச் சொற்களில் ஐகாரத்தை இறுதியாகக் கொண்ட சொற்கள், அன்னை, அம்மை, அம்மனை, அவ்வை என்பன. இவை விளியேற்குங்கால் 'ஐ', 'ஆ' ஆகி வரலாம். அம்மை, அம்மா ஆகலாம். இதனைத் தொல்காப்பியம்,

> "முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
> ஆவொடு வருதற் குரியவும் உளவே"
> (தொல்—சொல்—123)

—எனக் குறிக்கிறது. ஆயினும், இந்நூற்பாவிற்கு எடுத்துக்காட்டு தந்த உரையாசிரியர்கள் 'அன்னை—அன்னா' எனக் காட்டினர். "அம்மை—அம்மா" எனக் காட்டினாரிலர். இங்குக் காட்டாத நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணி உரையில் இந்நூற்பாவையே காட்டி "அம்மை—அம்மா என விளியேற்றது" என்றார். ஓர் எடுத்துக் காட்டு கொண்டு ஏனையவற்றையும் கொள்ளலாம் என்பது கொண்டும், சிந்தாமணியில் காட்டியமை கொண்டும் 'அம்மா' அம்மையினின்றும் தோன்றியது எனக் கொள்வோமெனின் 'அம்மை' என்னும் சொல் பின்னர்க் காட்டப்படும் மூலச் சொல்லின் விரிவாய் அமைவதாலும், அம்மூலச் சொல்லினின்றே 'அம்மா' தோன்றுதற்கு ஒலியை எழுப்பும் உறுப்பின் இயக்கம் இயைபாய் அமைவதாலும் நிறைவாகவும் பொருத்தமாகவும் கொள்வதற்கில்லை.

எனவே, 'அம்மா' என்பதன் மூலச் சொல் 'அம்மை' என அறுதியிட்டுக் கூற நிறைவான வகையில்லை.

அவ்வாறாயின், அம்மா என்னும் விளிப்பொருளைத் தரும் சொல்லின் மூலச் சொல் எது? எச்சொல் 'அம்மா' என உருப்பெற்றது? இவ்வினாவிற்குத் தொல்காப்பியம் விடை வகுக்கிறது.

'அம்ம' என்றொரு இடைச்சொல் உண்டு. அதற்கு 'இதைக் கேள்' என்பது குறிப்புப் பொருள். அஃதாவது, நாம் பிறரிடம் ஒரு கருத்தைச் சொல்லுமுன் அவர் கவனத்தை நம்பால் திருப்பி அவரைக் கேட்க வைத்தற்கு இலக்கியங்களில் அமைந்த சொல் 'அம்ம' என்பது. எனவே 'அம்ம' கேட்க வைக்கும் குறிப்புடைய சொல். இச்சொற்கு இது பொருள் என்பதை,

"அம்ம கேட்பிக்கும்" (தொல்-சொல்-276) —எனத் தொல்காப்பியம் குறிக்கிறது. இலக்கியங்களில் இச் சொல் இப் பொருளில் பயின்று வரும். "அம்ம வாழி, தோழி" என்பது ஒரு நற்றிணைத் தொடர். இதற்குத் 'தோழி வாழ்க! இதனைக் கேள்' என்பது பொருள். இது போன்று,

> "அம்ம வாழி கொண்க" (ஐங்குறுநூறு—139)
> "அம்ம வாழி பாண" ( ,, —132)
> "அம்ம வாழி தும்பி" (குறுந்தொகை--392)
> "இன்னது அம்ம..தோன்றல்"-(புறநானூறு 44)

—என 'அம்ம' இப்பொருளில் வருகின்றது. இவை கொண்டு 'அம்ம' இலக்கிய வழக்கில் நிறைந்து நிலவுவது ; பல இலக்கியங்களிலும் இடம் பெற்றது ; தோழி, தலைவன், பாணன், அரசன், தும்பி, அன்னை முதலிய பலரோடும் உரையாடுங்கால் அமைவது'—எனக் காண்கிறோம். இஃது அச்சொற்குக் குறிப்பிடத் தக்க சிறப்பு ஒன்று. இச்சிறப்பை இங்கே குறிக்க வேண்டியதாகின்றது.

இவ்வாறு உரையாடுங்கால் உரைப்பதற்கு முன், குறிப்பில் பொருள் தரும் சொல்லாக அமைதலின் இது உரையாடலை எழுப்பும் (கேட்க வைக்கும்) பொருளுக் குரிய சொல்லாய் "உரைப் பொருட் கிளவி" (கிளவி—சொல்) எனப்படும். இதனை,

"அம்ம என்னும் உரைப் பொருட் கிளவியும்" எனத் தொல்காப்பியம் குறிக்கிறது. இச் சொல்லே பொருளின்றி அசைச் சொல்லாகவும் வரும். இதனை,

"அம்ம என்னும் அசைச்சொல்" (தொல்—சொல்—150)—எனத் தொல்காப்பியமும்,

"அம்ம உரையசை கேண்மினென் றாகும்"—என நன்னூலும் குறிக்கின்றன.

"உண்டால் அம்ம உலகம்" என்னும் புறப் பாட்டில் 'அம்ம'வை அசைச் சொல்லாகக்காண்கிறோம். இவ்வுரைப் பொருட் சொல்லாம் 'அம்ம' தான் அம்மா என்பதன் மூலச் சொல்லாய் அமைகிறது. 'அம்ம' என்னும் சொல்லின் இறுதி நீண்டு 'அம்மா' என்றாவதை ஆன்றோர் ஏற்றுக் கொண்டனர் என்பதைத் தொல்காப்பியம்,

"உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" (வரையார்—நீக்கார்) என்று தனியொரு செய்தியாகக் குறிக்கிறது.

இவ்வாறு நீண்டு அம்மா உருப்பெற்ற சொல்லே விளிப்பொருளைத் தருவதாயிற்று. அதற்கும் பின்வருமாறு இலக்கணம் அமைந்தது :

"அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணு தாயினும்
விளியொடு கொள்ப தெரியு மோரே"

(தொல்—சொல்—150)

என்னும் நூற்பாவின் முதலடி 'அம்ம' 'அம்மா' ஆவதைக் குறிக்கின்றது. அசைச் சொல்லெல்லாம் இடைச்சொல். 'அம்ம' என்னும் இடைச் சொல் நீண்டு 'அம்மா' என ஆயினும், அது ஈன்றவள் எனப் பொருள் படும் முறைப்பெயர் ஆகாது என்பதை இரண்டாம் அடி குறிக்கிறது. முறைப் பெயராகப் பொருள் பெறாதாயினும் ஆராய்ந்து அறிவோர் (தெரியுமோர்) விளிச் சொல்லாகக் கொள்வர் என்பதை இறுதி அடி தெளிவாக்குகிறது.



"இன்னது அம்ம....வயமான் தோன்றல்"—புறம் 44.

இவ்விறுதியடியின் "விளியொடு கொள்ப" என்பதற்கு நச்சினார்க்கினியர் 'அம்மா கொற்றா' எனச் சான்று காட்டி 'மற்றொரு விளிச் சொல்லோடு (கொற்றா!) கொள்வர்' என்கிறார். இதனைச் சீவக சிந்தாமணி உரையிலும் காட்டி "அம்மா விளியன்று" என்கிறார். ஆனால், தொல்காப்பியத்தின் முதல் உரையை வகுத்தமையால் உரையாசிரியர் என்றே தனிச்சிறப்புடன் வழங்கப்பெறும் இளம் பூரணர், இதுபோன்றே 'அம்மா சாத்தா' எனச் சான்று காட்டி,

"இடைச்சொல்லோடு தோன்றிற்றாயினும் விளியாக் கொள்வர் தொல்லோர்" என்று குறித்து, அதனை விளக்குபவராய், 'சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும் அம்மா என்பதும் அவ்வெதிர்முகமே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படும் என்பார் (என்று கூறும் தொல்காப்பியர்) விளியொடு கொள்ப என்றார்" எனக்கூறித் தொல்காப்பியரின் உட்கிடக்கை 'அம்மா' விளியே என்பதைக் காட்டினார். தொல்காப்பியரது சொற்படி தெரியுமோரின் கருத்தை யேற்றுத் தெரிமோராகவும் ஆயினார்.

எனவே, அம்மாவின் மூலச்சொல் அம்ம என்பதும், அது விளிப் பொருளில் வரும் என்பதும் தெளிவாகின்றன.

இவ்வாறாகவே, அம்மாவின் முதன்மையை 'அம்ம'விடம் கேட்க வேண்டியவர்களாகிறோம். அம்ம தானே கேட்பிக்கும்.''

'அம்ம' இலக்கியத்தில் பெற்றுள்ள சிறப்பு ஒன்றை முன்னர்க்கண்டோம். அது இலக்கணத்தில் ஒரு வகையான சிறப்பிடம் பெறுகிறது. பெயர்ச்சொல் விளியேற்கும் மரபைக் கூறும் தொல்காப்பியப் பகுதி விளிமரபு எனப்படும். விளியேற்றற்குரியது பெயர்ச்சொல்லே. எனவே, விளிமரபில் பெயர்ச் சொற்களே குறிக்கப்படும். அவ்விளிமரபில் குறிக்கப்படும் ஒரே இடைச் சொல் 'அம்ம' என்பது. இவ்வாறு இவ்வொரு சொல் தனியிடம் பெறுகிறது. இஃது அச்சொற்குக் குறிப்பிடத்தக்க சிறப்பு இரண்டு.

மேலும், இவ்வியலில் ஆராய்ச்சிக்குரியோர்பால் இவ்வொரு சொல்லே சார்த்தப்பட்டுள்ளது. "விளியொடு கொள்ப தெரியுமோரே" என்னும் தொடரினை முன்னர்க் கண்டோம். இவ்வகையில் இச்சொல் ஆய்வில் அமைந்து 'அம்மா' என விளியாதற்கு ஆராய்ச்சிச் சான்றோர்பால் சான்று பெறுகிறது. இஃதும் குறிப்பிடத்தக்க மூன்றாவது சிறப்பாகும்.

இனி, இத்தகைய சிறப்புக்கள் கொண்ட 'அம்ம' என்னும் சொல்லை ஆய்வது கொண்டே 'அம்மா' என்னும் சொல்லின் முதன்மையைக் காணலாம்.

தற்கால மொழியியல் அறிஞர்களது 'அம்ம' என்னுஞ் சொல் பற்றிய கருத்துக்கள் காணத்தக்கன. மறைத்திரு போப் பெருமகனார், "A hand book of the ordinary dealect of the Tamil language" என்னும் நூலை 1885ஆம் ஆண்டில் வெளியிட்டார். அந்நூல் ஆங்கிலம் அறிந்தோர் தமிழ் கற்பதற்கென உருவாக்கப்பட்டது. செய்யுட் சொற்களின் நோக்கில் அன்றி, பேச்சு வழக்குச் சொற்கள் வழி தமிழைப் பேசவழி வகுக்கும் நூல் அது. அதன்கண் தாயைக் குறிக்க இரு சொற்களை அறிமுகம் செய்துள்ளார். அவை : அம்மை, அம்ம என்பன. தாய் என்னும் பெயர்ப் பொருளைத் தரும் வழக்குச் சொல்லாக 'அம்ம'வையும் அறிமுகம் செய்துள்ளார். அறிமுகம் செய்யும் பகுதியிலேயே தந்தையைக் குறிக்கும் வழக்குச் சொல்லாக 'அப்பா' என்னும் சொல்லை அறிமுகப்படுத்தியுள்ளார். தாய்க்கு 'அம்மா' என்னுஞ் சொல்லைக் காட்டினாரல்லர். இவை கொண்டு அவர் 'அம்ம' தாயைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகக் கருதினார் என்னலாம். அச்சொல்லே ஈறு திரிந்து 'அம்மா' என விளிச் சொல்லாயிற்றெனக் கருதியிருக்கக்கூடும் எனவும் கொள்ள நேர்கிறது. எவ்வாறெனில், அவர் காலத்தும் 'அம்மா' விளியாக மிகப் பரவலாய் வழங்கப்பட்டமை கொண்டேயாகும்.

மொழியியற் பேரறிஞர் பாவாணர் அவர்கள், "அம்மம்—தாயின் முலை—என்ற சொல்லினின்றாவது, ஆவின் கன்று கதறல் ஒலியினின்றாவது 'அம்ம' என்னும் சொல் பிறந்திருக்க வேண்டும்" என்று குறித்திருக்கிறார்கள். 'சொல்லினின்றாவது ஒலியினின்றாவது' எனக் குறித்தமை கொண்டும், 'பிறந்திருக்க வேண்டும்' என்று குறித்தமை கொண்டும், 'அம்ம' பற்றி அறுதியான கருத்தைக் கூற அவர்கள் மனநிறைவு கொள்ளவில்லை என்பது புலனாகின்றது.

இவ்வழியில் வேர்ச்சொல் கண்டு ஆய்வது எடுத்துக்கொண்ட கருத்திற்கு அரண் அமைப்பதாகும். ஆயினும், அவ்வாய்வு சில அசைகளையும், பலசொற்களையும், அவற்றின் தொடர்பில் பல பொருள்களையும், நுணுக்கங்களையும், இயைபு படுத்தும் ஆய்வாய் விரிந்து செல்லும். அவ்விரிவஞ்சி வேர்ச்

சொல் ஆய்வை இதுபோது நிறுத்தி வைத்து 'அம்ம' என்னும் சொல்லின் எழுத்துக்களை நோக்கும் ஆய்வை இவண் மேற்கொள்ள நேர்கின்றது.

'அம்ம' என்னுஞ் சொல் அ+ம்+ம்+அ என நான்கு எழுத்துக்களின் கூட்டொலி அகரத்தில் துவங்கி, மகரம் தொடர்ந்து, இரட்டித்து, அகரத்தில் முடிகிறது. எழுத்துக்கள் நான்காயினும் ஒலியால் அகரமும் மகரமும் (ம்) ஆகிய இரண்டையே கொண்டது. இவ்விரண்டெழுத்துக்களின் இயல்பினைக் காண வேண்டும்.

### அகரம்.

அகரம் தமிழில் மட்டுமின்றி அனைத்து மொழிகளிலும் தனிச் சிறப்புக் கொண்ட எழுத்தென்பதை அறிவோம். எழுத்தெல்லாம் அகர முதல. மொழியியலார் அதனைக் கனத்த எழுத்தென்பர். தமிழ்ப் பேரறிஞர் கா. சு. பிள்ளையவர்கள் '' அகரம் தமிழில் அதிக மாற்றம் அடைவதில்லை '' என்பதை விளக்கியுள்ளார்கள். அகர ஒலியன்றிப் பிற எழுத்தொலிகள் இல்லை. அனைத்து எழுத்துக்களிலும் ஒலியால் ஒன்றி நிற்பது அகரம். வரிவடிவிலும் அத்தகையதாகக் கொள்ள இடம் உண்டு. மொழிப்பொறி அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் 'அ' என்னும் வரிவடிவைப் பலவகையாகப் பகுத்துப் பகுத்தவற்றைப் பிரித்துப்பிரித்து, இணைத்து அவ்வொரு எழுத்தைக்கொண்டே 'ஓம்' 'நமசிவாய', 'சரவணபவ', 'நாராயணாய' என்னும் மந்திர மொழிகளை உருவாக்கிக் காட்டினார்கள். மேலும், அகரம் பல சிறப்புக்களைக் கொண்டதாயினும், இவண் 'அது முதன்மை எழுத்து ; மாற்ற மற்றது ; எங்கும் நிறையும் ஒலியினது ; எதையும் அமைக்கும் வடிவினது' என்பனவற்றை நினைவு கூரலாம்.

### மகரம்.

'ம்' என்னும் மகரம் மெல்லெழுத்து ஆறனுள் ஒன்று. அதன் ஒலியை நுணுகி நோக்கின் அவ் ஆறு எழுத்துள்ளும் மகரம் மென்மையாவதை உணரலாம். தமிழ்ப் பண் முறையில் ஏழு இசையில் 'குரல்' என்னும் இசை ஒன்று. இதனைத் திரித்து வடமொழியில் 'மத்யமம்' என்பர். ஒவ்வோரிசைக்கும் ஒவ்வோர் உயிர்க் குறியிட்டெழுத்து, மெய்க் குறியிட்டெழுத்து உண்டு. 'குரல்' என்னும் இசையின் மெய்க் குறியிட்டெழுத்து மகர ஒற்றைக் கொண்டது. 'குரல்' என்னும் இசைப்பெயர்ச் சொல்லில் மனிதக் குரலின் பொருளும் இயைந்திருப்பதைக் காண்கிறோம். மனிதக் குரலிலும் மகளிர் குரல் இனிமையானது. அம்மகளிரது குரலின் பாங்கில் அமைந்ததால் பெயர் பெற்றதே 'குரல்'



என்னும் இசை. இவ்வாறு மகளிர் குரல், அதன் கண் எழும் இனிமை-இவற்றிற்கு அடிப்படையாய் மகரம் ஒளிர்கிறது. 'ஓம்' என்னும் இறைமொழியில் ஒன்றிநின்று அதற்குக் கூறப்படும் இறைமை, தூய்மை, பயன்மை முதலியவற்றை நிறைவேற்றும் சிறப்புடையது மகரம். மேலும், மகரம் சில சிறப்புக்களைக் கொண்டதாயினும் இவண் அதன் மென்மை, இனிமை, தூய்மை என்பனவற்றை நினைவு கூரலாம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இவ்விரு எழுத்துக்களது ஒலியும் எளிய முயற்சியால் தோன்றுவதே குறிக்கத்தக்கதாகும். எழுத்துக்களின் பிறப்பைக் கூறும் இலக்கணங்கள் இவ்வெளிய முயற்சியினைத் தெளிவுபடுத்துகின்றன.

''அ, ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும் '' (தொல்-எழுத்து-85)

'' முயற்சியுள், அ, ஆ அங்காப்புடைய '' (நன்னூல்-76) (அங்காப்பு=வாயைத் திறத்தல்) வாயைத் திறந்து கூறும் முயற்சி ஒன்றால் அ, ஆ தோன்றும் என்பதே இவற்றின் பொருள். ஆகாரத்தின் ஒலியை அகரத்தை விட நீட்டவேண்டியுள்ளமையால் அகரம் அதைவிட எளிமையில் தோன்றுவதாகிறது. பிற உயிரெழுத்துக்களின் பிறப்புக்களை ஒலித்து நோக்கின், அகரம் ஒன்றே எளிய முயற்சியில் தோன்றுவதை அறியலாம்.

மகர ஒலி இரு உதடுகளும்—இதழ்களும் கூடி நெகிழ்வதால் தோன்றும். இதற்கு இலக்கணம்,

''இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்'' (தொல்-எழு-97).

''மீகீழ் இதழ் உறப் பம்மப் (ப், ம்) பிறக்கும்'' (நன்னூல்-81).

இரு உதடுகளும் கூடல் என்பது, வாய் இயைபாக இருப்பதாலேயே அமைவதாகும். அவ்வாறு அமைந்திருக்கும் கூடலை நெகிழ்க்கும் ஒரே முயற்சியால் அங்காத்தலும் அமைந்துவிடுவதால் இவ்வெழுத்துக்கள் (ப், ம்) பிற மெய்யெழுத்துக்கள் யாவற்றிலும் எளிய பிறப்பை உடையன என்பதை அறியலாம். உயிரெழுத்துக்களினும் அகர, ஆகாரம் நீங்கலாக ஏனைய எழுத்துக்களைவிட (ப், ம்) எளிய முயற்சியை உடையன என்பதை இலக்கணமும் ஒலியெழுப்பும் கொண்டு உணரலாம். கூர்ந்து ஒலித்துக் காணின் மகர ஒலி முயற்சிக்கு இரு உதடுகளின் விளிம்புகள் ஒத்துப் பொருந்தி, அமைந்திருப்பதைக் காணலாம். பகர ஒலி முயற்சிக்கு மேலுதட்டின் விளிம்பு உள் நோக்கிக் கீழுதட்டில் படியும். இதை நோக்கும்போது பகரத்தைவிட மகரம் எளிய முயற்சியை உடையது என்பதைக் காணலாம்.

அகரமும் மகரமும் எளிய முயற்சியால் ஒலிக்கும் எழுத்துக்கள் என்பது தெளிவு. இவ்வெளிய முயற்சியில் 'இவ்விரண்டு எழுத்துக்களும் இயல்பாகவே அடுத்தடுத்து ஒலித்தற்குரியவை; ஒன்றையொன்று தொடர்ந்து தோன்றும் இயைபும் இயல்பும் கொண்டவை' என்பதே இவண் காணத்தக்கதாகும்.

இவ்விரண்டு எழுத்துக்களும் பிறக்கும் முயற்சியைத் தனித் தனியே கண்டுள்ளோம். அவற்றை இணைத்து நோக்குவோம்.

வாயைத் திறந்து ஒலியை
உண்டாக்கின் தோன்றுவது..அ
அவ்வொலியோடு உதடுகளை
இணைத்து மூடின் தோன்றுவது..ம்
அவ்வொலியைத் தொடர்ந்து
இணைந்த உதடுகளை
நெகிழ்க்கின் தோன்றுவது..ம

தொடர்ந்த இவ்வொலிகளால் தோன்றுவது அம்ம. தோன்றிய அம்ம நம்மைக் கேட்கவைக்கும்—கேட்பிக்கும். கேட்பிக்கும் 'அம்ம' எளிய முயற்சியின் தோற்றம். எளிய முயற்சியின் தோற்றம் என்பதற்கு மேல், இச்சொல் இயல்பாகத் தோன்றுவது என்பதைக் குழந்தையைக் கொண்டு காண்பாம்.

பிறந்த குழந்தை எழுப்பும் அழுகையொலி கரையும் ஒலியாகும். அக் கரையும் ஒலி வாயைத் திறந்த அளவில் தொடர்வது. குழந்தை பிறக்குமுன் ஒலித்தல் செய்யாத தொண்டை தெளிவான ஒலியைத் தாராது ; கரைசல் ஒலியைத் தரும். (கம்மிய தொண்டையைக் கரைசல் தொண்டை என்கிறோம்) அவ்வொலிக்கு எழுத்துருக்கொடுக்க இயலாது. எவ்வகைப் பொருளும் அற்றது. இக் கரைதல் குழந்தையொலியின் முதற்படி எனலாம். அடுத்தபடி கரையும் ஒலியோடு உதடுகளைச் சேர்த்துப் பின் திறந்து ஒலிப்பது. பழகிய தொண்டைத் திறப்பால் 'அ' ஒலி தொடரும். மூடித் திறக்கின் 'ம்' ஒலி-'ம' ஒலி தோன்றும். தெளிவான உடல் வளமுள்ள குழந்தைக்கு 2 திங்களிலேயே இவ்வொலி துவங்கும்—துலங்கும். அப் பருவத்திலேயே 'அம்ம அம்ம' என்னும் ஒலிக் கூட்டல் கூடும். இப்பருவத்தில் குழந்தை, தாய் என அடையாளங் கண்டுகொள்ளும் நினைவினது ஆகும். ஆகவே, அதுபோது ஒலிக்கும் அம்ம ஒலி தாயை அழைக்கும் குறிப்பைக்கொண்டதாக அமைகிறது. எனவே, 'அம்ம' உருவாகும்போதே குழந்தை, தான் உரைப்பதற்கு உரிய பொருளாகத் தாயைக் காண்கிறது ; அச்சொல் உரைப் பொருட்கிளவியாகிறது. இவ்வுரைப் பொருட் கிளவியாம் 'அம்ம' தான் குழந்தையின் உணர்வு, வெளிப்படத் துணை நிற்கும் ஒலிக்கூட்டல். இதற்கு எழுத்துருக் கொடுக்கலாம். தாய் என்னும் குறிப்புப் பொருளையன்றி வேறொன்று கொள்தற்கு வழியின்று. வெளிப்படையாகத் தாய்ப்பொருளின்றி உதட்டு அசைவால் உருவாகிய இக்கூட்டல் அசையாகவும் அமைகிறது.

எனவே, 'அம்ம' தான் குழந்தையின் முதற்சொல். குழந்தை மாந்தனின் முதற்பருவம்—முதல் உரு. அது தரும் முதற்சொல்லாம் 'அம்ம' இயல்பில் தோன்றும் முதல் மொழி. இம் முதல் மொழியாம் 'அம்ம' என்னும் சொல் தாயை நோக்கிய உணர்ச்சி வெளிப்பாடாய்த் தோன்றியது. குறிப்பில் தாயை உணர்த்துவது. இன்றும் மலைஞாலத்தார் ஈன்றாளை 'அம்ம' என்றே அழைப்பதையும் காண்கிறோம். மறைத்திரு. போப் பெருமகனாரும் இது கொண்டே குறித்தார் எனலாம்.

ஈன்றாள் முகங்கண்டு அவ்வுணர்வை 'அம்ம' என்னும் ஒலிக்கூட்டலாக்கிய குழந்தை, ஈன்றவளை அழைக்க 'அம்ம' வை நீட்டி 'அம்மா' ஆக்குவது இயல்பில் நிகழ்வதே. அவ் 'அம்மா' வின் ஈற்றொலி 'மா'. அந்த 'மா' ஒலியே அழைக்கும் பொருட் குறிப்பைக் கொண்டது. பிங்கல நிகண்டு,



''அம்ம வாழி தோழி''—நற்றிணை.

'' மா அழைக்கை '' என்று பாடுகிறது. இது இங்கே நோக்கத் தக்கது. அழைக்கும் பொருட் குறிப்பில் உருவான 'அம்மா' காலவளர்ச்சியில் 'அம்மா' என்னும் விளிச்சொல்லாகி ''அம்ம, அம்மா ஆகும்'' என மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் இலக்கணம் குறிக்க இலக்காயிற்று.

'அம்மா' என அழைக்கும் பொருட்குறிப்பில் தாய் மேல் சேய் கொண்ட உள்ளுணர்வு உள்ளிசையாக அச்சொல்லில் முரல்கிறது. அந்த முரல்வு பலவகை உணர்வுகளுக்கும் பின்னிசையாய் நிற்கிறது. அதாவது 'அம்மா' என்னும் சொல்லில் பலவகை உணர்வுகள் வழங்கப்படுகின்றன என்பதாம். இவ்வுண்மையை இலக்கியத்தில் பலமுனைகளில் அமைந்துள்ள அம்மா என்னும் சொல்லின் பொருட் குறிப்பைக் கொண்டு நன்கு காண்கிறோம்.

''சிற்றடி யவர்க்கே குற்றேவல் தலைக்கொண்டு
அம்மா கிடைத்தவா என்று
செம்மாப் புறூஉம் திறம்பெறற் பொருட்டே''
(மதுரைக்கலம்பகம்)

இதிற் குமரகுருபரரின் செம்மாப்பு உணர்வை அவரது 'அம்மா' சொல்லில் காண்கிறோம்.

''அம்மா நம்மேல் பட்டது அருங்கூடற்
பெம்மான் மேற்பட்ட பிரம்படி''
(மதுரைக்கலம்பகம்)

—இங்கு ஒரு பெண்ணின் காம உணர்வு வடிக்கப்படுகிறது.

''வெறும் பொருளதம்மா'' என்னுஞ் சீவக சிந்தாமணி அடியில் எள்ளல் உணர்வை 'அம்மா' காட்டுகிறது.

''ஆ அம்மா அம்மா என் அம்மா அகன்றனையே'' என்று அரசி விசயை தன் அவல உணர்வை வடிக்கத் திருத்தக்கதேவர் 'அம்மா அம்மா' என அடுக்கி வைக்கிறார். அவ்வடியின் பின்வந்துள்ள ''என் அம்மா''—'என் அன்புக்குரிய மகனே' என்னும் தாய்ப்பொருளில்லா இலக்கணையாக விளியைத் தருகிறது.

''தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு'' என்னும் குறளில் 'அம்மா' இன்பத் தினவாம் உணர்வை வடிப்பதாகக் கொள்ளலாம். [அ+மா=அரிவை அந்த அழகிய பெண்' என இங்கும், இதுபோன்ற பிற இலக்கிய இடங்களிலும் பொருள் கூறப்படினும் இவ்விடத்தில் 'அம்மா' என்னும் இடைச் சொல்லாகக் கொள்ளுதற்கு இக்குறள் அமைந்த அதிகாரத்

திலமைந்துள்ள அண்மைச்சுட்டுச் சொல் (தீ யாண்டுப் பெற்றாள் இவள்) இவ்விடத்தில் அகரச் சேய்மைச் சுட்டாகக் கொள்ளற்கு இடம் தரவில்லை.]

''பெற்றோரைக் குறிக்கும் சொற்களினின்று, இரக்கக் குறிப்பு இடைச்சொற்களும், வியப்புக் குறிப்பு இடைச்சொற்களும் தோன்றியுள்ளன'' எனப்பாவாணர் அவர்கள் குறித்துள்ளமை இங்கே இயைத்து நோக்கத்தக்கது.

இவ்வாறாகப் பல்வகை உணர்வுகளை வடிக்கும் 'அம்மா' என்னும் சொல்' உலகில் பல்வகை உணர்வுகளுக்கும் தாயாம் அன்னையை அன்பு உணர்வுடன் அழைக்கும் விளிச்சொல்லாக மிளிர்கிறது.

வழக்காறு கொண்டும், வரலாறு கொண்டும் 'அம்மா' வை,

1. ஈன்றவளைக் குறிக்கும் பெயர்க்குறிப்பில் கண்டோம்;

2. ஈன்றவளை அழைக்கும் விளிப்பொருளில் கண்டோம்;

3. உள்ளத்தெழும் உணர்வுக் குறிப்பில் கண்டோம்;

4. அன்புக்குரியாரை விளிக்கும் பொருளில் அமைவதையும் கண்டோம்.

இவ்வாறு படிப்படியாய் வளர்ந்த வழக்காற்றைத் தொகுத்து ஓரிடத்தே காட்டத் திருத்தக்க தேவர் நினைத்தது போன்று சிந்தாமணிப் பாடல் ஒன்று விளங்குகின்றது. அதனை முன்னர் ஆங்காங்கு தனித்தனியே பிரித்துக் கண்டோம். தொகுத்துக் காண்போம்.

சீவகன் தோழர் அவன் தாய்க்குச் சீவகன் நிகழ்ச்சிகளைக் குறிக்கிறார்கள். செய்திகேட்கும் ஆர்வத்தில் முழுச்செய்தியையும் வாங்குதற்கு முன் சீவகன் இறந்துவிட்டதாகக் கொண்டு அத்தாய் புலம்புகின்றாள்:

''கோஅம்மா ஆகிக் குடியோம்பி நின்குடைக்
கீழ்
பாவமே செய்தேன் பரிவெலா நீங்கினால்
'போ அம்மா' என்றுரைப்பப் போவேன்முன்
போயினாய்;
**ஆ அம்மா அம்மா என் அம்மா அகன்றனையே''**
—என்பது பாடல்.

முதலில் தாய்ப்பொருளைக் காட்டுவதாகக் கோ அம்மாஆகி'' என, அமைத்தார். அடுத்த விளிப்பொருளை, அடுத்துப் ''போ அம்மா'' என அமைத்தார். அடுத்து வளர்ந்த உணர்வுக்

''ஆ அம்மா அம்மா என் அம்மா''—சீவக சிந்தாமணி.





''அம்மா அரிவை முயக்கு''—குறள்.

குறிப்பை ''ஆ அம்மா அம்மா'' என அமைத்தார். அடுத்த அன்புக்குரியாரை விளிக்கும் குறிப்பில் ''என் அம்மா'' என அமைத்தார். ஈன்றவளாம் விசயையைக் கொண்டே அமைத்த வியந்தும் நயந்தும் மகிழ்தற்குரிய அம்மாவின் இலக்கியம் இது.

இதன் மூலச் சொல்லாகிய 'அம்ம' வை ஒற்றி உருவானது 'அம்மை' என்பதைக் காண்பாம். 'அம்ம'வின் இறுதி அ, ஆவாக நீண்டதே 'அம்மா' எனத் தெளிந்தோம். அதையொட்டி நோக்கின் 'அம்ம'வின் இறுதி அ ஒலியுடன் ஐ செறிந்ததே அம்மை. ஐ என்னும் எழுத்து அ-ய்-இ என்னும் மூன்றொலிகளின் தொகுப்பொலி. (அய்—ஐ). குழந்தையின் உதடுகள் கூடி 'அம்' ஒலியைக் கூட்டி, உதடுகள் நெகிழுங்கால் ஓரளவாய் உள்நோக்கி நெகிழ்ந்து, மேல்வாய்ப் பல்லில் பொருந்தியிருந்த நா அசைந்து, ஓரத்தை மட்டும் மேல்வாய்ப் பல்லில் பொருத்தி ஒலிப்பதால் ஐ தோன்றும். இதனை, ''அண்பல் முதல் நா விளிம்பு உற வரும்'' எனத் தொல்காப்பியம் வகுக்கும். 'அம்' என்னும் ஒலித்தொடர்பில் 'ஐ' ஒலி உற 'அம்மை' என்று ஒலிக்கும்.

இயல்பான இவ்வியக்கத்தால் 'அம்ம'வின் தொடர்பாய் 'அம்மை' தோன்றுவதைக் காணலாம். இந்த 'ஐ'யை இலக்கண நூலார் வினை முதல்-கருத்தா விகுதி என்பர்.

தாயைக் குறிக்கும் அவ் அம்மையும் 'அம்மையோ' என வியப்புணர்வைக் காட்ட நிற்கும்.

'அம்ம'வின் பின்னொலி ஐயாகியதோடு முன்னும் 'ஐ' கூடின் 'மைம்மை' என்றாகும். இந்த முன் 'ஐ' குற்றம் எனப் பொருள்படுதலாய் அமைந்தது. பெண்ணின் குறை, தாய்த்தன்மை பெறாததாகும். இந்த 'மைம்மை' என்ற சொல் தாய்த்தன்மை பெறாத 'மலடி' என்னும் பொருளைத் தருவதாயிற்று.

''மைம்மையே வந்தி என்ப மலடிக்கு வகுத்த பேராம்'' என்பது சூடாமணி நிகண்டு.

'அம்ம' என்னும் தாய்ப்பொருட் குறிப்பு இவ்வாறெல்லாம் விரிந்து செல்லும். இதுகாறும் கண்டவாற்றான் :

'அம்ம' மாந்தனியல்பில் தோன்றிய மூலச் சொல்; 'அம்மா' அதன்தொடர்பில்-அவ்வியல்பில் தோன்றிய முதற்சொல்—என்னும் கருத்தினை அறுதியாக்கலாம். உறுதியாகும். இம்முதற் சொல்லாம் அம்மாவை ஈன்றது குழந்தையன்றோ! குழந்தை ஈன்ற தமிழ்அம்மா வாழ்க!


# உழவர் பெருமக்களுக்குக் காணிக்கை






சிறப்பாக உணவு உற்பத்தியையும், பொதுவாக வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியையும் உயர்த்திட அயராது உழைத்துவரும் தமிழ் நாட்டு உழவர் பெருமக்களுக்குக்காணிக்கையாகக் கீழ்க்கண்ட 9 புதிய ரகங்களைத் தமிழ்நாடு அரசின் மாநில விதைக்குழு வழங்கியுள்ளது.—

### புதிய ரகங்களின் சிறப்புகள்



**காஞ்சி:**—இப்புதிய நெல் ரகம் செங்கற்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் பயிரிடுவதற்கு ஏற்றது. இது உள்ளூர் ரகங்களை விட, ஹெக்டருக்கு(2·47 ஏக்கர்) 1,600 கிலோ அதிக மகசூல் அளித்திட வல்லது. இதனுல் தமிழ் நாட்டில் அரிசி உற்பத்தியை மேலும் உயர்த்திட இயலும்.

**காவேரி:** —இந்த ரகம் பல்வேறு மண்வகைகளிலும், பருவநிலைகளிலும் நன்கு பயிராகிறது. இது உள்ளூர் ரகங்களை விட ஹெக்டருக்கு 1,000 கிலோ அதிக மகசூல் கொடுக்கும்.



**சாரதா:** —இப்புதிய கேழ்வரகு இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தற்பொழுது 'கே. 2' என்ற கேழ்வரகு பயிரிடப்பட்டு வரும் திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்குக்கும் ஏற்றது. இது கே. 2 ரக கேழ்வரகை விட 31 சதம் அதிக மகசூல் அளித்திடும் ஆற்றல் உள்ளது. இதன் வயது 105 நாட்கள்.




**டி.எம்.வி. 10 நிலக்கடலே:**—இது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கும், மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதிக்கும் ஏற்றது. இது 77·7 சத நிலக்கடலேப் பயிறுகளைக் கொடுக்கும். இதில் 54·4 சதம் எண்ணெய், 37·5 சத புரதச்சத்து அடங்கியுள்ளது.




**கோ. 1. கொத்தமல்லி:**—இது தமிழ்நாடெங்கும் பயிரிடுவதற்கு ஏற்றது. உள்ளூர் ரகங்களை விட 17 சத அதிக மகசூல் கொடுக்கும்.


**கோ. 1. வெங்காயம்:**—பல்வேறு நிலைமைகளுக்கும் ஏற்றது. இது உள்ளூர் ரகங்களைவிட 17 சத அதிக மகசூல் அளித்திடும்.



**கோ. 1. துவரை:**—தமிழ்நாடெங்கும் பயிரிடுவதற்கு ஏற்றது. இதன் வயது 4½ மாதங்கள். இதை இறைவையாகவும், மானுவாரியாகவும் பயிரிடலாம். தனிப் பயிராகவும் அல்லது கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்யலாம். பிப்ரவரி-மார்ச் மற்றும் ஜூலை-ஆகஸ்ட் பருவங்கள் இந்த ரகத்தை விதைப்பதற்கு ஏற்ற காலமாகும். இதில் 21·44 சதம் புரதச்சத்து உள்ளது. இறைவையில் இந்த ரகம் ஹெக்டருக்கு 1,600 கிலோ மகசூல் கொடுக்கும் சக்தியுள்ளது.



**கோ. 1. தட்டைப் பயறு:**—இது மானுவரியாகச் சாகுபடி செய்வதற்கு ஏற்ற ரகமாகும். இதைத் தமிழ்நாடெங்கும் தனிப் பயிராகவோ அல்லது சிறுதானியங்களுடன் கலப்புப் பயிராகவோ அல்லது பருத்தியுடன் கலப்புப் பயிராகவோ சாகுபடி செய்யலாம்.



**பொகைன்வில்லா ஜின்னே:**—இது வெப்பமான காலநிலை உள்ள பகுதிகளுக்கும், குளிரான காலநிலை உள்ள பகுதிகளுக்கும் ஏற்றது. இதன் பூக்கள் இரும்பின் பழுப்பு நிறத்தில் இருக்கும். பூக்கள் மிகவும் அழகாக இருக்கும். வீடுகளின் முன்பும், பூந்தோட்டங்களிலும் அழகுக்காக இப்பூச்செடியினை வளர்க்கலாம்.

# இருதய நோய்களைத் தவிர்ப்பது எப்படி?



நமது உடலில் மிகவும் முக்கியமான உறுப்பு இருதயம். இருதயம் மிகவும் மென்மையானது, நுண்மையானது. வயலுக்கு நீர் இரைக்கும் பம்பு போல, உடலுக்கு இரத்தத்தை விநியோகிப்பது இருதயம்.

எந்த ஓர் இயந்திரமும் காலப் போக்கினிலே தேய்ந்து, சக்தி குறைவது இயல்பு. இருதயமும் அப்படித்தான். வயது ஆக ஆக அதனுடைய வலிமை ஓரளவு குறைகிறது. எனவே வயதானவர்கள் குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருதயம் நல்ல நிலையில் இருப்பதற்கான வழிகளைக் கடைப்பிடித்து, முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

தொழில் வளம் மிக்க நாடுகளில், இருதய நோய்களினாலும், புற்று நோயினாலும் மிகப் பலர் இறந்துவிடுகின்றனர். குறிப்பாக அமெரிக்கா முதலான அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் இருதய நோயினால் இறப்பவர்களின் தொகை பெருகிவருகிறது. ஏனைய சுகாதார வளர்ச்சிகளினால் 'வாழ்நாள்' மிகுதியாகிறது; நீண்டநாள் வாழும் மனிதன் வாழ்வின் பிற்பகுதியில் இருதய நோய்க்கு எளிதில் ஆளாகிறான்.

இருதயக் கோளாறுகளால் ஏற்படும் இறப்புக்கள் வாழ்வின் பிற்பகுதியிலேயே அதாவது, மூன்றில் இரண்டு பங்கு இறப்புக்கள் 45 வயதுக்கு மேற்பட்டோரிடையேதான் நிகழ்கின்றன.

'இருதய நோய்' அல்லது 'மார் அடைப்பு' பல காரணங்களினால் வருகிறது. கடுமையான மார்பு வலியுடன் தொடங்கும் இந்நோய்க்குப் பல காரணங்கள் உள்ளன.

பிறவியில் வருகின்ற இருதயக் கோளாறு

கீல்வாதத்தினால் வருகின்ற இருதய நோய்

இருதய-இரத்தக் குழாய் பற்றிய கிரந்தி நோயினால் வரும் இருதய நோய்

ஏனைய இருதயக் கோளாறுகள்

உயர் இரத்த அழுத்தத்தினால் வரும் இருதய நோய்

இருதய இரத்தக்குழாய் அடைப்பினால் வரும் இருதய நோய்



இருதய இயக்கத்தில் வரும் கோளாறுகள், தைராய்டு சுரப்பிக் கோளாறுகள் முதலானவற்றால் வரும் இருதய நோய்கள் என்று பல்வேறு அடிப்படைகளில் இருதய நோய்கள் வரலாம்.

இத்தகைய நிலைமைகளுக்கான காரணங்கள் வேறுபடுகின்றன. இத்தகைய நிலைமைகளுக்குள் சிலவற்றுக்குச் சரியான காரணங்கள் இன்னமும் கண்டு பிடிக்கப் படவில்லை. அவற்றைத் தடுப்பதற்கான சரியான சிகிச்சை முறைகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனையவற்றுக்குத் தடுப்பு முறைகளும், சரியான சிகிச்சை முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன.

இவற்றுள் பிறவியில் வரும் இருதயக் கோளாறுக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், கர்ப்பிணியை ஆரம்ப முதலே முறைப்படி கண்காணித்துவருவது நல்லது. வயிற்றுப் பகுதியை எக்ஸ்-ரே படம் எடுப்பதைத் தவிர்க்கவேண்டும்.

கீல்வாதக் காய்ச்சல், பத்து முதல் பதினைந்து வயதுக்குட்பட்டோரின் இறப்புகளுக்கு இது ஒரு முக்கிய காரணமாக விளங்குகிறது. இது குழந்தைப் பருவத்தில் தொண்டைப்புண், தொண்டைக் கோளாறு முதலியவற்றால் வருகிறது. இந்த நோய் ஈரமான தரையிலும், சிறு வீடுகளில் நெருக்கடியிலும் வாழ்கின்றவர்களுக்கு எளிதில் தோன்றுகிறது. முதல்முறை கீல் வாதக் காய்ச்சல் வந்தவுடன் டாக்டரை அணுகி உரிய சிகிச்சை அளித்தால் அது இருதயத்தைப் பாதிக்காதவாறு தடுக்கலாம். அடிக்கடி கீல்வாதக் காய்ச்சல் வந்து கவனிக்கப்படாமலிருந்தால் எளிதில் இருதயத்தைப் பாதிக்காது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் கீல்வாதத்தினால் வரும் இருதய நோய்கள் மிகுந்துள்ளன. எனவே கீல்வாத நோயின் அறிகுறி தெரிந்த உடன் சிகிச்சை அளிப்பது மிகவும் முக்கியம்.

இருதய - இரத்தக்குழாய் பற்றிய கிரந்தியும் அதனால் விளையும் இருதயக் கோளாறும் சாதாரணமாக 40-45 வயதினருக்கே

**இதய நோய்களை எப்படித் தவிர்ப்பது என்பது பற்றி இக் கட்டுரையில் தெளிவாக்கி யிருக்கும் டாக்டர் ஆர். நாராயணன் பொது நலத் துறையின் கூட்டு இயக்குநராகப் பணியாற்றுபவர்.**

**எளிய முறையில் எழுதப் பட்டிருக்கும் இக் கட்டுரை அரிய கருத்துரைகளை விருந்தாக்குகிறது.**

வருகிறது. இவற்றைத் தவிர்க்க ஒரே வழி. ஆரம்ப காலத்திலேயே கிரந்தி நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தலே ஆகும். நோய் கண்டறியப்பட்ட பின்னர் சிகிச்சை எளியதாகி விடுகிறது. உலகெங்கும் கிரந்தி நோய் பெருகி வருகிறது என்கிற உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில் மறத்தலாகாது.


ஏனைய இருதயக் கோளாறுகள், ஆரம்பத்தில்தோன்றும்நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் தவிர்க்கப்படலாம். எடுத்துக் காட்டாக தொண்டை அடைப்பான், 'டான்சில்' என்ற தொண்டைத் தசை வளர்ச்சி, நிமோனியா முதலான விஷக் காய்ச்சல்கள் பல்வேறு நச்சு நிலைகள் (Septic Conditions) ஆகியவற்றைத் தொடக்கத்தில் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் இருதய நோய் ஆபத்தைத் தவிர்க்க முடியும்.



உயர் இரத்த அழுத்தமும், சிறு நீரகக் கோளாறுகளும் இருதய நோய்களுக்குக் காரணமாகின்றன. விரைவில் கண்டறிந்து சிகிச்சை பெறுதல் மூலமும், இரத்த அழுத்தம் சம அளவில் இருக்குமாறு பார்த்துக் கொள்வதன் மூலமும் இருதய நோய்களைத் தவிர்க்கலாம். நடுத்தர வயதினர் வருவாய்க்கேற்றவாறு அமைதியான வாழ்வு-மன நிறைவுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். கவலைகள், சோர்வு, விரைவு, கோபம், எரிச்சல், சலிப்பு முதலான தீவிர உணர்வுகளுக்குட்படாமல் கவலையற்ற தன்மையுடன் மனநிம்மதியும் நிதானமும் கொண்டு வாழ வேண்டும். உயர் இரத்த அழுத்தமுள்ளவர்களுக்குக் கவலையற்ற தன்மையுடன் முழு ஓய்வும் மிக முக்கியம்.

இரத்தக் குழாய் பற்றிய இருதய நோய், இரத்தக் குழாயில் ஏற்படும் பல்வேறு நோய்களினால் தோன்றுவது. குறிப்பாக, இரத்தக் குழாயின் உட்பகுதி தடித்து அடைப்பு ஏற்படுவது காணமாகிறது. இதற்குப் பெரும்பான்மை மிருகங்களின் வழியே கிடைக்கும் கொழுப்புப் பொருள்களை மிகுதியாக உட்கொள்வது, காரணமாகக்கூறப்படுகிறது. இறைச்சி, வெண்ணெய் முதலான பொருள்களைக் குறைவாகவும், அவற்றை ஈடு செய்ய மீன், கோழிக்கறி, ஈரல், பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை மிகுதியாகவும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

இருதய இரத்தக் குழாய்கள் இருதயத் தசைகள் இயங்குவதற்கு இரத்தத்தை விநியோகிக்கின்றன. இவற்றில் ஏற்படும் அடைப்பும் இருதய நோய்க்குக் காரணமாகிறது. மேல் நாடுகளில் இத்தகைய இருதயக்கோளாறுகள் மிகுதி. இருதய இரத்தக் குழாய் அடைப்பினால் ஏற்படும் இந்நோயை 'மாரடைப்பு' (Heart-attack) என்று குறிப்பிடுவர். இது, இருதயம் இயங்குவதற்குத் தேவைப்படும் இரத்த ஓட்டம், இருதய இரத்தக் குழாயில் தடைப்படுவதால், இருதயம் நின்றுவிடுவதையே குறிக்கிறது. 'மாரடைப்பு' பரம்பரையால் வருவதும் உண்டு. ஆனால் 'மாரடைப்பு' ஏற்பட்டதாக நாம் அறிய முடியாத குடும்பங்களில் வந்தவர்களுக்கு 'மாரடைப்பு' ஏற்படாது என்று கூறுவதற்கும் இல்லை. 'மாரடைப்பு' எப்போது ஏற்படும் என்று கண்டறிய முடியாத போதிலும், 'மின் வழி இரத்த ஓட்டவரைப்படம்' (E.C.G.) எடுத்தல், இரத்தப் பரிசோதனை முதலியவற்றால் நோயாளியின் நிலையை ஓரளவு அறியலாம். சங்கடமான உணர்வு, மூச்சுத்திணறல், மார்பில் வலி முதலாயின 'மாரடைப்பு' ஏற்படுமுன் தோன்றும் அறிகுறிகளாகச் சில நேரங்களில் குறிப்பிடப்படுகின்றன. இந்த அறிகுறிகள் வேறு வகை நோயின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். எனவே இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் டாக்டரை உடனே அணுகிப் பரிசோதனை செய்து கொண்டு சிகிச்சை பெறுவது நல்லது. 'மாரடைப்பு' ஏற்படாமலிருக்க இருதயநோயாளிகள் எளிய உடற்பயிற்சி, அதாவது விடியற்காலை நேரங்களில் உலாவச் செல்லுதல் முதலியன நல்லது என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.



இந்தியாவில் மாரடைப்பை விடப் ''பாரிச வாயு'' (Strokes) எனப்படும் கால் கைகள் செயலற்று விடும் நோய், மிகுதியாக உள்ளது. இது, பெண்களை விட ஆண்களை மிகுதியாகப் பாதிக்கிறது. இந்த நோய் அநேகமாக வசதிமிக்க வாழ்வு நடத்துவோர், செல்வர்கள் ஆகியோரை— 40 வயதுக்கு மேற்பட்ட நிலையில்— குறிப்பாக — வழக்கறிஞர்கள், பொறியியலாளர், வாணிகத் தொழில் அதிபர்கள் முதலானோரை அவர்கள் நன்கு பொருளீட்டும் உயர்ந்த நிலையில் உள்ள போது—பாதிப்பதாகப் பல்வேறு ஆராய்ச்சிகள் உணர்த்துகின்றன. இதனால் இறப்போரின் தொகை




இந்தியாவைவிட வெளிநாடுகளில் மிகுதி என்றாலும், இப்போது இந்தியாவிலும் பெருகி வருவதாகத் தெரிகிறது.

பொதுவாக இருதய நோயாளிகள் ஊட்டம் மிக்க உணவை மிகுதியாக உண்ணலாகாது.

புகை பிடித்தலாகாது.

இருதய நோய் தோன்றுவதும், அதனால் இறப்பதும் பொதுவாக வயதையொட்டிக் கண்டறியப்பட்டுள்ளது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இவ் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மருத்துவப் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.

பெண்களை விட ஆண்களிடையே இருதய நோய்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

பொதுவாக உடல் உழைப்புக் குறைந்தவர்களிடையே இருதய நோய் மிகுதியாகத் தோன்றுகிறது.

இரத்தத்தில் இருக்கும் 'கொலஸ்டரால்' என்ற எண்ணெய்ப் பொருள் மிகுதியாவதால் இருதய இரத்தக் குழாய் பற்றிய 'மாரடைப்பு' வருகிறது.

இருதய இரத்தக் குழாய்பற்றிய மாரடைப்புக்கும் உயர் இரத்த அழுத்தத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது.

இருக்க வேண்டிய எடையை விட மிகுதியான எடை இருப்பதற்கும் இருதய இரத்தக்குழாய் பற்றிய இருதய நோய்க்கும், தொடர்பு உண்டு.

புகைப் பழக்கமும் இருதய-இரத்தக் குழாய் பற்றிய இருதய நோய்க்குக் காரணமாகிறது.

எனவே,

மார்பு வலி முதலான அறிகுறிகள் தோன்றுவோர், குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்டோர், உடனே டாக்டரை அணுகிப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

புகைப் பழக்கத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

அதிக எடையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஓரிடத்திலேயே உட்கார்ந்தபடி உடலுழைப்பின்றி உள்ளவர்கள் எளிய உடற்பயிற்சி செய்வது நல்லது.

மனக்கவலைகளையும், மனச்சுமைகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

சுருங்கக் கூறவேண்டு மானால், 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்ற முதுமொழியை மனத்தில் கொண்டு எல்லாவற்றிலும் அளவுடன் இருப்பது நல்லது உணவு, உறக்கம், ஓய்வு, உழைப்பு குடி, புகைத்தல்— எல்லாவற்றிலும் அளவுடன் இருக்க வேண்டும்.

## பெண் கல்வி வேண்டும்!

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு, முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணா



# தமிழரசு

## அடுத்த இதழ்!

- அதிகப் பக்கங்களுடன்
- வண்ணக் களஞ்சியமாக
- எண்ணப் பேழையாக
- கருத்துச் சுரங்கமாக
- கட்டுரைப் பெட்டகமாக
- கவிதை ஊற்றாக
- கன்னல் சுவையாக
- கனிச்சாற்றுக் கலவையாக
- பொங்கல் மலராக

மலர்கிறது!

விலை 35 காசுகள்தான்




"சுழன்றும் ஏர்ப்பின்னது
உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை. செய்யும் தொழில்களிலெல்லாம் தலையாயது வேளாண்மைத் தொழில் என்பதனைச் சொல்லிடத் தேவையில்லை.

உலகிற்கெல்லாம் உணவு படைத்திடும் உழவர், தம் வாழ்வில் ஏற்றம் பெற்றிட, அவர்கள் உற்பத்தி செய்யும் தானிய மணிகள், காய்கறிகள், கிழங்குகள், பழங்கள் இன்ன பிற பொருட்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பது மிகவும் அவசியமாகும். அத்துடன் விலைவாசிகள் மிகவும் உயர்ந்துவிடாமல் எல்லாக் காலங்களிலும் ஒரே சீராகப் பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டியதும் முக்கியமாகும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருவது தமிழ்நாடு கூட்டுறவுக் கொள்முதல்—விற்பனைச் (மார்க்கெட்டிங்) சங்கமாகும். சென்னை சேத்துப்பட்டில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட இந்தச் சங்கம் அரிய பெரிய திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அந்தச் சாதனைகளை மக்களுக்குத் தெரியப்படுத்த, சங்கத்தின் தலைவரான திரு. மன்னை ப. நாராயணசாமி (எம்.எல்.சி.) அவர்களைத் "தமிழரசு" இதழின் நிருபர் பேட்டி கண்டார்.

'தமிழரசு'க்கு திரு மன்னை அவர்கள் அளித்த பேட்டி பின்வருமாறு :—

நிருபர்:— தங்களது இந்தக் கூட்டுறவு நிறுவனத்தின் நோக்கம் என்ன ?

மன்னை நாராயணசாமி :— இந்தக் கூட்டுறவு நிறுவனத்தின் நோக்கம், விவசாயிகளுக்கு நட்ட மேற்படாமல், அவர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களை நல்ல விலைக்குக் கொள்முதல் செய்வதும், கொள்முதல் செய்தவற்றை நியாயமான விலையில் பொதுமக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்வதும்தான்! இதே அடிப்படையில்தான் விவசாயப் பொருட்களை வாங்குவதும் விற்பதும்.

எடுத்துக்காட்டாக இந்த ஆண்டு தமிழகமெங்கும் நல்ல விளைச்சல்-நல்ல மகசூல். கொள்முதல் விலை மிகக் குறைந்து விட்டது. மற்றவர்கள் விலையைக் குறைத்துக் கொள்முதல் செய்வதன் மூலம் வியாபார நோக்கத்தைக் காண்பித்தார்கள். கூட்டுறவு நிறுவனத்தின் நோக்கம் அதுவாக இருக்கக் கூடாது என்ற காரணத்தால் இரண்டு மூன்று ரூபாய் குறைத்து வாங்கக் கூடிய நிலை இருந்தாலும் நிர்ணயித்த விலையான ரூ. 29·07-க்கே (ஒரு குவிண்டால்) நாங்கள் வாங்கினோம்.

விவசாயப் பெருங்குடிமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தினால்தான் நடப்பு விலையை விட அதிக விலை கொடுத்துப் பொருட்களை வாங்கினோம்.


இப்படிக் கொள்கை வழி நின்று நடப்பதனால், சிலவற்றில் லாப நட்டங்கள் மாறி மாறி வருவதுண்டு.

நிருபர் :—நட்டத்தினை ஈடு செய்ய என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

மன்னை :—கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்தை மட்டுமே கருதிச் செயல்படுவது சிரமமாகவுள்ளது. அரசு அதிகக் கவனம் செலுத்தி நட்டத்தைக் குறைத்து லாபகரமாகச் செயல்பட முடியும்.

நிருபர் : தானியங்கள் கொள்முதல்—விற்பனை தவிர இந்தக் கூட்டுறவு நிறுவனம் வேறு பணிகளில் ஈடுபடுவதுண்டா?

திம்மாவரத்திலுள்ள அரிசி ஆலையைக் கூட்டுறவு அமைச்சர் திரு. ஆதித்தனார் பார்வையிடுகிறார். சங்கத் தலைவர் மன்னை நாராயணசாமியும் அருகில் இருக்கிறார்.



மன்னை : வேளாண்மையை யொட்டியுள்ள பல துறைகளில் பணியாற்றி வருகிறோம். கட்டுப்பாடு செய்யப்பட்ட (ரேசன்) உணவுப் பொருட்களை (அரிசி, கோதுமை, சர்க்கரை) விற்பனை செய்ய அரசின் ஏஜெண்டாகப் பணியாற்றி வருகிறோம்.

இந்திய எண்ணெய் வாரியத்தின் விற்பனையாளர்களாயிருந்து கடந்த ஆண்டில் சுமார் ஏழே முக்கால் லட்சத்திற்கு மண்ணெண்ணெய் விற்பனை செய்திருக்கிறோம். உரங்கள் விநியோகம் செய்திருக்கிறோம்.

செங்கல்பட்டை அடுத்துள்ள திம்மாவரத்தில் நவீன அரிசி ஆலை நிறுவியிருக்கிறோம். இன்னும் பல மாவட்டங்களில் அரிசி ஆலைகள் நிறுவி இருக்கிறோம். திம்மாவரம் அரிசி ஆலையின் தனிப் பகுதியாக மாவு ஆலை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். மின் இணைப்புக் கிடைத்தவுடன் அதுவும் இயங்கத் தொடங்கும். அங்கு மஞ்சள், மிளகாய், சீயக்காய், பூண்டு ஆகியவைகளை அரைத்துக் கலப்படமற்ற பொடியாக விற்பனை செய்வோம்.

இவை தவிரச் சென்னையில் குளிர்பதனக் கூடத்தினை ஏற்படுத்தவும், மன்னார்குடியில் உர உருண்டைத் தொழிற்சாலையை ஏற்படுத்தவுமிருக்கிறோம்.

நிருபர் : உர உருண்டைத் தொழிற்கூடமா? ..

மன்னை : ஆமாம்! பொதுவாகத் தற்போது விற்கப்படும் உரங்கள் மாவு போல் உள்ளவை. ஆனால் மன்னார்குடியில் நிறுவப்பட்டுள்ள தொழிற்கூடத்தில் தயாரிக்கப்படும் உரம், ரவை போல் சிறுசிறு உருண்டைகளாக இருக்கும்.

நிருபர் : இதனால் என்ன அனுகூலம்?

மன்னை : மற்ற உரங்களில் சாதாரணமாக நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாஷ் என்ற மூன்று வகை உரங்களைக் கையினால் ஒன்றாகக் கலந்து தெளிப்பார்கள். இதில் சரியான கலவை ஏற்படாது. ஒரு பகுதியில் அதிக நைட்ரஜனாக இருக்கும். அடுத்ததில் பாஸ்பேட் அதிகமாக இருக்கும்.

அதோடு இதனை எடுத்துப் பயிர்களில் தூவும்போது காற்றடித்த பக்கத்தில் அவை சிதறி விழுமேயன்றி உரங்கள் தேவையான இடத்தில் விழாது. மேலும் இந்த வகையில் குறைந்தது 2 சதவீத அளவு உரம் வீணாகிறது.

ஆனால், இந்த உர உருண்டைத் தொழிற்சாலையில் தேவையான கலப்பு உரங்கள் உருண்டை வடிவில் தயாரிக்கப்படுகின்றன. அதனால் கலவை சரியாக இருக்கும்.



நவீன அரிசி ஆலையைக் கூட்டுறவு அமைச்சர் திறந்துவைக்கிறார்

உரத்தைப் பயிர்களின் மீது வீசும்போது, அவை சற்றுக் கனமாகயிருப்பதால் விவசாயி எங்கு தூற்றுகிறாரோ அங்கேயே விழும். சேதத்திற்கு இடமேயிருக்காது.

நிருபர் : இந்த உர உருண்டைகள் பிற உரங்களைப் போல் விரைவில் கரையுமா, பயிர்களுக்கு நல்ல பலன் தருமா?

மன்னை : சந்தேகமில்லாமல்! பிற உரங்களை விட இது சிறந்தது என்பேன். நான் ஒப்புக்காகச் சொல்லவில்லை. இந்த உரத் தொழிற்கூடம் துவங்குவதற்கு முன், அம்மாதிரி நிறுவனத்தைப் பார்வையிட்டு வர பம்பாய் சென்றிருந்தேன். அந்நகரில் விவசாயிகள் 'கியூ' வரிசையில் நின்று இந்த உருண்டை ரக உரங்களை வாங்கினார்கள். இந்த உரத்தைத் தான் வாங்க வேண்டுமென்று ஆவலோடு மக்கள் வாங்குவதாக அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அங்கு நான் உரம் வாங்க வந்த விவசாயிகள் சிலரை விசாரித்தேன். இதைவிட நல்ல கலப்பு உரம் இல்லையா என்று கேட்டேன். ''வேறு பல கலப்பு உரங்கள் இருக்கிறதென்றாலும், இந்த உருண்டை உரங்களின் மூலம் மிக அதிகப் பலன் கிடைக்கிறது. அதனால் தான் இதனையே விரும்பி வாங்குகிறோம். மற்ற உரங்களை விடத் தரத்திலும், கலவையிலும் இது சிறந்ததாக இருக்கிறது'' என்று ஒவ்வொருவரும் இந்த உரத்தினைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

அதோடு இந்த உரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யப்பட்ட பயிர்களையும் நான் பார்த்தேன். இங்கும் அந்த உரங்களைத் தருவித்து அதன் பலனை அனுபவ பூர்வமாக ஆய்ந்தறிய எங்கள் நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நிருபர் : இந்த உரத் தொழிற்சாலையை மன்னார்குடியில் வைப்பதன் நோக்கமென்ன?

மன்னை : மன்னார்குடியிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள பாமணி என்ற இடத்தில் இந்தத் தொழிற்சாலையை நிறுவுகிறோம். கட்டட வேலைகள் முடிவடைந்து விட்டன. இயந்திரங்களைப் பொருத்திக் கொண்டிருக்கிறார்கள். தைத் திங்களில் தொழிற்கூடம் திறக்கப்பட்டு உற்பத்தி தொடங்கும்.

அந்த இடத்தில் இத்தொழிற்சாலையை நிறுவுவதற்குக் காரணம் அங்கு மைய அரசின் இடங்கள் ஏராளமாகவுள்ளன. உரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க அவை மிக்க வசதியாயிருக்கும். மேலும் அந்தப் பகுதி, தண்ணீர் வசதியுள்ள பகுதி. இந்தக் காரணங்களால்

அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

நிருபர் : இந்த உரத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் எவ்வளவு?

மன்னை : நாள் ஒன்றுக்கு 150 டன் உரத்தினை இது உற்பத்தி செய்யும்.

நிருபர் : அவை எல்லாம் ஒரே மாதிரியான உருண்டை உரங்கள்தானா? வெவ்வேறு வகைகளில் தயாரிப்பீர்களா?

மன்னை : சிறிய ரவையிலிருந்து 6 மில்லி மீட்டர் விட்டம் உள்ள ரவைகள் வரை இந்த உரங்களைத் தயாரிக்கலாம். கரும்பு, நெல், சோளம், மற்றும் எந்தெந்தப் பயிர்களுக்கு என்னென்ன அளவுள்ள உருண்டை உரங்கள் தேவை என்று விவசாயத் துறையினர் கருதுகின்றனரோ அந்த அளவுகளில் தயாரித்து வழங்குவோம்.

நிருபர் : எவ்வளவு செலவில் இந்தத் தொழிற்சாலை துவங்கப்படுகிறது?

மன்னை : 25 லட்சம் ரூபாயில் இதனை ஏற்பாடு செய்திருக்கிறோம். தேசிய கூட்டுறவு வளர்ச்சி மன்றம் (என்.சி.டி.சி.) 18 லட்சம் ரூபாயை இதற்காக ஒதுக்கியிருக்கிறது.

நிருபர் : சென்னையில் குளிர் பதனச் சாதனம் நிறுவுவதாகக் குறிப்பிட்டீர்களே!

மன்னை : ஆமாம், சென்னை, மைலாப்பூர் பகுதியில் ஒன்றரை லட்ச ரூபாய்க்கு ஒரு இடத்தை



வாங்கினோம். அங்கே, உருளைக் கிழங்கு, காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைக் கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைப்பதற்காக இந்தக் குளிர் பதன வசதி ஏற்படுத்தத் திட்டமிட்டோம்.

நமது நாட்டில் பெருமளவு காய்கறிகளும், பழங்களும் சரியான குளிர் பதன வசதியில்லாத காரணத்தால், அழுகியும், வீணாகியும் போகின்றன. இதனால் கடினமாக உழைத்துப் பயிரிடும் விவசாயிகளுக்கும், வணிகர்களுக்கும் ஏராளமான பொருட் சேதம் ஏற்படுகிறது. இந்தக் குறைபாட்டை நீக்கவே இந்தக் குளிர் பதனச் சாதனம் அமைக்க எண்ணினோம்.

ஆனால் இதனை அவ்வட்டார மக்கள் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். பொது மக்களுக்கு நன்மை தரக்கூடிய ஒரு முக்கிய ஸ்தாபனத்திற்கு, அதுவும் ஒன்றரை லட்சத்திற்கு இடம் வாங்கிக் கட்டடம் கட்டப் போகின்ற போது இம்மாதிரி எதிர்ப்புத் தெரிவிப்பது, அதுவும் பொறுப்புள்ள சிலர் கூட இதற்குத் துணை நின்றது உண்மையிலேயே எங்களுக்கு மிகுந்த மன வருத்தத்தைத் தந்தது.

உற்பத்திக் காலங்களில் குறைந்த விலை விற்கும்போது காய்கறிகள், பழங்கள், கிழங்குகளை வாங்கி வைத்துக் கொண்டு விளையாத காலங்களில் மக்களுக்கு வழங்குகின்ற ஒரு சிறப்பான திட்டம் என்ற முறையில் இதனைத் துவக்க நினைத்தோம்.

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு கிராமத்திற்கு ஒன்று, என்ற முறையில் குளிர்பதனச் சாதனங்கள் இருக்கின்றன. நான்கூட இதனை நேரில் சென்று பார்த்தேன். இந்தச் சாதனம், வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கும், வணிகப் பெரு மக்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் பயன்படுவதாக உள்ளதை அங்கு கண்டேன்.

உருளைக்கிழங்கு, காய்கறிகள் போன்றவற்றைச் சேமித்து வைத்துத் தேவைப்படும் காலங்களில் விற்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அழுகிச் சேதமாகிற பொருட்கள் ஏராளம். அப்படி அழுகாமல் பொருட்களைப் பேணிக்காக்கும் நல்ல நோக்கத்



துடனேயே தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில் இதனை அமைக்க நினைத்தோம். அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் இப்போது புதிதாக வேறு இடம் பார்த்து அமைக்கவிருக்கிறோம்.

நிருபர் : இந்தக் குளிர்பதன அறை உங்களது கூட்டுறவு நிறுவனத்தார் வாங்கும் பொருட்களை மட்டும் பாதுகாத்து வைக்கப் பயன்படுமா? அன்றிப் பிறருக்கும் இடமளிப்பீர்களா?

மன்னை : சிறிய சிறிய காய்கறி வியாபாரிகளுக்கும், பழ வியாபாரிகளுக்கும் இது மிகவும் உதவியாக இருக்கும். அவர்கள் தங்களது பொருட்களை அழுகாமல் பேணிப் பாதுகாக்க இந்த அறைகளில் வைத்திருக்கலாம். அவர்களுக்குக் குறைந்த வாடகைக்கு இடமளிப்போம்.

நிருபர் : கூட்டுறவு நிறுவனங்கள் வளர்ச்சியடைய வேறு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

மன்னை: நமது விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா விதமான பொருளும் வாங்கவும் விற்கவும் கூட்டுறவுத் திட்டத்தினைப் பயன்படுத்தலாம். வடக்கே பஞ்சாப் மாநிலத்தில் இந்தக் கூட்டுறவுத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அத்தனை பொருட்களையும் கொள்முதல் செய்யும் பொறுப்புகளை ஏற்று நடத்துவதோடு அல்லாமல், விவசாயிகளுக்கான வீரிய விதைகள், உரம், பூச்சி மருந்துகள், டிராக்டர்கள் போன்ற இயந்திர சாதனங்கள் அனைத்தையும் மாநிலக் கூட்டுறவு நிறுவனம் மட்டுமே எடுத்து நடத்தும் சலுகையினை

மாநில அரசு வழங்கியிருக்கிறது. இதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலையும், பொது மக்களுக்கு மலிவான விலையில் நல்ல பொருட்களும் கிடைக்கின்றன. அதோடு கூட்டுறவு நிறுவனங்களும் நன்கு வளர்கின்றன. அங்கு, 1968-ம் ஆண்டில் 20 கோடி ரூபாய்க்கு மேல் நிகர லாபம் அடைந்துள்ளது, கூட்டுறவு நிறுவனம்.

பஞ்சாப் மாநிலத்தில், இந்தத் துறையை மிகவும் விரிவுபடுத்தியும், சிறப்பான முறையில் செயல்படுத்தியும் காட்டிய திரு வி. என். பூரி அவர்களே எங்களது அனைத்திந்தியக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவராக இருக்கிறார்.

---

## மீன்வளம்

தமிழ் நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் இரண்டே கால் லட்சம் டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழகக் கடற்கரைப் பகுதிகள் மீன் வளத்திற்கு மிகுந்த வாய்ப்புள்ளதாக உள்ளன.

இந்தியாவில் பிடிக்கப்படும் மீன்களில் 15 சதவீதம் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில்கிடைப்பவையே. கேரளத்திற்கு அடுத்தபடியாக மீன்வளத்தில் முன்னணியில் நிற்பது நமது தமிழகம்தான்.

---

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் நன்கு வளரவேண்டுமென்பதில் அவர் மிகுந்த அக்கறை காட்டிவருகிறார். தமிழ்நாட்டில் கூட்டுறவின் மூலம் பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற உதவி செய்கிறார்.

மாநில அரசும், அதிகாரிகளும், மிகுந்த ஒத்துழைப்புத் தந்து, ஊக்குவிப்பதால் தமிழகத்தில் இந்தக் கூட்டுறவுத் துறை வளர்ந்தோங்கி, பலனைத்தரும்.

## 39-ஆம் பக்கத்தில்

(1) மாயூரத்தில் தூய பவுல் உயர்நிலைப் பள்ளியின் அனுதை விடுதிக்கான கட்டடத்தை முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 13-12-1970-ல் திறந்துவைத்திடும் காட்சி.

(2) வெள்ளத்தினுல் பாதிக்கப் பட்டவர்களுக்கு முதல்வர், நிதி உதவி வழங்குகிறார். (மாயூரம்—13-12-1970)

(3) சென்னை, எழும்பூரிலுள்ள மாநிலப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா டிசம்பர் திங்கள் 8-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றுகின்றார்கள். வேளாண்மை, அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களும் கலந்து கொண்டார்கள்.

(4) வீராணம் திட்டத்திற்கான குழாய்கள் தயாரிக்கும் கிரேக்க நாட்டு நிறுவனமான "வேக்குவம் காங்கிரீட் ஓவர்சீஸ்" நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர் குழு. தமிழகப் பொதுப்பணி அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்களை சென்னை, கோட்டையில் 15-12-1970 அன்று சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

(5) மாநில சிறு சேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்களிடம், கிளாக்சோ லாபரெட்டரியின் பொது நிர்வாகி திரு. ரெங்கசாமி சிறு சேமிப்பில் முதலீடு செய்ய இரண்டு லட்சம் ரூபாய்களை வழங்குகிறார் (9-12-1970)

(6) சென்னை, அரசினர் தோட்டத்தில் (இராசாசி மண்டபம் அருகில்) நடைபெற்ற அனைத்திந்திய ரோட் காங்கிரஸ் கண்காட்சியைத் துவக்கி வைத்த வேளாண்மை-அரிசன நல அமைச்சர் பொருட்காட்சியினைப் பார்வையிடுகிறார் (6-12-1970)

## வண்ணப் படங்களில்

## 42-ஆம் பக்கத்தில்

(1) பயிற்று மொழி பற்றி, கோட்டையில் 14—12—1970 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கருத்தரங்கில் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் உரையாற்றுகின்றார்கள்.

(2) கொடி நாளை முன்னிட்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள், சென்னை சிறுவர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவனுக்கு, தொழிலாளர் நல-பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் பரிசு வழங்குகின்றார்.

(3) உலகத் தத்துவம் பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கில் தமிழகக் கல்வி அமைச்சர், பாண்டிச்சேரி ஆளுநர், சென்னை, மதுரை பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் ஆகியோர்.

(4) தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்திற்கு முதல்வர் அவர்கள் 7-12-1970 அன்று அடிக்கல் நாட்டினார்கள். கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

(5) சென்னையில் 17-12-1970 அன்று நடைபெற்ற, காவல் துறையினர் விளையாட்டுப் போட்டியின் போது அணிவகுப்பு மரியாதையினை முதல்வர் ஏற்றுக்கொள்கிறார்.


(6) கிறித்துமஸ் திருநாளினையொட்டி, சென்னை ஆபட்ஸ்பரியில் நடைபெற்ற சிறுமியர் கலைநிகழ்ச்சி (11-12-1970).

(7) சென்னையிலுள்ள செவி கேளாதார் சங்கத்தின் வெள்ளி விழா, செவிடு-ஊமைப்பள்ளியில் 13-12-70 அன்று நடைபெற்றது. விழாவினைத் தொடங்கி வைத்த தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களும், சர்தாரிணியும் அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியைப் பார்வையிட்டனர்.




1






2



3



4



5



6

# தமிழரசு

தமிழ்நாடு அரசின் திங்களிருமுறை ஏடு



## 1971 நாட்காட்டி

| | சனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 31 3 10 17 24 | ✣ 7 14 21 28 | ✣ 7 14 21 28 | ✣ 4 11 18 25 |
| திங்கள் | ✣ 4 11 18 25 | 1 8 15 22 ✣ | 1 8 15 22 29 | ✣ 5 12 19 26 |
| செவ்வாய் | ✣ 5 12 19 26 | 2 9 16 23 ✣ | 2 9 16 23 30 | ✣ 6 13 20 27 |
| புதன் | ✣ 6 13 20 27 | 3 10 17 24 ✣ | 3 10 17 24 31 | ✣ 7 14 21 28 |
| வியாழன் | ✣ 7 14 21 28 | 4 11 18 25 ✣ | 4 11 18 25 ✣ | 1 8 15 22 29 |
| வெள்ளி | 1 8 15 22 29 | 5 12 19 26 ✣ | 5 12 19 26 ✣ | 2 9 16 23 30 |
| சனி | 2 9 16 23 30 | 6 13 20 27 ✣ | 6 13 20 27 ✣ | 3 10 17 24 ✣ |


| | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 30 2 9 16 23 | ✣ 6 13 20 27 | ✣ 4 11 18 25 | 1 8 15 22 29 |
| திங்கள் | 31 3 10 17 24 | ✣ 7 14 21 28 | ✣ 5 12 19 26 | 2 9 16 23 30 |
| செவ்வாய் | ✣ 4 11 18 25 | 1 8 15 22 29 | ✣ 6 13 20 27 | 3 10 17 24 31 |
| புதன் | ✣ 5 12 19 26 | 2 9 16 23 30 | ✣ 7 14 21 28 | 4 11 18 25 ✣ |
| வியாழன் | ✣ 6 13 20 27 | 3 10 17 24 ✣ | 1 8 15 22 29 | 5 12 19 26 ✣ |
| வெள்ளி | ✣ 7 14 21 28 | 4 11 18 25 ✣ | 2 9 16 23 30 | 6 13 20 27 ✣ |
| சனி | 1 8 15 22 29 | 5 12 19 26 ✣ | 3 10 17 24 31 | 7 14 21 28 ✣ |

| | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|
| ஞாயிறு | ✣ 5 12 19 26 | 31 3 10 17 24 | ✣ 7 14 21 28 | ✣ 5 12 19 26 |
| திங்கள் | ✣ 6 13 20 27 | ✣ 4 11 18 25 | 1 8 15 22 29 | ✣ 6 13 20 27 |
| செவ்வாய் | ✣ 7 14 21 28 | ✣ 5 12 19 26 | 2 9 16 23 30 | ✣ 7 14 21 28 |
| புதன் | 1 8 15 22 29 | ✣ 6 13 20 27 | 3 10 17 24 ✣ | 1 8 15 22 29 |
| வியாழன் | 2 9 16 23 30 | ✣ 7 14 21 28 | 4 11 18 25 ✣ | 2 9 16 23 30 |
| வெள்ளி | 3 10 17 24 ✣ | 1 8 15 22 29 | 5 12 19 26 ✣ | 3 10 17 24 31 |
| சனி | 4 11 18 25 ✣ | 2 9 16 23 30 | 6 13 20 27 ✣ | 4 11 18 25 ✣ |





2



3




4



5



6



7

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்பட வேண்டும் !

தமிழரசு செப்டம்பர் 1, 1970 இதழில் விசைத்துளைக் கருவி என்ற பயனுள்ள செய்தி வெளியாகியிருந்ததைக் கண்டேன். விசைத் துளைக் கருவி வாடகைக்குப் பெற யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும் ? ஒரு அடிக்கு அல்லது ஒரு மணிக்கு என்ன வாடகை செலுத்த வேண்டும் ?

என்.கே. கொளந்தவேலப்ப கவுண்டர்,
(வழி) கோபிசெட்டிப்பாளையம்,

கோவை மாவட்டத்தில் விசைத்துளைக் கருவிகளைப் பெறுவதற்கு,

துணை வேளாண்மைப் பொறியாளர் (பார்வை),

லாலிரோடு,
கோயம்புத்தூர்-3.

என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

இடிக்கும் வகை (Percussion type) விசைத்துளைக் கருவியைப் பயன்படுத்தினால் 350 அடி ஆழம் வரை ஒரு நாளைக்கு (8 மணி நேர வேலை) ரூபாய் 8·00 வீதம் வாடகை செலுத்த வேண்டும். 350 முதல் 500 அடி ஆழம் வரை ஒரு நாளைக்கு ரூபாய் 10·00 வீதம் வாடகை கட்டவேண்டும். 500 அடி ஆழத்திற்கு மேலும் துளைக்க வேண்டுமானால், ஒரு நாளைக்கு ரூபாய் 15·00 வீதம் வாடகை செலுத்த வேண்டும்.

சுழலும் வகை (Rotary type) விசைத்துளைக் கருவியைப் பயன்படுத்தினால் 350 அடி வரை ஒரு நாளைக்கு ரூபாய் 10·00 வீதமும், 350 முதல் 500 அடி வரை ஒரு நாளைக்கு ரூபாய் 25·00 வீதமும், 500 அடிக்கு மேல் ஒரு நாளைக்கு ரூபாய் 40·00 வீதமும் வாடகை செலுத்தவேண்டும்.

மேலும் விளக்கம் தேவையானால் மேற்கூறப்பட்ட முகவரிக்கு எழுதவும் அல்லது நேரில் சென்று அறிந்து கொள்ளலாம்.

* * *

தமிழரசு இதழ் மூலம் கெங்குவார் ஓடைப் பகுதியில் கோகோ சாகுபடியும், தூத்துக்குடியைச் சுற்றியுள்ள உவர் மண் பகுதியில் வாழை சாகுபடியும் செய்யவிருப்பதை அறிந்தேன். 100 ஏக்கர் நிலம் வாங்கி கோகோ பயிரிடவும், 100 ஏக்கர் நிலம் வாங்கி வாழை சாகுபடி செய்யவும் விரும்புகிறேன். யாரிடம் நிலம் கேட்க வேண்டும் என்ற விவரங்களைக் கூறவும்.

எஸ். நடராஜன், சென்னை-4.

உங்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். கொள்கை அளவில், தனிப்பட்ட ஒருவர் நிலம் வாங்குவதற்குத் தமிழ்நாடு அரசால் உதவ முடியாது. நீங்களே அப்பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள உழவர்களைச் சந்தித்துக் கேட்டறிந்து பணம் கொடுத்துத்தான் வாங்க முடியும். நிலம் வாங்கியபின் சாகுபடி செய்வதற்கு வேண்டுமானால் தமிழ்நாடு அரசு கடன் கொடுத்து உதவி செய்யும்.

* * *

'கேளுங்கள் தரப்படும்' என்ற கட்டுரையை தமிழரசு செப்டம்பர் 16, இதழில் படித்துப் பரவசமுற்றோம். ஆனால் எங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் நெல் சாகுபடிக்கு மட்டுமே உரக் கடன் திட்டம் அமுலில் உள்ளதாகக் கூறுகின்றார்கள். மற்றப் பயிர்களுக்குக் கடன்பெற யாரை நாடுவது ?

கே. கிருஷ்ணமூர்த்தி,
மேலபாலூர்,

இதுவரை உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் மற்றப்பயிர்களுக்கு யாரும் உரக் கடன் கேட்டிருக்க மாட்டார்கள். அதனால்தான் உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் நெல்லுக்கு மட்டுமே உரக் கடன் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் நிதி ஒதுக்கியிருப்பார். இனியாவது ஒவ்வொரு ஊரிலும் என்னென்ன பயிருக்கு, எவ்வளவு தொகை உரக் கடனாகத் தேவைப்படும் என்பதை ஊராட்சித் தலைவர் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு முன்கூட்டியே தெரிவிக்க முயற்சி செய்யுங்கள். ஆணையாளர் அதன் பின் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதி என்னென்ன பயிருக்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு வேண்டும் என்று முன்கூட்டியே கேட்க இயலும். இவ்வாறு முன்கூட்டியே தெரிவித்தால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர், தேவையான அளவு தொகையை ஒதுக்கீடு செய்ய முடியும். மேலும் விவரம் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரைக் கலந்தாலோசிக்கவும்.

* * *

'உரமிடும் செலவு குறைய' என்ற கட்டுரையில் டை அமோனியம் பாஸ்பேட் உரம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. டை-அமோனியம் பாஸ்பேட் உரம் எங்கே கிடைக்கும் என்று கூற முடியுமா ?

எம். லிங்கய்யா,
கடனாடு கிராமம்,

உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலும், தனிப்பட்ட உர வியாபாரிகளிடத்தி

லும் டை-அமோனியம் பாஸ்பேட் கிடைக்கக்கூடும். அவர்களிடம் இவ்வுரம் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரையோ அல்லது உதகையில் உள்ள இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டச் செய்தி நிலையத்திலோ கேட்டால், அவர்கள் அவ்வுரம் கிடைக்கும் இடங்களைத் தெரிவிக்கக்கூடும்.

* * *

**என் நெல் வயலில், திட்டுத்திட்டாகப் பயிர்கள் கரைந்து காணப்படுகின்றன. பயிர்கள் எரிந்து அழிந்து போய்விட்டதுபோல் காணப்படுகின்றன. சப்பாத்திக் கள்ளியில் உள்ள பூச்சிபோல் முட்டை வடிவப் பூச்சிகள் நெல்லின் சோலையில் காணப்படுகின்றன. இதற்கு என்ன மருந்து தெளிக்க வேண்டும்?**

டி.பி. சின்னசாமி ரெட்டியார்,
ஆவினங்குடி,

தங்களுடைய நெற்பயிர் மாவுப் பூச்சி (Mealy Bags) யினால் தாக்கப்பட்டுள்ளது. மாவுப் பூச்சி செடியின் சாற்றை உறிஞ்சிவிடுவதால், பயிர்கள் நன்கு வளர்ச்சியுறாமல் அழிந்துவிடும். கதிர் வெளிவராமல், பதராகிக் குருத்தினுள்ளேயே அமுங்கி இருக்கும். இப்பூச்சிகள் பாசன நீரில் மிதந்தும், ஊர்ந்தும் அடுத்தடுத்த வயல்களுக்குப் பரவுகின்றன. நெற்பயிர் இல்லாத காலத்தில் புல்களில் இப்பூச்சிகள் வாழுகின்றன.

நெல் வயலில் திட்டுத் திட்டாக அழிந்து காணப்படும் இடங்களில் உள்ள பயிர்களை அகற்றித் தீயிட்டு எரித்து விடுதல் வேண்டும். வயல் வரப்புகளில் புல்கள் இல்லாமல் கவனிக்க வேண்டும். இப் பூச்சியை அழிக்க 200 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இப்பூச்சிக்கு டி.டி.டி., என்ட்ரின் ஆகிய மருந்துகள் தெளித்துப் பயனில்லை. இந்தப் பூச்சியை அழிக்கக் கையால் இயங்கும் ஸ்ப்ரேயரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

* * * *

**நான் ஒரு ஏக்கரில் மாந்தோப்பு வளர்க்க விரும்புகின்றேன். அதற்கு அரசாங்கம் எவ்வளவு கடன் உதவும்? யாருக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்?**

ராமசாமி, கோவில்பாளையம்,

தமிழ்நாடு அரசு மாந்தோப்பு ஏற்படுத்த ஏக்கருக்கு ரூபாய் 300·00 வீதம் நீண்டகாலக் கடன் கொடுத்து உதவுகிறது. உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலர் மூலமாக, அரியலூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

* * * *

**மார்கழிப் பட்டத்தில் இறைவை மணிலா பயிரிட விரும்புகின்றேன். இப்பட்டத்திற்கு ஏற்ற நல்ல ரகம் எது? அது எங்கு கிடைக்கும்?**

சு. பெருமாள்,
பட்டுக்கோட்டை.

டி.எம்.வி. 7 என்ற மணிலா ரகத்தை மார்கழிப் பட்டத்தில் பயிரிடலாம். இதன் வயது 105 நாட்கள். இவ்விதையை உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பெற்றுக்கொள்ளலாம். அங்கு அவ்விதை இல்லாவிட்டால், வேறு இடத்திலிருந்து வரவழைத்துக் கொடுப்பார்கள்.

* * *

**மற்ற மாநிலங்கள் செய்யாத அளவுக்குத் தமிழ்நாடு அரசு செய்த சாதனை என்ன?**

கே. கண்ணன், பாண்டிச்சேரி-1.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறச் செய்தது, பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடியாகி வந்த நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்தது, புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்களித்தது, உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளைப் பெரும்பரப்பில் பயிரிட்டுவருவது இப்படிப் பல்வேறு சாதனைகளைக் கூறமுடியும். தங்களின் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்க வேண்டுமானால், தமிழரசு இதழில் உள்ள அத்தனை பக்கங்களையும் ஒதுக்கினாலும் போதாது! எனவே, தமிழ்நாடு அரசின் சாதனைகளை அறிந்துகொள்ளத் தயவுசெய்து தமிழரசு இதழில் சென்ற இதழ் முதல் வெளிவரும் 'நன்மைகள் 1000, 1000' என்ற பகுதியைத் தொடர்ந்து படித்துவருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## வெண்பாப் போட்டி-7

**ஈற்றடி : எங்கும் தமிழே இனி**

முடிவு நாள் : 16—1—1971

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!

தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார், அதியமானின் போர் ஆற்றல் பற்றித் தெரிவிப்பதற்காக, அவனால் போரிலே உடைக்கப்பட்ட ஆயுதங்களின் பட்டியலைச் சொல்லியதுபோலத் தன் கணவன்



# தப்பித்து வந்தானம்மா!

எஸ்.எஸ்.சுந்தரம்

ராமன் ஒவ்வொரு நாளும் வீட்டிலே போர்க்களத்தை உருவாக்கி, வேளை தவறாமல் உடைத்துக் காயப்படுத்திய பாத்திர பண்டங்களை எடுத்துத் தனது அப்பாவிடம் காண்பித்துக் கொண்டிருந்தாள் அப்பாவி சீதா. அவற்றைப் பார்த்த அருணகிரி முதலியாரின் வாய் அடைத்துப் போனாலும், கண் அடைத்துப் போகவில்லை என்பதை நிரூபித்தன முத்துப்போல் எழுந்த கண்ணீர்த் துளிகள்.

உண்மையில் அன்று அவரது வாய் அடைத்துப் போயிருந்ததால் தான் ராமன் என்று சொல்லப்படும் ஓர் இராவணனின் கையிலே சீதாவைப் பிடித்துக்கொடுக்க நேர்ந்துவிட்டது. அன்று அவரது வாய் அடைத்துப் போனதற்குக் காரணமும் இருந்தது. தனது அருமை மகளுக்குத் திருமணம் செய்து பார்க்கவேண்டும் என்ற ஆசை நிறை

வேறுவதற்குள்ளே சீதாவின் தாய் கோமதிக்கு உலக விடுதலை கிடைத்துவிட்டது. அருணகிரி அழுது புலம்பினர்; தன் மனைவி இறந்ததைப் பற்றிக் கூட அவர் கவலைப்படவில்லை; வயதானவர்கள் உலகத்தை விட்டு விரைந்து விடை பெற்றுச் செல்லுவது நல்லதுதான் என்பது அவரது கருத்து. ஆனால் திருமண வயதில் இருக்கும் ஒரே மகளுக்குப் பெண் துணையில்லாமல் போய்விட்டதே என்றுதான் அருணகிரி கவலைப் பட்டுக் கண்ணீர் விட்டார்.

சொந்தக்காரர்களின் உதவி, தனக்குக் கிடைக்காதென்பது அவருக்கு நன்ருகத் தெரியும். அவரது அறுபது வருட அனுபவத்தில், சொந்தக்காரர்கள் என்ருல், சுகம் அனுபவிக்கும்போது அதைப் பங்கு போட்டுக்கொள்ள வருபவர்கள் என்றும், துன்பம் அனுபவிக்கும்போது அதைப் பங்கு போட்டுக்கொள்ள வராதது மட்டுமல்ல, அப்போது கேலி பேசுபவர்கள் என்றும் அறிந்து வைத்திருந்தார். அதனுல்தான் தன் மனைவியின் சாவு அவரை வாயடைக்க வைத்து விட்டது. கன்னிப் பெண் சீதாவை—வெகு விரைவில் கல்யாணப் பெண் சீதாவாக்கிவிட நினைத்தார். அந்த அவசரத்தில்தான், உயிர் நண்பர் ஒருவர் குறிப்பிட்ட வரன் ராமனைத் தனது மகளுக்கு நிச்சயம் செய்துவிட்டார்.

சீதாவுக்கும் ராமனுக்கும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில்தான் திருமணம் நடைபெற்றது. நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் திருமணத்திற்கு அவசியம் வருகை புரிய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் ஞாயிற்றுக்கிழமை அன்று திருமணம் வைத்தார் அருணகிரி. ஏராளமான பணச் செலவு செய்து திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

'' ராகு காலத்திற்கு முன்பே வரவேற்பு நிகழ்ச்சியைத் தொடங்க வேண்டும் '' என்ருர் அருணகிரி.

மாப்பிள்ளையின் தந்தை தாமோதரமும், அருணகிரியைப் போலவே சம்பிரதாயங்களில் நம்பிக்கை உடையவர்தான். அதனுல் அருணகிரியின் வேண்டுகோளை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

சரியாக மாலை நான்கு மணிக்கு சீதாவை அலங்காரம் செய்தார்கள். அவளைப் பொறுத்த அளவில் வரவேற்பு நிகழ்ச்சிக்கு அவள் தயாராகிவிட்டாள். மாப்பிள்ளையை அழைத்து வரலாம் என்று அவரது அறைக்குச் சென்ருர்கள். அதிர்ச்சிக்கு ஆளானுர்கள்; மாப்பிள்ளையை அங்கே காணேம்!

மகனைக் காணவில்லை என்பதைத் தெரிந்த தாமோதரம் ஆத்திரம் அடைந்தார்; அவரது முறுக்குமீசை படபடத்தது. கண்கள் கோபத் தீயைக் கொப்பளித்தன.

'' மடையன் இன்னைக்குக் கூடவா இப்படி நடந்துக்குவான்? அறிவு கெட்டவன்!''—கோபமும் பதற்றமும் ததும்பக் கூறினுர் தாமோதரம்.

அவரது பேச்சின் பொருளை அறிந்துகொள்ள முடியாமல் திண்டாடினுர் அருணகிரி.

'' சம்பந்தி! வரவேற்பு நிகழ்ச்சியை ஏழு மணிக்கு மேலே வச்சுக்குவோம்! ஏன்னு, என் பையன், வரவேற்பை விட வேற ரொம்ப முக்கியமான ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருக்கிருரு... அவரு வந்துரட்டும் ''—வெறுப்பும் வெட்கமும் பின்னிக் கொண்டிருந்தது தாமோதரத்தின் குரலில்.

கவலையோடு உட்கார்ந்துவிட்டார் அருணகிரி. அங்கே வந்திருந்த விருந்தாளிகள், நண்பர்கள், ஒவ்வொருவரும் காதைக் கடித்துக்கொண்டார்கள். மணமகன் ராமன் எங்கே சென்றிருக்கிருன் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்திருந்தது என்பதை அவர்களின் முணுமுணுப்புத் தெரிவித்துக்கொண்டிருந்தது.

சரியாக ஏழு மணிக்கு, வாசலில் ஒரு பியட் கார் வந்து நின்றது. பிரமுகர் எவரோ வருகிருர் என்று எண்ணி அனைவரும் வாசலை நோக்கினுர்கள். அதிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தான் புது மாப்பிள்ளை ராமன். வழக்கமான அவனது நிமிர்ந்த நடை அப்போது அவனிடம் காணப்படவில்லை. வாட்டமே அவனிடம் குடி கொண்டிருந்தது. அவனது வதனம் கறுத்திருந்தது. குனிந்து நிலத்தைப் பார்த்தபடி, உள்ளே நுழைந்தான்.

'' டேய் ராமா! உனக்கு அறிவிருக்குதாடா?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். அவனது தந்தைதான் அந்தக் குரலை எழுப்பியவர்.

'' மன்னிச்சுங்குங்க அப்பா... தெரியாமெ.......'' —ராமன் வார்த்தையை முடிக்கவில்லை.

'' என்னடா தெரியாமெ.... அது, இதுன்னு அளக்குறே கல்யாணத்தன்னிக்காவது பொறுப்பா புத்திசாலித்தனமா நடந்துக்க வேண்டாமா?''—அலறினுர்.

'' அதுக்குத்தான் அன்னிக்கே சொன்னேன், கல்யாணத்தை ஞாயிற்றுக்கிழமை வைக்காதீங்கன்னு! நீங்க கேட்டீங்களா?''—ராமன் சற்றுக் கோபத்துடன் பேசினுன்.

'' சரி சரி! இன்னிக்கோட அந்தக் குதிரை ரேஸ் பழக்கத்தைத் தொலைச்சுத் தலை முழுகு!''—கண்டிப்புடன் கூறினுர் தாமோதரம்.

ராமன் பதில் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தான்.

''சரி, சரி, முகத்தை எல்லாம் சீக்கிரம் கழுவிட்டு ரிசப்ஷனுக்கு வந்து சேரு! உனக்காக ரொம்பப் பேரு காத்துக்கிட்டிருக்காங்க''—நிதானமாகச் சொல்லிக் கொண்டிருந்தார் தாமோதரம். ராமன் தலை குனிந்தவாறே உள்ளே சென்ருன்.

அருணகிரி மனம் உடைந்து போனுர். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல என்பார்களே, அதைப் போல, நல்ல வரன் என்று தனது ஒரே மகளை மணம் செய்து கொடுக்க, அந்த வரன் குதிரை ரேஸ் பிரியனுக இருக்கிருனே என்று மனம் வருந்தினுர். பாவம், விதியின் மேலும், தலை எழுத்தின் மேலும் பழியைப் போட்டுவிட்டு ஓரளவு ஆறுதல் அடைந்தார். அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் அவரால்?

சீதா கண்ணீர் விட்டாள்; திருமண வீடு என்கிற காரணத்தால் சத்தம் போட்டு அழ

வில்லை அவள்; அடக்கிக் கொண்டாள். அவளது முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் அருணகிரிக்கும் அழுகை வந்தது. மேலும் அந்த இடத்திலேயே இருக்க அவரால் முடியவில்லை. சட்டென்று வெளியே சென்றுவிட்டார்.

ஒருவழியாகத் திருமண வைபவங்கள் எல்லாம் முடிவடைந்தன. தனிக் குடித்தனம் நடத்த வேண்டும் என்று மாப்பிள்ளை ராமன் விரும்பினான். அவனது தந்தை தாமோதரம் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அது நியாயம் என்றும் அவர் சொல்லிக்கொண்டார். ஆனால், அருணகிரிக்குக் கொஞ்சங்கூட விருப்பமில்லை. குடும்பத்தின் பொறுப்பை உணராத மாப்பிள்ளை ராமன், தனிக்குடித்தனம் நடத்துவதை, அவர் துளியும் வரவேற்கவில்லை. தன் மகள் சீதாவை மிகுந்த தொல்லைக்கு ஆளாக்குவான் என்பதை அவர் உணர்ந்தார்.

அருணகிரி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ராமனின் எண்ணத்தை அவரால் மாற்ற முடியவில்லை. கொஞ்சங்கூட இரக்கம் காட்டாமல் பாறையாகக் காணப்படும் ராமனிடம் தனது வேண்டுகோள் பயனளிக்காது என்பதை உணர்ந்து கொண்ட அருணகிரி, தன் மகளுக்கு மட்டும் சில அறிவுரை சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

ஏறக்குறைய ஒரு வருடம் ஆகிவிட்டது. அதன் பிறகு தற்போது தான் மகளின் வீட்டை எட்டிப் பார்த்திருக்கிறார். அதுவும் அவரை உடனடியாக வரச் சொல்லி அவரது மகளே கடிதம் எழுதிய பின்தான் வந்திருக்கிறார். அவரிடம் தனது கணவனின் அட்டகாசத்தைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள் சீதா.

கணவனின் ரேஸ் பைத்தியம் தீரவில்லை என்பதையும்—அதை எடுத்துச் சொல்லித் தடுத்த போது—தன்னை அவர் அடித்துத் துன்புறுத்திய நிகழ்ச்சியையும்—பாத்திர பண்டங்களை விட்டெறிந்து படுகளப்படுத்திய வீரச் செயல்களையும் ஒன்று விடாமல் சொல்லிக்கொண்டிருந்தாள். திருமண தினத்தன்றே தன்னைக் கவலைக்காளாக்கிய தன் மருமகனின் தற்போதைய திருவிளையாடலைக் கேள்விப்பட்டு, அருணகிரிக்குப் புதிதாகக் கவலை ஏற்படவில்லை. ஆனால் பொறுமல் மட்டும் ஏற்பட்டது.

"சீதா இனியும் நான் வாய் அடைத்துப்போய்—ஊமையைப் போல் காட்சியளிக்க மாட்டேன். கொட்டினால்தான் தேள்; கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி என்பது சரியாகத்தான் இருக்கிறது. வரட்டும் மாப்பிள்ளை! அவரிடம் பேசிக் கொள்கிறேன்" — குமுறலுடன் கூறினார் அருணகிரி.

"என்ன பேசப் போகிறீர்கள் மாமா?" என்று கேட்டபடியே வீட்டிற்குள் வந்தான் ராமன்.

அருணகிரிக்குத் திக்கென்றது; வெளியூரிலிருந்து வந்திருக்கும் நம்மை எப்போது வந்தீர்கள், எப்படி இருக்கிறீர்கள் என்றெல்லாம் விசாரிக்காமல், பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளும் மாப்பிள்ளை ராமனின் செயல்—அருணகிரியை வேலாகக் குத்திக்கொண்டிருந்தது. ஏற்கனவே உள்ளம் நொந்து கிடக்கும் அவர், தன் மகளிடம் தெரிவித்தபடி—பிள்ளைப் பூச்சி பட்டியலில் இருந்து, கொட்டும் தேளின் பட்டியலுக்கு மாற முனைந்தார்.

"என்ன பேசப் போகிறேன் என்றுதானே கேட்கிறீர்கள் மாப்பிள்ளை! இனிமேல் பேசுவதாக இல்லை; செயலில் இறங்குவதாக முடிவு செய்துவிட்டேன்" கொதிப்புடன் கூறினார் அருணகிரி.

"என்ன மாமா மிரட்டிப் பார்க்கிறீர்கள்? உங்கள் மிரட்டலுக்கெல்லாம் நான் பயந்த ஆள் இல்லை"—கேலியும் கிண்டலும் ராமனின் வார்த்தைகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.

"கிளியை வளர்த்து உன்னிடம் கொடுத்தேன்; நீ கிறுக்குத்தனமாக நடந்துகொண்டிருக்கிறாயே!"—உள்ளம் குமுறக் கேட்டார் அருணகிரி.

"வேண்டுமென்றால் உங்கள் கிளியை உங்கள் வீட்டுக்கே அழைத்துச் செல்லுங்கள். நான் வேறொரு குயிலைப் பார்த்துக் கொள்கிறேன்"—திமிருடன் பேசினான் ராமன்.

"நல்ல குடும்பத்தில் பிறந்து நாராசமாகப் பேசுகிறாயே, நியாயம் கெட்டவனே! சூதாட்ட நினைவில் அலைந்து—கிண்டிக்குப் படையெடுக்கும் உன் அற்பப் புத்திக்கு விடிவு காலமே கிடையாதா?"—அருணகிரி கேட்டார்.

கிண்டிப் பேச்சைப் பற்றிப் பேசியதும் ராமனால் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. சீறினான்! அவனது வார்த்தைகளில் மரியாதை குறையத் தொடங்கிவிட்டது.

"நான் சம்பாதிக்கும் பணத்தைத்தான் செலவு செய்கிறேன். நீர் ஒன்றும் எனக்குக் கொட்டியளந்துகெட்டுப்போகவில்லையே"—கேலியுடன் பேசினான் ராமன்.

"மரியாதையுடன் பேசு"—அருணகிரி கதறினார்.

"மரியாதை கொடுத்தால் தான் மரியாதை கிடைக்கும்! நினைவிருக்கட்டும்!" — ராமன் பேசினான்.

இனியும் அவர்களது பேச்சைக் கேட்டுக்கொண்டு வாளாவிருந்தால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்த சீதா, "அப்பா தயவு செய்து பேச்சை நிறுத்துங்கள். இது எங்கள் குடும்ப விவகாரம். நீங்கள் தலையிட வேண்டாம்" என்று சொன்னாள்.

சீதாவின் வார்த்தையைக் கேட்டதும் துடித்துவிட்டார் அருணகிரி. அவசரமாக வந்து சேரும்படிக் கடிதம் எழுதிய தன் மகள், இப்படித் திடீரென்று கணவனின் பக்கம் திரும்புவாள் என்று அவர் சற்றும் எதிர்

### பிறமொழி

கண்ணுக்கு மையிடுவது போல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்—மை அதிகமானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ அதுபோல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

—பேரறிஞர் அண்ணா

பார்க்கவில்லை. கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற வாக்குப்படி, தன் மகள் நடந்துகொள்கிறாள் என்பது அவருக்குத் தெளிவாகிவிட்டது.

சீதா சொல்லியதுபோல, அவர்களின் குடும்ப விவகாரம்தான் அது என்பதை உணர்ந்தார். மகளாக இருந்தால் என்ன மகனாக இருந்தால் என்ன, திருமணம் செய்து கொடுத்து விட்டோம் என்றால் அதன்பின் நமக்கு எந்த உரிமையும் கிடையாது. வரலாம் போகலாம். அவ்வளவுதான்; வேறு எந்த வகையிலும் தலையிட நமக்கு நியதி இல்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

"சீதா! நீ சொன்னது நியாயம்தாம்மா! இப்பத்தான் எனக்குப் புத்தி வருது! இனிமே ஒங்க குடும்ப விவகாரத்தில் நான் தலையிடமாட்டேன்! நான் வர்றேன்" — திரும்பிப் பார்க்காமலேயே கண்ணீரைக் காணிக்கையாக்கிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் அருணகிரி.

அவர் சென்ற பின் குமுறிக் குமுறி அழுதாள் சீதா. அவளைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்து விட்டுப் படுக்கை அறைக்குள்ளே நுழைந்தான், ராமன். சட்டையைக் கழற்றி 'ஸ்டாண்டி'லே மாட்டிவிட்டுத், தொப்பென்று படுக்கையில் சாய்ந்தான். சீதா மெதுவாக அவன் அருகில் சென்றாள். கட்டிலில் அமர்ந்தாள். அவனது கால்களை வருடிக் கொண்டே பேச முற்பட்டாள்.

"இந்த ரேஸ் பழக்கத்தை விட்டு ஒழிச்சிங்கன்னா எவ்வளவு நல்லா இருக்கும்" — மெதுவாக ஆரம்பித்தாள் சீதா.

"எனக்குப் புத்தி சொல்ல வந்திருக்கியா" — கோபத்துடன் கேட்டான்.

"இல்லை! உங்களுக்குப் புத்தி சொல்ற அளவுக்கு நான் ஒன்னும் அவ்வளவு பெரியவ இல்லை ....உங்க நன்மைக்காகத்தான் சொல்றேன்...." சீதா சொன்னாள்.

"சரி சரி....எனக்கு வேண்டிய அளவு புத்தி இருக்குது;




நீ போயி உன் வேலையைக் கவனி" ராமன் எரிச்சலுடன் சொன்னான்.

அதற்கு மேலும் அங்கே இருக்க விரும்பவில்லை சீதா; ராமனின் குணம் அவளுக்குத் தெரிந்ததுதானே! இனியும் இருந்தால் பாதத் தாமரைகளால் தன்னை மிதிப்பான் என்பது அவளுக்குத் தெரியும்; அதனால், மௌனமாக, எழுந்து சென்று விட்டாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதை 'காலண்டர்' அறிவித்துக் கொண்டிருந்தது. ராமனின் முகத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சி அதை உறுதி செய்தது. மளமளவென்று குளித்தான். பளபளவென்ற உடைகளை அணிந்து கொண்டான். பந்தயக் குதிரையைப் போல 'விர்' ரென்று பறந்தான். அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு சிலை போல நின்று விட்டாள் சீதா.

இரவு ஏழு மணி இருக்கும், "சீதா சீதா" என்று அழைத்தபடி வீட்டிற்குள் வேகமாக வந்தான் ராமன். உள் அறையில் வேலைசெய்துகொண்டிருந்த சீதாவின் காதுகளில் அந்த அழைப்பு தெளிவாகக் கேட்டது. உடனே அறையை விட்டு வெளியே வந்தாள். கூடத்தில் நின்று கொண்டிருந்த ராமனை நோக்கி வந்தாள். "எந்தக் குதிரை இன்று கணவனின் பணத்துக்கு வாரிசாக வாய்த்ததோ" என்ற திகில் அவளைப் பேசவிடாமல் ஊமையாக்கிக் கொண்டிருந்தது.

"சீதா! இன்னைக்கு நான் ஜெயிச்சிட்டேன்! ஆமா! ஜெயிச்சிட்டேன்" — மகிழ்ச்சி ததும்பச் சொன்னான் ராமன்.

சீதா பதில் எதுவும் பேசவில்லை, மௌனமாக இருந்தாள்.

"பணம் எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்தி முப்பதாயிரம் ரூபாய்" — ராமன் உணர்ச்சியுடனும் பாவத்துடனும் சொன்னான்.

சீதா மீண்டும் மௌனமாக இருந்தாள்.

"என் மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா? இதோ பாரு நோட்டுக் கத்தைகள்" — கோட்டுப்பையில் இருந்து எடுத்து அவள் கண்களுக்கு எதிரே நீட்டினான் ராமன்.

அவ்வளவும் புத்தம் புதிய நோட்டுகள். 'சலவைத் தாள்கள்' அதைப்பார்த்த சீதாவிற்கு ஒன்றுமே புரியவில்லை! அவளுக்குத் தலையே சுற்றுவது போலத் தெரிந்தது. தன்னைச் சமாளித்துக் கொள்வதற்கே சில வினாடிகள் ஆயின அவளுக்கு.

"ரேஸுக்குப் போயி பணத்தைத் தொலைத்து விட்டு வர்ற போதெல்லாம் எரிஞ்சு எரிஞ்சு விழுவியே, இப்ப என்ன சொல்றே? அவ்வளவும் சலவைத்தாள்" — சொல்லியவாறு சில ஆயிரங்களை அவள் முன்னாலே போட்டான்.

"இந்தப் பத்தாயிரத்துக்கு நகை; இந்த ஐயாயிரத்துக்குப் பட்டுப் புடவை! இந்தப் பணத்துக்கு அது! அந்தப் பணத்துக்கு இது" — ராமன் அடுக்கிக் கொண்டே இருந்தான்.

சீதா இன்னமும் மௌனமாகவே இருந்தாள்; எந்த வித உணர்ச்சியும் காட்டிக் கொள்ளவில்லை அவள்! தான் தோற்று வந்த போதெல்லாம் தன் மீது ஆத்திரம்



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை-1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி 20461. 20462.
எண்கள்: 20463. 20464. 20465.
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

கொண்ட சீதா, இப்போது வெற்றிபெற்றுப் பணத்தை அள்ளிக் கொண்டு வந்திருக்கும் பொழுது தன்னை நிச்சயம் வரவேற்றுப் பாராட்டுவாள் என்ற எண்ணம் ராமனது இதயத்திலே தவழ்ந்து கொண்டிருந்தது. ஆனால், சீதாவின் இதயம் துன்பத்திலே வெந்து கொண்டிருந்தது. அந்தப் பணத்தை ஏற்றுக் கொள்ள அவள் தயாராக இல்லை. கறுப்புப் பணத்தையும் லஞ்சப் பணத்தையும் எவ்வளவு வெறுப்பாளோ அதைவிடப் பல மடங்கு வெறுப்புடன் அந்த நோட்டுக்கட்டுகளைக் கவனித்தாள்.

அந்தப் பணம் கறை படிந்ததாகவே அவளுக்குப் பட்டது. சலவைத் தாள்களை உன்னிப்பாகக் கவனித்தாள்; அதிலே அச்சிடப்பட்டிருக்கும் அசோக தூபியைப் பார்த்தாள். அந்தத் தூபியிலே இருக்கும் குதிரையின் உருவம் அவளுக்கு ரேஸ் குதிரையின் வடிவமாகவே தெரிந்தது; அந்தக் குதிரை ஓடுவது போலவும், அதன் மீது பலபேர்கள் பணம் கட்டுவது போலவும், அவர்களெல்லாம் தோற்று விடுவது போலவும், தோற்றவர்கள் எல்லாம் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போவது போலவும், அவர்கள் வீட்டுப் பெண்களெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக நிற்பது போலவும், குழந்தைகள் எல்லாம்பசி, பட்டினியால் துடிப்பது போலவும் அவளது கண்களுக்குத் தெரிந்தது; அவ்வளவுதான், தன்னை மீறிக் கத்தி விட்டாள்!

'' வேண்டாம்! வேண்டாம்! இந்தப் பணத்தை இப்பவே எடுத்துக்கிட்டுப் போங்க! பல பேரை ஏழையாக்கிட்டு ஒருத்தரைப் பணக்காரரா ஆக்கிற இந்தப் பந்தயப் பணம் நமக்கு வேண்டாங்க! இந்தப் பணத்தை எந்தக் கிணத்துலேயாவது கொண்டுபோய்ப் போட்டிடுங்க'' —சீதா அலறினாள்.

அவளது அலறலைக் கேட்டு, ராமனே பயந்து போய் விட்டான். அவனுக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. மறுகணம், ஏதோ யோசனை தோன்றியது; அதற்கு மேல் அங்கே இருக்க அவன் விரும்பவில்லை; சலவைத் தாள்களை எடுத்து, கோட்டுப் பைக்குள்ளே திணித்துக் கொண்டான்; 'விர்' என்று வெளியே சென்றுவிட்டான்.

* * *

இரண்டு மூன்று தினங்கள் கழித்து வீட்டுக்குத் திரும்பிய ராமனிடம் ஏதோ ஒரு மாறுதல் காணப்பட்டது. பழைய படபடப்பு அவனிடம் இல்லை. நிதானமும் நிம்மதியும் இப்போது அவனிடம் குடிகொண்டிருந்தது. அவனது அகத்திலே தெளிவும் முகத்திலே மகிழ்வும் காணப்பட்டது. சீதாவை அருகில் அழைத்தான்; அவளிடம் அன்பாக நடந்து கொண்டான். இனிமேல் கிண்டி ரேஸுக்குச் செல்வதில்லை என்று உறுதி கூறினான். இனி சீதாவின் அறிவுரைப் படியே சகலகாரியங்களிலும் நடந்து கொள்ளப்போவதாகவும் சொன்னான். அப்படியெல்லாம் சொல்லிவிட்டுக் கையில் இருந்த பொட்டலத்தை வேகமாகப் பிரித்தான். சீதாவின் பார்வை அந்தப் பொட்டலத்திலே பதிந்தது. அவளுக்கே அதிசயம் ஏற்பட்டு விட்டது. அவளுக்குப் பிடித்தமான லட்டு வாங்கி வந்திருந்தான் அவன். அந்த லட்டு உருண்டையை உதிர்த்துச் சில முத்துக்களை சீதாவின் வாயிலே ஊட்டினான். அந்த லட்டு மிகுந்த சுவையுடன் திகழ்ந்தது. உண்மையிலேயே லட்டு இனித்ததா அல்லது அவளது கணவன் நீண்ட நாளுக்குப் பின்னர் அவளிடம் அன்பாக நடந்து கொண்ட செயலால் அது இனிப்பாகக் காணப்பட்டதா என்று அவளால் யூகிக்க முடியவில்லை.

சீதாவுக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவே இல்லை. தன் கணவன் திருந்தியது குறித்து அவள் திருப்தி அடைந்தாள். அவளது கண்கள் ஆனந்தக் கண்ணீரை வடிக்கத் தலைப்பட்டன. ஆனால் அவளது கரங்கள் மட்டும் கணவனின் கோட்டுப் பையைத் துழாவிக் கொண்டிருந்தன. ஒரு சில பைசாக்களும் ஐந்து ஆறு பழைய ஒரு ரூபாய் நோட்டுகளுமே அவளுக்குக் கிடைத்தன.. சலவைத்தாள்கள் அனைத்தும் கணவனின் பையை விட்டு எப்படி மறைந்தது என்று அதிசயப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளது அதியசத்தைப் புரிந்து கொண்டான் ராமன்.

'' ரேஸிலே ஜெயித்த பணத்தைத்தானே தேடுறே? அது எப்பவோ கைமாறிடுச்சி''-நிதானமாகச் சொன்னான் ராமன்.

'' நான் சொன்னபடி கிணத்திலே போட்டுட்டிங்களா?''— சந்தேகத்துடன் கேட்டாள் சீதா.

'' அதெல்லாம் இல்லை சீதா! அதை வெளி மாநிலத்திலே உள்ள ஒரு இடத்திலே சேர்த்திருக்கேன்''—பெருமிதத்துடன் சொன்னான்.

'' நீங்க சொல்றது எனக்குப் புரியலீங்களே''—சீதா சொன்னாள்.

'' சீதா! அதையெல்லாம் இப்பக் கேக்காதே! நீயே சீக்கிரம் புரிஞ்சுக்குவே''— ராமனின் பேச்சில் புதிர் கலந்திருந்தது.

மீண்டும் கேட்டு இனிய சூழ்நிலையை இடர் சூழ்ந்த சூழ்நிலையாக மாற்ற விரும்பாமல், அமைதியாக இருந்துவிட்டாள் சீதா.

இரண்டு நாள் கழித்துத் தினப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி சீதாவைக் கவர்ந்தது.

செய்தி இது:

அதிசயம்! திருப்பதி உண்டியலில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் ஒரே முடிப்பில் இருந்தது. இவ்வளவு பெரிய தொகையை இதுவரை யாரும் உண்டியலில் போட்டதில்லை; இந்தத் தொகையைக் காணிக்கையாகச் செலுத்திய பக்தர் யார் என்று தெரியவில்லை.

தேவஸ்தான அதிகாரிகள் வியப்பு!

செய்தியைப் படித்தாள் சீதா. தன் கணவன்தான் அந்த 'பக்தர்' என்பதைப் புரிந்து கொள்ள அவளுக்கு நெடு நேரம் ஆகவில்லை. அன்று அவளது கணவன் கொண்டு வந்த லட்டு, திருப்பதி பிரசாதம் என்பதும் அவளுக்கு அப்போதுதான் புரிந்தது.

ரேஸ் பைத்தியத்தில் இருந்து தன் கணவன் தப்பித்து வந்ததை எண்ணியபோது அவளுக்கு வாழ்வே இனித்தது.

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும் பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

சாய்வான படிகள்; எனவே இறங்கத் தயங்கி நின்றேன்; பதினைன்கு வயதுப் பெண்; புன்னகையோடு கரத்தை நீட்டி மேலே வந்தாள்: என் பெண்ணின் சாயல்; இருப்பினும் அவள் கரத்தைப் பிடிக்க என் உள்ளம் இசையவில்லை; ஊர் பொல்லாத தல்லவா? அவள் வாழ்விலே மாசுபடிந்து விட்டால்?

மலர்ந்த முகத்தால் அவளுக்கு நன்றி செலுத்திவிட்டு மெல்ல மெல்லப் படிக்கட்டுகளில் இறங்கிக் கீழே வந்தேன்;

சண்முக உடையாரின் கண்கள் சக்கரத்திலேயே சுழன்று கொண்டிருந்தன; நான் இறங்கி வந்ததைக் கூட அவர் கண்கள் காணவில்லை; காரியத்திலேயே கண்ணுக இருந்தார்;

'தம்பீ' என்றேன்; நிமிர்ந்து பார்த்தார்; சக்கரமும் மெல்ல மெல்ல நிற்கத் தொடங்கியது; 'என்ன வேண்டும்?' என்ருர் இருந்தபடியே.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்"

"அப்படியா?" அவரது கேள்வியில் வியப்பும் கலக்கமும் கலந்து தோன்றின.

"அதோ அந்த நிழலில் போவோமே?" என்று கூரையிலிருந்து விழும் தாழ்ந்த நிழலைச் சுட்டிக் கேட்டேன்; அங்கே வேறு நிழல் ஏது?

'இல்லை இங்கே வாருங்கள்' என்று தனது குடிசையின் முன் புறத்தே அழைத்துச் சென்ருர் சண்முக உடையார். பழைய பூந்தொட்டி ஒன்றைத் திருப்பிப் போட்டு அரியாசனமாக என்னை அதில் அமரச் சொன்னுர்.

அங்கே வேறு சாமான்கள் உட்காருவதற்கு இல்லை; குடிசையின் உள்ளே ஒரு கயிற்றுக் கட்டில்; அதில் இருமிக்கொண்டு ஒரு மூதாட்டி படுத்திருந்தாள்.

"என்ன வேண்டும்?" என்ருர் சண்முக உடையார்.

"இல்லை, நீங்கள் செய்யும் தொழிலைப் பற்றிப் பத்திரிகையில் எழுத விரும்புகிறேன்"




"அதற்கென்ன ஐயா; கேளுங்கள் சொல்கிறேன்; இதுதான் என் வீடு; நான் குடிக்கூலிக்கு இருக்கும் இடம்; இதற்கு மாதமொன்றுக்கு 100 ரூபாய் கொடுக்கிறேன்" என்று அந்தக் கூரை வேய்ந்த இடத்தைக் காட்டினுர்; உள்ளே அறை எதுவுமில்லை; இருபதடி நீளமும் 15 அடி அகலமும் உடையதாய் மண் சுவரெழுப்பப்பட்டு ஓலை வேய்ந்த அந்த இடத்திற்கு ரூபாய் நூறு குடிக்கூலி என்றதும் எனக்கு வியப்பாகவே இருந்தது.

"இது உங்களுக்குப் புதுத் தொழிலா?" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தேன்.

இல்லை; என் தகப்பனுர் நாராயணசாமி உடையாரும் பாட்டனுர் அருணகிரி உடையாரும் செய்த தொழிலைத்தான் நானும் செய்து வருகிறேன். சுமார் 30 ஆண்டு எனக்கு அனுபவம் உண்டு. நாங்கள் 5 பேர் ஆண்களும் பெண்களுமாக இந்தப் பாண்ட வேலையிலே ஈடுபட்டிருக்கிருேம். சட்டி, பானை செய்வதைவிட இப்போது பூந்தொட்டிகளுக்குத் தான் நல்ல கிராக்கி இருக்கிறது. இருபது பைசா முதல் ஐந்து ரூபாய் வரையிலும் மதிப்புள்ள பூந்தொட்டிகள் செய்கிருேம்.

"ஆமாம் உடையாரே! யார் யாரெல்லாம் உங்களிடம் இதை வாங்குகிருர்கள்?"

"யார் யாரெல்லாமோ இங்கே வருகிருர்கள்; இந்திரசென் தெரியுமா உங்களுக்கு? அவர் மகள் கூட ரஷ்யாவுக்குப் போய் வந்தாளாம்; அடையாற்றிலே அவர் வீடு; பல தோட்டங்களுக்குப் பிளான் போட்டுக் கொடுப்பது அவர் வேலையாம்; அவர் வந்து வாங்கிப் போவதுண்டு. தோட்டக்காரர்களும் வருகிருர்கள்; மேலே ரோட்டில் காரை நிறுத்திக்கொண்டு பூந்தொட்டிகளை எடுத்துக் கொண்டும் பலர் வரச் சொல்வார்கள். சில பணக்காரர்கள் மிகவும்பேரம் செய்வார்கள்.

"உடையாரே! நாளொன்றுக்கு எத்தனை பூந்தொட்டிகள் செய்வீர்கள்?"

"அது எப்படிச் சரியாகச் சொல்ல முடியுங்க?"

"ஆனுலும் சுமாராக"

"அதுவா? 60 வரை செய்வோம். சூளையிலே சுட்டெடுத்து வெளியே கொண்டுவருவது வரை உள்ள கணக்குப் பார்த்தால் ஏறக்குறைய 50 வரை தேறும்.

"உங்கள் வருமானம் எவ்வளவு சொல்ல முடியுமா?"

"அதற்கென்ன? தாராளமாகச் சொல்கிறேன்; ஆண்களும் பெண்களுமாக வேலை சரியாகச் செய்தால் எங்கள் 5 பேருக்கும் சேர்த்து மாதமொன்றுக்குச் சுமார் ரூ. 300 வரை வரும்."

"ஆமாம்; எவ்வளவோ இடங்கள்இருக்க, கோடம்பாக்கத்திற்கும் நுங்கம்பாக்கத்திற்கும் இடையேயுள்ள இந்த ஏரியை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? மண்ணெல்லாம் இங்கேயே வசதியாகக் கிடைக்கிற காரணத்தினுலா?"

"அப்படி யொன்றுமில்லை; ஏதோ வந்தோம்; இங்கேயே தங்கி விட்டோம்; கோடம்பாக்கம் மண்ணைக் கொண்டு பூஞ் சட்டிகளோ, சட்டி பானைகளோ நன்ருகச் செய்ய முடியாது; எங்களுக்கு வேண்டிய மண்ணெல்லாம் விருகம்பாக்கத்திலிருந்து தான் வருகிறது."

"ஆமாம் உடையாரே! இவற்றை வெறுங் களிமண்ணுலா செய்கிறீர்கள்?"



# செய்கிறோ!

''அது எப்படிச் செய்யமுடியும்? களிமண், மணல், சூளைச் சாம்பல்....அதாவது நாங்கள் இவற்றைச் சுட்டெடுக்கிறோமல்லவா அதனுடைய சாம்பல் எல்லாம் குறிப்பிட்ட அளவு கலந்து செய்கிறோம்.''

''இந்த இடத்தில் சூளை போடுகிறீர்களே; சில சமயம் புகை மிகுதியாக மண்டி மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக இருப்பதில்லையா?''

''உண்மைதான்; இங்கே நாங்கள் சூளை போடுவதை முன்பு ஒருமுறை செல்வாக்குடைய அரசியல் தலைவர்கள் தடை செய்தார்கள். பிறகு நாங்கள் திரு. பெருமாள் உடையார் தலைமையில் கூட்டம் போட்டு அதை நீக்கினோம்; எங்கள் தொழில் தடையில்லாது நடக்க எந்த இடம் தந்தாலும் நாங்கள் செல்லத் தயாராக இருக்கிறோம். இது வரை யாரும் உதவ வரவில்லையே.''!

''எந்தக் காலத்தில் இப்பூந்தொட்டிகள் மிகுதியாக விற்பனையாகின்றன? சொல்ல முடியுமா?"

"அதற்கென்ன சொல்கிறேன். பெரும்பாலும் மழைகாலம் என்று சொல்லலாம்; ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையில் இவற்றிற்கு நல்ல கிராக்கி உண்டு''

"நீங்கள் நேரடியாகவே விற்கிறீர்களா? அல்லது தரகர்கள் உண்டா?"

"அது கொஞ்சம் சிக்கலான விஷயம்; எங்களுக்குப் பாதி விலை தான் கிடைக்கிறது; பாதி விலை வேறுவிதமாகப்போய்விடுகிறது''

''மாதத்தில் எத்தனை சூளை போடுவீர்கள்? அதில் சுமார் எத்தனை பாண்டங்கள் சுடப்பட்டு எடுக்கப்படுகின்றன?"

''இரண்டு சூளை மாதமொன்றுக்குப் போடுகிறோம்; ஒரு சூளையில் சுமார் 500 பாண்டங்கள் பக்குவப்படுத்தப் படுகின்றன. சூளை ஒன்று போடக் கூலி உட்படச் செலவு ரூ. 125 ஆகிறது. இதெல்லாம் ஒரு தோராயமான கணக்குத்தானுங்க.''

''புது மாதிரியான கருவிகளை உபயோகித்து நீங்கள் இந்தத் தொழிலைச் செய்யக் கூடாதா?''

''நல்லாச் செய்யலாமுங்க; அம்பத்தூரிலே அப்படிச் செய்றாங்க; அதற்குப் பணம், இட வசதி எல்லாம் வேணுங்க.''

''உங்க குழந்தைகளை இந்தத் தொழிலில்தான் விடுவீர்களா? அல்லது நன்றாகப் படிக்க வைப்பீர்களா?"

"என்னகேள்விங்க இது! போயும் போயும் ஏழு மாதக் குழந்தையைப் பற்றி என்ன திட்டம் இப்போது வகுக்க முடியுங்க? காலம் எப்படியெல்லாமோ மாறுகிறது! அப்பல்லோ, சந்திர மண்டலம் என்றெல்லாம் சொல்றாங்க. என் குழந்தை வளர்ந்து வரும் போது என்ன ஆகுங்களோ, யாருக்கு என்ன தெரியும்? அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்'' என்று சூரியனைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

ஏழையாக இருந்தாலும் உயரிய உள்ளம் படைத்த சண்முக உடையாரை மனதார வாழ்த்தி எழுந்து விடைபெற்றேன்.




விலங்குகள்—பறவை இனங்களில் நூறாண்டுக் காலம் வாழ்வது மிகவும் அரிது. யானை 100 முதல் 200 ஆண்டுகள் வாழ முடியும் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், சுமார் 17,000 யானைகளின் வாழ்வுக்காலத்தை ஆய்ந்ததில் அவை 60 முதல் 75 ஆண்டுக் காலங்கள் வாழ்ந்ததாகவே தெரியவருகிறது.

பறவைகளில் ஒருவகைக் கிளிகள் 100 ஆண்டுக் காலம் வரை உயிரோடு உள்ளன. ஊர்வனவற்றில் அதிக காலம் வாழ்வது ஆமை. இவை 125 வருடங்கள் கூட உயிர் வாழ்வது உண்டாம்.

சிங்கம், காண்டாமிருகம், நீர்யானை போன்றவை 40 ஆண்டுகள்வரை உயிர் வாழ்கின்றன. மனிதக்குரங்குகள் 25 ஆண்டுக் காலம் வாழ்கின்றன. பிற குரங்கு வகைகளின் வாழ்நாள் குறைவே. 50 வருடங்கள் வரை உயிர்வாழும் கடல் மீன் வகைகள் கூட உண்டு.







சீரணித் தொண்டர்கள், மக்களுக்கு சிறப்பாகவும் திறம்படவும்தொண்டாற்ற, தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு உடற்பயிற்சிகளும், அணிவகுப்புகளும், விளையாட்டுகளும் அவர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றன.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் இவ்வகையில் நன்கு பயிற்சி பெற்று எந்தப் பணியையும் மேற்கொண்டு திறம்பட நடத்த சுறுசுறுப்புள்ள சீரணியினர் தயார் செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தை மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத்தின் தலைநகரில் 200 தொண்டர்களும், பிற பகுதிகளில் வட்டாரத்திற்கு (பிளாக்) 25 பேர் வீதம், மொத்தம் 100 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுவர். தர்மபுரி, கன்னியாகுமரி, நீலகிரி போன்ற சிறிய மாவட்டங்களில் தலைநகரில் 100 பேர்களும், பிறபகுதிகளில் தலைநகரில் 100 பேர்களும் பயிற்சியளிக்கப்படுவர். 20 வயது முதல் 40 வயதுவரை உள்ள தொண்டர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

"நாளை எங்கள் ஊருக்கு முதலமைச்சர் வருகிறார். சீரணித்தொண்டர்களின் முயற்சியினால் புதிதாகப் போடப்பட்டுள்ள சாலையையும், புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூடக் கட்டடத்தையும் திறந்து வைக்கப் போகிறார். அந்த விழாவிற்கு அவசியம் நீயும் வரவேண்டும்'' என்று என் நண்பன் சந்திரன் மடல் எழுதியிருந்தான். என் நண்பன் அந்த ஊராட்சி மன்றத்தலைவர் மட்டுமல்ல, சீரணிப்படையின் தலைவரும் கூட. அவனுடைய முயற்சியால் அந்த ஊருக்கு ஒரு நல்ல பாதையும், பள்ளிக் கட்டடமும் கிடைத்துள்ளது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு தடவை என் நண்பன் வீட்டிற்குப் போயிருந்தேன். அப்பொழுது அவனுடைய மாமாவும், அந்த ஊரின் பெரிய பணக்காரரில் ஒருவருமான சொக்கலிங்கத்தைப் பார்த்த போது "என்னங்க, இந்த ஆண்டிலாவது சந்திரனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுங்களேன்'' என்றேன். அதற்கு அவர், "அந்த உதவாக்கரைப் பயலுக்கு யாருங்க பெண் கொடுப்பார்கள்?'' என்றார்.

"என்னங்க உங்க தங்கை மகனுக்கு, உங்க பெண்ணைத்தான் திருமணம் செய்து வைப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்'' என்றேன்.

"அவனெங்கே! நானெங்கே! மடுவுக்கும் மலைக்கும் சம்பந்தமா? அது நடக்கக்கூடிய காரியமல்ல!'' என்று கூறிவிட்டு மேலும் பேசாமல் எழுந்து அவர் வீட்டினுள் போய்விட்டார்.

அவருடைய செயல் என் முகத்தில் அறைந்துவிட்டது போல் இருக்கவே, மனவருத்தத்துடன் அவர் வீட்டைவிட்டு எழுந்து வந்து விட்டேன்.

என் நண்பனிடமும் இதைப் பற்றி நான் ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆனால் நான் ஊருக்குப் புறப்பட்டு விடைபெறும் போது "சந்திரா! அப்பாவுக்கும், அம்மாவுக்கும். வயது ஆகிவிட்டது. பி.ஏ. படித்த நீ, அவர்கள் உழைப்பில் இன்னும் வாழுவது சரியல்ல! இனிமேலாவது நீ வேலை தேடிக்கொள்ள வேண்டும்; அல்லது குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அப்பா, அம்மாவுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும்'' என்றேன்.

"முயல்கிறேன்'' என்று மட்டும் சந்திரன் சொன்னானே ஒழிய வேறு பதில் கூறவில்லை.

"சந்திரா! நான் கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே! உனக்கு 4 ஏக்கர் நல்ல நிலமிருக்கிறது. நல்ல தண்ணீர் வசதியும் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நீயே பாடுபட்டால், நாலுபேர் மெச்ச வாழலாம் தெரியுமா?'' என்று மீண்டும் சொன்னேன்.

என் கேள்விக்குச் சந்திரன் பதில் அளிக்கவில்லை. ஆனால் அவன் எதையோ சிந்திக்கின்றான் என்பதை அவன் முகம் காட்டியது.

"சரி, சந்திரா! உன்னைக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. நான் போய் வருகின்றேன். அப்பா—அம்மாவுக்கு ஓய்வு கொடுக்க முயற்சி செய்! இந்த ஆண்டிலாவது எனக்கு உன்னுடைய திருமணச் சோறு கிடைக்கும் என்று நம்புகின்றேன்'' என்றேன்.

"முதலில் கடமை, அப்புறம் தான் கல்யாணம்'' என்று சந்திரன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"நீகூடக் கடமையை உணர ஆரம்பித்து விட்டாயா? பரவாயில்லையே! உனக்கு அப்படி என்னப்பா வேறு முக்கிய கடமைகள் உள்ளன'' என்றேன்.

"போகப் போகப் புரியும்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

# வழி பிறந்தது!



நானும் சிரித்து விட்டு விடைபெற்றுக்கொண்டு திரும்பி வந்து விட்டேன்.

அதன் பின் ஒரு தடவை சந்திரன் மடல் எழுதியிருந்தான். அதில், அவனே குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அப்பா-அம்மாவுக்குஓய்வு அளித்து விட்டதாக எழுதியிருந்தான். அடுத்து எழுதிய மடலில், தான் ஊராட்சி மன்றத் தலைவராகி உள்ளதாகவும் எழுதியிருந்தான். எனக்கு என் கண்களையே நம்ப முடியவில்லை. நம்ம சந்திரன் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கப் போகிறானா என்று எண்ணி, மடலில் எழுதப்பட்டிருந்த கையெழுத்தைக் கவனித்தேன். அவனுடைய கையெழுத்துத்தான். அதில் ஐயமேயில்லை. ஐயம் நீங்கிய பின் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்

சிக்கு அளவே இல்லை. பெரும் பணக்காரர்களெல்லாம் போட்டியிட்டிருக்கையில், இவனால் எப்படி வெற்றி பெற முடிந்தது என்பது மட்டும் எனக்குப் புரியாத புதிராக இருந்தது. உடனே ஒரு வாழ்த்துச் செய்தி எழுதி அனுப்பினேன். பெற்றுக்கொண்டு சந்திரன் நன்றி தெரிவித்து இருந்தான்.

அதன் பின் இப்பொழுது தான் என்னை அங்கு வருமாறு மிகவும் வற்புறுத்திச் சந்திரன் எழுதியிருந்தான். அவன் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்ற அவாவில், சட்டக்கல்லூரிக்கு இரண்டு நாள் விடுமுறை போட்டுவிட்டுப் புறப்பட்டேன். சந்திரன் ஊருக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலை வழியாகச் செல்லும் பஸ்ஸை விட்டு இறங்கி, சந்திரனுடைய ஊருக்குச் செல்லும் பாதையைப் பார்த்தேன். அது அழகான பாதையாக அமைக்கப்பட்டிருப்பது கண்டு வியப்புற்றேன். என் கால்கள் முன்னே நடந்தன. ஆனால் என் நினைவுகளோ பின்நோக்கி ஓடின.

சென்ற தடவை என் நண்பனுடைய ஊருக்கு வந்தபோது, இரண்டு பர்லாங் தூரம் குறுகிய பாதையில் நடந்துசென்று, அதன் பின் ஒரு பர்லாங் தூரத்திற்குத் தண்ணீரிலும் சேற்றிலும் நடந்து சென்றதும், அப்பொழுது என் காலில் பல இடங்களில் முள் குத்தி விட்டதும் என் நினைவுக்கு வந்தன. அடுத்து அந்த ஊரின் முன்னைய நிலைமையும் நினைவுக்கு வந்தது.

'சிற்றூர்' என்ற பெயரைக் கொண்டிருந்தாலும், அந்த ஊர் பெரிய ஊர்தான். ஏனெனில், அந்த ஊரில் ஏறத்தாழ 2,000 பேர்களுக்கு மேல் வசிக்கிறார்கள். எல்லாரும் உழவுத் தொழில் செய்பவர்கள் தான். பல பெரும் பணக்காரர்களும் அந்த ஊரில் இருந்தனர். ஆயினும் நெடுஞ்சாலையிலிருந்து நான்கு பர்லாங் தூரத்தில்இருந்த அந்த ஊருக்கு நேற்று வரை ஒரு நல்ல பாதை கிடையாது. ஏற்கனவே ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருந்தவர்கள் முயற்சி செய்தும், அந்த ஊருக்குப்பாதை போட முடியவில்லை. முன்பு இருந்த குறுகலான பாதையில் மாட்டு வண்டிகள் மட்டுமே செல்லமுடியும். எப்பொழுதாவது ஊராட்சி ஒன்றிய ஜீப் அந்த ஊருக்கு வந்தால், சேற்றில் சிக்கிக் கொள்ளும். அதைப் பின்பு இருபது அல்லது முப்பது பேர் கூடிக் கயிறு கட்டி இழுத்துச் செல்வார்களாம். இதற்குப் பயந்து பல அலுவலர்கள் அந்த ஊருக்கு வருவதே இல்லையாம்.

அந்தக் குறுகலான பாதையை அகலப்படுத்த வேண்டுமானால், பாதையின் இரு மருங்கிலும் 10 முதல் 15 அடி தூரத்திற்கு நிலம் தேவைப்பட்டது. பாதையின் இரு புறமும் உள்ள பட்டாநிலக்காரர்கள் மனமுவந்து அவரவர்கள் நிலத்தில் பாதையை அகலப்படுத்த ஒப்புதல் அளித்தால், பாதை அமைத்துக் கொடுக்கிறோம் என்று பல தடவை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும், பொறியாளரும் கூறினார்கள். அதற்குப் பெரும்பாலோர் ஒப்புக் கொண்டும், நான்கைந்து பெரு நிலக்கிழார்கள் மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை. விலை மிகுந்த நிலங்களை விட்டுக்கொடுக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. ¼ ஏக்கர், ½ ஏக்கர்நிலம் உள்ள உழவர்கள் கூடத் தங்கள் நிலத்தில் ஒரு பகுதியைப் பாதையை விரிவுபடுத்துவதற்காகக் கொடுக்க முன் வந்தபோது, அதிக நிலம் வைத்திருந்தவர்கள் தங்கள் வயலில் ½ சென்ட் அல்லது 1 சென்ட் நிலத்தைப் பொதுநன்மைக்காகக் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஒரு தடவை மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பெருநிலக்கிழார்களைச் சந்தித்துப் பாதைஅமைக்க நிலம் கொடுத்தால், அவர்கள் கொடுக்கும் நிலத்திற்கு ஈடாக அரசாங்கத்திற்குச் சொந்தமான தரிசு நிலத்தைக் கொடுப்பதாகச் சொல்லியும் அவர்கள் மறுத்து விட்டு, வேறுவழியாகப் பாதை போட்டால் விலைமிகுந்த நிலம் வீணாகாது என்று கூறி மற்றொரு வழியைக் காட்டினார்கள். அந்த வழியையும் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுமையுடன் பார்வையிட்டார். ஆனால் அந்த வழியில் பாதை போடுவதென்றால், பாதை அமைக்கவேண்டிய தூரம் ஒரு மைல் ஆவதுடன் இடையில் மூன்று பாலங்களும் அமைக்க வேண்டி வந்தது. அவ்வழியில் பாதை போடச் செலவு அதிகம் ஆகும் என்றும், அதற்கு ஊராட்சி மன்றத்திலிருந்து பங்குத்தொகை கொடுக்கின்றீர்களா என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டார். அதற்கும் முடியாது போகவே மாவட்ட ஆட்சித் தலைவரும் மன வருத்தத்துடன் திரும்பி விட்டார். அதன் பின் அந்த ஊருக்குப் பாதைபோடும் முயற்சியைக் கைவிட்டு விட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் இருந்த சிற்றூருக்கு, சந்திரனால் எப்படிப் பாதை அமைக்க முடிந்தது என்றுநினைத்துக்கொண்டேசுமார் இரு பர்லாங் தூரம் நடந்து விட்டேன். அங்கே ஏறத்தாழ முந்நூறு நானூறு பேர் ஆண்களும் பெண்களுமாகப் பாதை அமைக்கும் வேலையில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். பாதை வேலை இன்னும் முடியவில்லை போலுள்ளது என்று எண்ணிக் கொண்டே அவர்களை நெருங்கினேன்.

அங்கு என் நண்பன் சந்திரன் மண் வெட்டியால் மண்வெட்டிக் கொண்டிருந்தது கண்டு மகிழ்ச்சியால் ''சந்திரா!'' என்று கூவி விட்டேன். சந்திரன் நிமிர்ந்து பார்த்து விட்டு''வந்துவிட்டாயா ராமு? நீ எங்கே வராமல் விட்டு விடுவாயோ என்று நினைத்தேன்'' என்று கூறிக் கொண்டே ஓடி வந்து என் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். ''உன் அழைப்பைக் கண்ட பின், என்னால் வராமல் இருக்கமுடியுமா?'' என்றேன்.

''ராமு! நீ வீட்டிற்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள். இந்த வேலையை இருட்டுவதற்குள் முடித்தாக வேண்டும். அப்புறம் சாவகாசமாகப் பேசிக் கொள்வோம்'' என்றான் சந்திரன்.

''சந்திரா! உன்னைப் போல் நானும் இந்த நல்ல காரியத்தில் பங்கு கொள்கின்றேனே'' என்றேன்.

''ராமு! நீ என் நண்பன் என்றாலும் ஒரு லட்சாதிபதி! உனக்கேனப்பா இந்த வேலை? மேலும் நீ இப்பொழுது என் விருந்தாளியாக வந்துள்ளாய்! நீ வேலை செய்வதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நீ போய் ஓய்வு எடுத்துக் கொள்'' என்று கூறி அனுப்பி விட்டான். நான் சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்தேன். சந்திரன் தன் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தான்.

சந்திரனும் நானும் ஒன்றாக 'பி. ஏ.' படித்த போது, அவன்

படு சோம்பேறி. நான் மேல் படிப்புக்குச் சென்று விட்டேன். ஆனால் சந்திரன் தேர்வில் வெற்றி பெற்றிருந்தும் பணவசதியில்லாததால், படிப்பை நிறுத்திவிட்டான். மேலும் சற்றுச் சுறுசுறுப்பாக இருந்து படித்திருந்தால் அவனும் முதல் வகுப்பில் வெற்றி பெற்றிருக்கலாம். ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொண்டு மேல் படிப்புப் படித்திருக்கலாம். ஆனால் அவன் தான் சோம்பேறியாச்சே! நன்றாகச் சாப்பிட்டு விட்டுத் தூங்குவான். எப்படியோ தேர்வில் வெற்றி பெற்று விட்டான். அப்பொழுதெல்லாம் படு சோம்பேறியாக இருந்த சந்திரன், இன்று மிகவும் துடிதுடிப்புள்ள இளைஞனாக மாறிவிட்டானே என்று எண்ணிக்கொண்டே சந்திரனின் வீட்டை அடைந்தேன். என்னைக் கண்டதும், வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த சந்திரனுடைய அப்பாவும், அம்மாவும் வணங்கிக் கொண்டே ''வாங்க தம்பீ ! சௌக்கியமா?'' என்றனர். நானும் கைகூப்பி வணங்கி விட்டு ''நீங்கள் சௌக்கியமா ?'' என்றேன்.

''சௌக்கியம் தான் தம்பி!'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு பாயை எடுத்து வந்து திண்ணையில் விரித்து ''உட்காருங்க தம்பி!'' என்றார் சந்திரனின் அப்பா.

நான் அந்தப் பாயில் அமர்ந்தேன். ''நீங்களும் அமருங்கள்'' என்றேன்.

''ஏதோ உன்னுடைய புத்தி மதியைக் கேட்டுத் தான் தம்பி, சந்திரன் எங்கள் கஷ்டத்தைக் குறைச்சுட்டான்! உங்களுக்கு மிகவும் நன்றி தம்பி!'' என்று கூறி அந்தப் பெரியவர் என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

அப்பொழுது சந்திரனின் அம்மா ஒரு குவளையில் பாலை ஊற்றிக் கொண்டுவந்து, ''தம்பீ! களைப்பாய் இருப்பாய், இந்தப் பாலைக் குடி தம்பி!'' என்று கூறித் திண்ணையில் வைத்தார்கள். அந்த அம்மா அன்புடன் கொடுத்ததை, அமுதென நினைத்துக் குடித்தேன்.

''சந்திரனைத் தேடி அழைச்சுக்கிட்டு வரேன். நீங்க ஓய்வு எடுத்துக் கொள்ளுங்க தம்பி '' என்று அவன் தந்தை எழுந்தார்.

''நான் சந்திரனைப் பார்த்து விட்டுத் தான் வந்தேனுங்க. வேலை நடக்குது. முடிந்ததும் வருகிறேன் என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தான்'' என்றேன்.

''அப்போ சரி தம்பி!'' என்று கூறிவிட்டு என்னருகில் அமர்ந்தார்.

''சந்திரன் இப்போ எப்படி இருக்கிறானுங்க?''

''நீங்க போன தடவை வந்த போது சொல்லிவிட்டுப் போன படி வயல் வேலைகளை எல்லாம் அவனே கவனித்துக்கொள்கிறான். குறுவைப்பட்டத்திலே 2 ஏக்கரில் 'ஐ.ஆர். 8' என்று ஏதோ புது நெல் விதை வாங்கி வந்து பயிரிட்டான். மீதம் 2 ஏக்கரில் 'ஒட்டு வீரிய மக்காச் சோளம்' விதைத்தான். நெல் ஏக்கருக்கு 45 மூட்டை வீதம் விளைந்தது. பாதியை விற்று விட்டு, மீதியை சாப்பாட்டிற்காக வைத்துக் கொண்டோம். 2 ஏக்கர் மக்காச் சோளத்திலிருந்தும் 85 மூட்டை கிடைச்சுது. அதில் 80 மூட்டையை விற்று விட்டான். அதிலிருந்து மட்டுமே ரூபாய் 5,000 கிடைச்சுது தம்பி. 5 மூட்டையைச் சாப்பாட்டிற்காக வைத்து விட்டான். அதன்பின் இப்போ 2 ஏக்கரில் மக்காச் சோளமும், 2 ஏக்கரில் 'ஐ.ஆர். 5' நெல்லும் பயிரிட்டிருக்கான். மக்காச் சோளம் இன்னும் ஒரு வாரத்திற்குள் அறுவடைக்குவந்துவிடும். செலவு போக எல்லாம் சேர்ந்து ரூபாய் 6,000 கையிலிருந்தது. இதை அறிந்த சில பேர் சந்திரனை 'எலக்ஷனில்' நிக்கச் சொன்னாங்க. நான் வேண்டாம் என்று தடுத்தேன். ஆனால் ஊர் ஜனங்க சந்திரனை நிறுத்த வேண்டும் என்று ஒரே பிடிவாதம் பண்ணினாங்க. சரி என்று கடைசியில் நானும் ஒப்புக் கொண்டேன்.

எதிர்த்து நின்றவங்களெல்லாம் பெரிய பணக்காரங்க. அவர்களெல்லாம் ஆயிரம் இரண்டாயிரம் என்று செலவு செய்துவந்தாங்க. சந்திரனும் அதுபோல் செலவு செய்து விடுவானோ என்று பயந்து கையிலிருந்த பணத்தில் ரூபாய் 500 மட்டும் வைத்துக்கொண்டு, ரூபாய் 5,500-ஐயும் கொண்டு போய், சிறு சேமிப்



பில் பக்கத்து ஊர் தபாலாபீசில் கட்டி விட்டேன். மீதி இருந்த ரூபாய் 500-ஐயும் அவனிடம் கொடுக்க வில்லை. அவனும் என்னிடம் பணம் கேட்க வில்லை. ஆனால் ஊர் ஜனங்க என்னமோ சந்திரனை நம்பி ஓட்டுப்போட்டு ஜெயிக்க வைச்சிட்டாங்க. ஜெயிச்ச பின்புதான் பணத்திற்கு என்னடா செய்தே என்று சந்திரனைக் கேட்டேன். அவன் எலக்ஷனுக்காக 100 ரூபாய் மட்டும் கடன் வாங்கியதாகச் சொன்னான். அதைத் தவிர, வேறு செலவு செய்யவில்லை என்றான். என்னால் நம்ப முடியவில்லை. அதனாலே இரு நூறு ரூபாயைக் கொடுத்துக் கடனை அடைத்துவிட்டு, மீதியை உனக்காக உழைத்தவர்களுக்கெல்லாம் செலவு செய்யிடா என்று கூறினேன்.

அப்புறம் ஏதோ 'சீரணிப் படை' என்று ஒன்றை ஏற்படுத்தி 2 மாதத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டி முடித்திருக்கான்! இப்போ இந்த ரோடு வேலையையும் செய்துக்கிட்டு இருக்கான். பள்ளிக்கூடம் கட்டினது சரி. ஆனால் ரோடு போடும் வேலை எனக்குப் பிடிக்கவில்லை தம்பி!'' என்றார்.

'' ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

'' நாலு பேருகிட்டே ஏன் தம்பி பொல்லாப்பு? ரோடு போட நிலம் கொடுக்க மாட்டேன் என்று சில பேர் பிடிவாதம் செய்தாங்க. இவன் ஊரைக் கூட்டிக் கூட்டம் போட்டு, ரோடு போட நிலம் கேட்டான். அவர்களும் ஒரே பிடிவாதமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் ஊர் ஜனங்க, பழைய பஞ்சாயத்துத் தலைவரைப் பிடித்துக்கொண்டாங்க. அவர்தான் ரோடு போட நிலம் கொடுக்க மிகவும் தகராறு பண்ணியவரு. 'போன தடவை நீங்கள் தலைவராக இருந்தபோது, மற்றவர்கள் நிலம் கொடுக்கவில்லை, அதனால் ரோடு போட முடியவில்லை என்றீர்கள். இப்போ நீங்களே நிலம் கொடுக்க மாட்டேன் என்பதைப் பார்த்தால், இந்த ஊருக்கு ரோடு போடுகிறதை இதுவரை நீங்களே தடுத்து வந்திருக்கிறீர்கள் என்றுதான் தெரிகிறது' என்று சந்திரன் கூட்டத்தில் கூறிவிட்டான். அதைக் கேட்ட ஜனங்கள் பழைய தலைவரைத் திட்ட ஆரம்பித்துவிட்டாங்க. ஒரே கூச்சல்! குழப்பம்! எங்கே தகராறு, அடிதடி ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து போனேன். கடைசியில் பழைய தலைவர் நிலம் கொடுக்கச் சம்மதித்துவிட்டார். அப்புறம் மீதியிருந்த நாலு பேர்களும் நிலம் கொடுக்க ஒப்புக்கொண்டுவிட்டனர். அவர்கள் நிலம் கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டார்களே ஒழிய எப்போ சந்தர்ப்பம் கிடைக்கும் சந்திரனைப் பழிவாங்கலாம் என்றுதான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதனால்தான் எனக்கென்னமோ சந்திரனை நினைக்கையில் பயமாய் இருக்கு தம்பி!'' என்றார்.

'' சந்திரன் செய்துள்ளதெல்லாம் நல்ல காரியங்கள்தான். அதனால் அவனுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட ஊர் மக்கள் விட்டுவிட மாட்டார்கள்'' என்றேன்.



'' அதுவும் உண்மைதான் தம்பி! ஊர் ஜனங்க இவன் என்ன சொன்னாலும் கேக்குறாங்க. காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. எங்காவது கடன் வாங்கி ஜனங்களுக்குச் செலவழிக்கிறானோ என்றுதான் பயப்படுகிறேன்'' என்றார்.

'' எனக்குத் தெரிந்த வரையில் சந்திரன் கடன் வாங்கியிருக்க மாட்டான். ஏனெனில், அவனுக்குக் கடன் வாங்குவது என்றாலே பயம்!'' என்றேன்.

'' எதுக்கும் நீங்க இது பற்றிக் கொஞ்சம் சொல்லி வைங்க தம்பி! நான் வயல் பக்கம் போய் விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பேருந்தில் வந்த களைப்பினால் எனக்குத் தூக்கம் வர ஆரம்பித்தது. நான் சற்று நேரத்தில் தூங்கிவிட்டேன். சுமார் இரவு 8 மணிக்குச் சந்திரன் வந்து என்னை எழுப்பிச் சாப்பிட அழைத்தான். சாப்பிட்டுவிட்டுச் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பின், வேலையிருப்பதாகக் கூறி என்னைத் தூங்கும்படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

மறுநாள் அந்த ஊரே திருவிழாக் கோலத்தில் காணப்பட்டது. கிராமத்தின் தெருக்களெல்லாம் தூய்மைப் படுத்தப்பட்டு, ஒவ்வொரு வீட்டின் முன்னும் வண்ணக் கோலங்கள் இடப்பட்டிருந்தன. மாவிலைத் தோரணங்களும், வண்ணத் தாள்களை வெட்டி ஒட்டிய தோரணங்களும் வரவேற்பு வளைவுகளும் கண்ணைக் கவர்ந்தன. அந்த ஊர் மக்களெல்லாம் மிகவும் குதூகலமாகவே காணப்பட்டார்கள்.

காலை 10 மணிக்கே ஊர்மக்கள் புதிதாகப் போடப்பட்டிருந்த சாலை, நெடுஞ் சாலையுடன் சேருமிடத்தில் கூடிவிட்டார்கள். முதலமைச்சர் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதிர்பார்த்தபடி காலை 10-30 மணிக்கு முதலமைச்சர் வந்தார். சந்திரன் ஒரு மாலையை எடுத்துக் கொண்டுபோய் முதலமைச்சருக்கு அணிவித்தான். மாவட்ட ஆட்சித் தலைவர் சந்திரனை முதலமைச்சருக்கு அறிமுகப் படுத்தினார். சந்திரன் சிரணிப் படையினரால் அமைக்கப்பட்ட புதிய பாதையைத் திறந்து வைக்கும்படி முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டான்.

முதலமைச்சர் மிகவும் மகிழ்ச்சியுடன் அப்புதிய பாதையைத் திறந்து வைத்தார். அதன் பின் அங்கிருந்து முதலமைச்சரை, கிராமிய மேள வாத்திய இசை முழங்க, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். ஊர்வலம் புதிதாகக் கட்டப்பட்டிருந்த பள்ளிக் கூடத்தை அடைந்தது. திறப்பு விழாவிற்காக அமைக்கப்பட்டு இருந்த அலங்காரப் பந்தலின் முன்பு ஏறத்தாழ 3,000 பேர்களுக்கு மேல் திரண்டிருந்தனர். முதலமைச்சரும், மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவரும், சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும் மேடையில் அமர்ந்துவிட்டனர். ஆனால் சந்திரனைக் காணவில்லை.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் '' சந்திரன் எங்கே? கூட்டத்தை

ஆரம்பிக்கலாமே'' என்று கூறிக் கொண்டே அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் சந்திரன், பழைய ஊராட்சி மன்றத் தலைவரின் கையைப்பிடித்து அழைத்துவந்து மேடையில் அமர்த்திவிட்டு, சட்டென்று மைக்கின் முன்னால் போய், '' இந்த விழாவிற்கு, நம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன் !'' என்றான். சந்திரனின் சமயோசித புத்தியைக் கண்டு அந்த ஊர்ப் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன்கையொலி எழுப்பி ஆதரவு காட்டினர்.

பழைய ஊராட்சி மன்றத் தலைவர், விழாவிற்குத் தலைமைதாங்கி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். தமிழ்த் தாய் வணக்கம் முடிந்தவுடன் சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினான். வரவேற்புரையில் சந்திரன்—'' சீரணித் தொண்டர்களின் அருந் தொண்டால், ரூபாய் 10,000 பெறுமானமுள்ள பள்ளிக்கூடக் கட்டடத் திறப்பு விழாவிற்கு வந்துள்ள அனைவரையும் வருக, வருக, என்று வரவேற்கிறேன்'' என்று கூறிவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டான்.

அடுத்து, தலைமை தாங்கிய முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையுரை ஆற்றினார். அவர், '' சந்திரன் ஊராட்சி மன்றத் தலைவராகி சீரணிப்படை அமைத்தபோது நானும் மற்றும் சிலரும் செங்காவல் படையோ என்று கூறி அதை எதிர்த்தோம். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, சந்திரனை நம்பி, வீட்டிடிற்கு ஒருஆள் சீரணிப் படையில் சேர்ந்தனர். இந்த ஊரில் இருந்த வண்டிகளெல்லாம் மண் ஏற்றி வரவும், கல் ஏற்றி வரவும் பயன்பட்டு, ஆண்களும், பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்து மூன்று மாதத்திற்குள்ளாக ரூபாய் 10,000 பெறுமானமுள்ள பள்ளிக்கூடக் கட்டடத்தையும், ரூபாய் 5,000 பெறுமானமுள்ள புதிய பாதையையும் அமைத்து விட்டனர். இதையெல்லாம் கண்டவுடன், சந்திரனை இந்த ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமே என்பதை மனமார ஒப்புக்கொண்டே எங்களுக்குள் இருந்த விரோதங்களை மறந்து



விட்டேன். சீரணித் தலைவரான சந்திரனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் இந்த ஊர் மக்களைப் போல் நானும் சந்திரனின் ஆணைக்குக் கட்டுப்பட்டே இந் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகின்றேன்'' என்றார்.

இறுதியாக, முதலமைச்சர் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்து விட்டு, மீண்டும் மேடைக்கு வந்து உரையாற்றத் தொடங்கினார். சிற்றூர் மக்களுடைய உழைப்பினையும், சந்திரனின் முயற்சியையும் பாராட்டி விட்டு, அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மக்கள் துணை செய்ய வேண்டியதையும், அரசு மக்களுக்குச் செய்துவரும் நன்மைகளையும் விளக்கி ஏறத்தாழ ஒரு மணி நேரம் தனது வெண்கலக் குரலில் பேசிவிட்டு, இந்தக் கிராம மக்களைப் போல் மற்றவர்களும் தங்கள் தேவையைக் கூடுமானவரை தாங்களாகவே பூர்த்தி செய்துகொள்ள முன் வர வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்துக்கொண்டு அமர்ந்தார்.

அதன் பின் சந்திரன் நன்றி கூறினான். சந்திரன் நன்றி உரையில் அந்த ஊருக்கு மின்சாரம் கிடைக்கவும், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி கிடைக்கவும் வழி செய்ய வேண்டும் என்று முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்து விண்ணப்பம் ஒன்றும் கொடுத்தான். முதலமைச்சர் குறுக்கிட்டு '' உங்கள் சீரணித் தொண்டர்களின் உழைப்பைத் தொடர்ந்து கொடுத்தால், இக் காரியங்களையும் விரைவில் முடித்துவிடலாமே'' என்றார். சந்திரன் '' சீரணித் தொண்டர்களின் உழைப்பைத் தொடர்ந்து கொடுக்கத் தயாராக உள்ளோம்'' என்று உறுதி கூறி, அனைவருக்கும் நன்றி தெரிவித்தான். ஆனால் அவன் திடீரென்று '' இந்த விழா இத்துடன் முடிந்துவிடவில்லை! நம் ஊர்ப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க வேண்டும் என்பதற்காக ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தைச் சீரணித் தொண்டர்கள் மூலம் உழுது பண்படுத்தி வைத்துள்ளோம். அந்த நிலத்தில் மக்காச் சோளம் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம். மக்காச் சோளம் மிகவும் சத்துள்ள உணவுத் தானியமாகும். எனவே, அந்த நிலத்தில் மக்காச் சோள விதையை முதன் முதலில் ஊன்றி வைத்து, அத்திட்டத்தையும் துவக்கி வைத்திடுமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றான்.

முதலமைச்சர் சிரித்துக் கொண்டே '' உன் கட்டளைக்கு நானும் பணிகின்றேன். அப்பணியை நிறைவேற்ற எங்கே போக வேண்டும் ?'' என்றார்.

'' பள்ளிக்கூடத்தின் பின்னாலேயே தோட்டம் உள்ளது, வாருங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு, சந்திரன் முன்னே நடந்தான். அங்கு விதைப்பதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த நிலத்தில், வீரிய மக்காச் சோள விதைகளை முதலமைச்சர் அவர்கள் ஊன்றினார். அவர் விதை ஊன்றிய உடனே, பாத்திக்கு 2 தொண்டர்கள் வீதம் விதைகளை ஊன்றினர். முதலமைச்சர் அதைக் கண்டு அங்கேயே நின்றுவிட்டார். மூன்று நிமிட நேரத்தில் ஒரு ஏக்கரில் விதை ஊன்றும் வேலை முடிந்து விட்டது.

அப்பொழுது சந்திரன் முதலமைச்சர் அருகே வந்து, '' ஐயா மன்னித்துவிடுங்கள் ! உங்கள் அனுமதியின்றி ஒரு சிற்றுண்டி ஏற்பாடு செய்துவிட்டேன். இந்த ஊர் மகளிர் மன்றம் அந்தப்

**சட்டைகள் ஏற்றுமதி.**

ஆண்டு தோறும் இந்தியாவிலிருந்து மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள சட்டைத் துணிகள் (ரெடிமேட்) வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நமது ஆடைகளை வாங்கும் நாடுகளில் குறிப்பிடத் தகுந்தவை இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத்நாடு, கனடா, பிரான்சு, ஜெர்மனி ஆகியவை.

பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. தாங்கள் தயவு செய்து வரவேண்டும்'' என்ருன்.

முதலமைச்சர் சிரித்துக் கொண்டே '' உங்கள் கட்டளையை மீறிடமாட்டேன். ஆனல் சீக்கிரம் என்னை அனுப்புங்கள். இன்னும் பல இடங்களுக்குப் போக வேண்டும்'' என்ருர். '' சரிங்க, இதோ எல்லாம் தயாராக உள்ளது. கை கழுவிக் கொள்ளுங்கள்'' என்று குவளையில் தண்ணீரை நீட்டினன். முதலமைச்சர் கை கழுவிக்கொண்டு புதிய கட்டடத்திற்குள் நுழைந்து சாப்பிட அமர்ந்தார்.

புதிய புதிய உணவு வகைகளாக இருப்பதைக் கண்ட முதல்வர் '' இதெல்லாம் என்ன சந்திரன் ?'' என்ருர்.

'' இவை அனைத்தும் மக்காச் சோளத் தயாரிப்புகள். சுவை மிகுந்தவை மட்டுமல்ல; சத்தும் மிகுந்தவை'' என்று கூறினன். முதலமைச்சர் ருசித்து விட்டுக் கடைசியில், '' பரவாயில்லையே, எல்லாமே நன்ருகத்தான் இருக்கிறது! இது போல் எல்லாருடைய வீட்டிலும் செய்யக் கற்றுக் கொடுங்கள்'' என்று மகளிர் மன்றத் தலைவியிடம் கூறினர்.

பின்பு முதலமைச்சர் எல்லாருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் போய்விட்டார். அவரைத் தொடர்ந்து எல்லாரும் கலைந்து சென்று விட்டனர். வேலைகளை எல்லாம் முடித்துவிட்டுச் சந்திரனும் நானும் மாலை 2 மணிக்கு வீடு வந்து சாப்பிட்டுவிட்டு, இருவரும் பேசிக்கொண்டே வயலுக்குச் சென்ருேம். வழியில் சந்திரனின் மாமா வந்தார். என்னைக் கண்டதும், '' என்ன தம்பி, சௌக்கியமா ? எப்ப வந்தீங்க?'' என்ருர்.

'' சௌக்கியம்தான். நேற்று வந்தேனுங்க. நீங்க சௌக்கியம் தானே ?'' என்றேன்.

'' சௌக்கியத்திற்கு என்ன குறைச்சல் !'' என்ருர். சந்திரன் அவரிடம் பேசுவதில்லையாதலின், நீண்ட தூரம் சென்று என் வருகைக்காகக் காத்திருந்தான். எங்கள் பேச்சுத் தொடர்ந்தது.

'' என்ன உன் சிநேகிதனுக்கு எப்பக் கல்யாணம் ?''

'' தெரியலிங்க.''

'' நம்ம பெண்ணையே கொடுத்துடலாம் என்று நினைக்கிறேன்.''

'' சந்திரன் அப்பாவைக் கேட்டுப் பாருங்களேன்''.

'' நீயே கொஞ்சம் இது பற்றி முயற்சி செய் தம்பி.''

'' அதெப்படிங்க முடியும் ? நான் போன தடவை வந்தபோது கேட்டதற்கு மலைக்கும் மடுவுக்கும் சம்பந்தமா என்று கேட்டதை மறந்து விட்டீர்களா ?''

''அதையெல்லாம் மறந்துவிடு தம்பி ! அப்போ அவன் சோம்பேறியாய் இருந்தான். இப்போ பரவாயில்லையே !''

'' முயல்கிறேன்'' என்று கூறிவிட்டு, நான் விரைந்து விட்டேன்.

மக்காச்சோள வயலைச் சுற்றிக் காட்டிவிட்டு, 2 இளங்கதிர்களை ஒடித்து எனக்குக் கொடுத்தான். அவனும் 2 கதிர்களை ஒடித்துக் கொண்டான். மக்காச்சோள மணிகள் தின்பதற்கு மிகவும் இனிப்பாக இருந்தது. அதைத் தின்று கொண்டே அருகில் இருந்த மாட்டுக் கொட்டகைக்குச் சென்று அங்கிருந்த கட்டிலில் உட்காரந்தோம். சற்று நேரத்திற்குப் பின்பு—

'' சந்திரன் இனிமேலாவது திருமணத்தைப் பற்றி யோசிக்கக் கூடாதா ?'' என்றேன்.

'' இன்னும் சில நன்மைகள் இந்த ஊருக்குத் தேவை. அதையெல்லாம் செய்து முடித்து விட்டுத்தான் திருமணம் பற்றி யோசிக்க வேண்டும். ஊருக்கு மின்சாரமும், மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியும் வந்த பிறகு தான் திருமணம். அதுவரை நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்'' என்ருன்.



'' அவை முடிந்தவுடன் திருமணம் செய்துகொள்ள உனக்குத் தடையில்லையே'' என்றேன்

'' இல்லை'' என்ருன் சந்திரன்.

அப்பொழுது திடீரென அங்கு வந்த சகுந்தலா என் கையிலடித்து ''அவரைச் சத்தியம் செய்யச் சொல்லுங்க அண்ணே'' என்று என்னிடம் கூறியது. அதுதான் அவன் மாமாவின் மகள்—மகளிர் மன்றத் தலைவி.

பட்டிக்காட்டுப் பெண்ணின் துணிவையும், முன் யோசனையையும் கண்டு எனக்கு வியப்பு ஏற்பட்டாலும், சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, பின்பு சந்திரன் மாறிவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் ஏற்பட்டது. இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் சந்திரன், சகுந்தலா நீட்டிய கையில் தன் கையாலடித்து ''என் கடமை முடிந்த பின் உன்னைச் சத்தியமாகத் திருமணம் செய்து கொள்கின்றேன்'' என்று கூறி விட்டான். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அடுத்த வினடி அந்தப் பெண் வெட்கத்துடன் தன் கையை இழுத்துக்கொண்டு ஓடி விட்டாள்.

ஊருக்குத் திரும்புவதற்காக நெடுஞ்சாலையில் நின்றுகொண்டிருந்தோம். பஸ் வரும் சத்தம் கேட்டது. தரையில் இருந்த தோல் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு ''உன்னுல் இந்த ஊருக்கு வழி பிறந்தது ! அதற்காக நானும் உனக்கு நன்றி சொல்லிக்கொள்கின்றேன், இந்த ஊருக்கு ஒளி பிறக்கவும் சீக்கிரம் வழி செய்'' என்றேன்.

அவன் சிரித்துக் கொண்டே ''உன்னுல் தான் வழி பிறந்தது. எனக்கு வழி காட்டியவனே நீ தானே ! அதனுல் நன்றிக்கு உரியவன் நீயே'' என்ருன்.

''வழிகாட்டியது நானு? அல்லது உன் காதலியா?'' என்று கூறி விட்டு, அங்கு வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டு கையை அசைத்து விடை பெற்றுக்கொண்டேன். அவனும் மலர்ந்த முகத்துடன் கையை அசைத்து விடை பெற்றுக்கொண்டு, தன் முயற்சியால் அமைக்கப்பட்ட புதிய பாதையில் ராஜ நடை போட்டுக் கம்பீரமாகச் சென்று கொண்டிருந்தான்.

'தமிழரசு' இதழில்வெளிவரும் சமையல் குறிப்புகளைப் பாராட்டி எழுதி உள்ள பலர், சமைத்திடும் புதிய உணவு வகைகளின் பெயர்கள் புரியாத சொற்களாக இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளனர்.

உண்மைதான். சில சிற்றுண்டி வகைகளின் பெயர்களைப்படிக்கும் பொழுது அவை என்ன என்று நாம் தெரிந்து கொள்ள முடியாத வகையில் உள்ளன. காரணம், அயல் மாநிலங்களில் வழக்கத்தில் உள்ள பெயர்களை அப்படியே குறிப்பிடுவதுதான்!

நமது மாநிலத்தில் அதுபோன்ற உணவு வகைகள் வேறு பெயர்களில் வழங்கினாலும் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. ஏனெனில் தொன்று தொட்டு நாம் பல் வேறு சமையல் முறைகளைக் கடைப்பிடித்துவருகிறோம். காலப்போக்கில் மாறுதல் அடைந்த முறைகளும் உள்ளன. மறைந்து போன சமையல் முறைகளும் உள்ளன. இந்தக் காரணங்களைக் கொண்டே இப்பகுதியில் நம்மிடம் அதிக அளவில் வழக்கில் இல்லாத சமையல் முறைகள் விளக்கப்பட்டு வருகின்றன.

இதோ புதிய சமையல் முறைகள் சில! மராட்டிய மாநிலத்தில் வழங்கும் மிஸ்ஸி ரொட்டி என்ற கறிவகை பற்றிய குறிப்புக்கள்.

## மிஸ்ஸி ரொட்டி

**தேவையான பொருள்கள்.**

மைதா மாவு—100 கிராம்

பட்டாணி மாவு—100 கிராம்

பசலைக்கீரை—60 கிராம்

பச்சை மிளகாய்—2 கிராம்

வெங்காயம்—30 கிராம்

உப்பு—2 சிட்டிகை

எண்ணெய் அல்லது நெய்—30 கிராம்

வதக்க எண்ணெய்—100 கிராம்

தண்ணீர்—200 மிலி

**செய்யும் முறை.**

1. மைதா மாவையும் பட்டாணி மாவையும் சலித்து வைத்துக் கொள்ளவும்.

2. பசலைக் கீரையை நன்றாக நறுக்கி வைத்துக் கொண்டு, தண்ணீர் விட்டுக் கழுவி வைத்துக் கொள்ளவும்.

வெங்காயத்தை அரிந்து வைத்துக் கொள்ளவும்.

3. நறுக்கிய வெங்காயத்தையும், பசலைக் கீரையையும், சலித்து வைத்துள்ள மாவுடன் கலக்கவும்.

4. அதனில் உப்பையும் தண்ணீரையும் சேர்க்கவும்.

5. சேர்த்துக் கெட்டியாகப் பிசையவும்.

6. பிசைந்ததைச் சமமான பாகங்களாகப் பிரிக்கவும்.




7. அப்பளம் மாதிரி, அந்த மாவை, (சப்பாத்தி தேய்க்கும் கல்லில் வைத்து) இட்டுக் கொள்ளவும்.

8. கொஞ்சம் நெய்யைத் தடவிச் சிறிது மாவைப்(உலர்ந்த மைதாமாவு சிறிது மேலே தடவுதல்) போட்டு இரண்டாக மடிக்கவும்.

9. இரண்டாக மடித்ததைத் திரும்பவும் அப்பளம் போல் இட்டுக் கொள்ளவும். வாணலியில் போட்டுச் சூடாக்கவும். பின்னர் நெய்யை விட்டு வாட்டவும். மிஸ்ஸி ரொட்டி தயாராகி விட்டது.

## தக்காளி மகாஷா

| தேவையான பொருள்கள். | அளவுகள் (எட்டு நபர்களுக்கு) |
|---|---|
| தக்காளி | 500 கிராம் |
| வெங்காயம் | 100 கிராம் |
| மசூர் பருப்பு | 225 கிராம் |
| பச்சை மிளகாய் | 2 கிராம் |
| உருளைக்கிழங்கு | 225 கிராம் |
| எண்ணெய் | 50 கிராம் |
| உப்பு | ருசிக்குத் தக்கபடி |
| மாவு | 15 கிராம் |

**செய்யும் முறை.**

1. தக்காளியை நறுக்கி, உப்பைத் தடவித் தனியாக வைக்கவும்.

2. பருப்பையும், உருளைக் கிழங்கையும் வேக விடவும்.

3. வெங்காயத்தையும், பச்சை மிளகாயையும் நறுக்கிக் கொண்டு, வெங்காயத்தை வதக்கவும்.

4. வதக்கிய வெங்காயம், மிளகாய், உப்பு ஆகியவற்றை வேக வைத்த பருப்புடனும், உருளைக்கிழங்குடனும் கலக்கவும்.

5. ஆறியவுடன் தக்காளியைப் போடவும்.

6. மாவைக் குழி குழியாகச் செய்து அதில் தக்காளியையும், இதர பொருள்களையும் போட்டு வதக்கவும்.

7. தக்காளி வெந்தவுடன் எடுத்துச் சாப்பிடவும்.

## உருளைக்கிழங்கு பாலக்

| தேவையான பொருள்கள். | அளவுகள் (நான்கு நபர்களுக்கு) |
|---|---|
| பசலைக்கீரை | 225 கிராம் |
| உருளைக்கிழங்கு | 225 கிராம் |
| இஞ்சி | 10 கிராம் |
| பூண்டு | சில |
| பச்சை மிளகாய். | 5 கிராம் |
| மிளகாய்ப் பொடி. | 5 கிராம் |
| கொத்தமல்லி | சில |
| எண்ணெய் | 30 கிராம் |
| உப்பு | 10 கிராம் |

செய்யும் முறை.

1. உருளைக்கிழங்கை நறுக்கிக் கொள்ளவும்.

2. எண்ணெய்யைச் சூடாக்கி, உருளைக்கிழங்கை வதக்கிக் கொள்ளவும்.

3. மிளகாய்ப் பொடி, பூண்டு, இஞ்சி ஆகியவற்றை அரைத்துக் கொள்ளவும்.

4. மசாலாவையும், பச்சை மிளகாயையும் வதக்கவும்.

5. நறுக்கிய பசலைக்கீரையைக் கலக்கவும்.

6. எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, உப்பைப் போட்டு, மெதுவான சூட்டில் வேக வைக்கவும். தேவையென்றால் கொஞ்சம் தண்ணீரை விட்டுக் கொள்ளவும்.

## உருளைக்கிழங்கு தக்காளி

| தேவையான பொருள்கள். | அளவுகள் (எட்டு நபர்களுக்கு) |
|---|---|
| புலவு அரிசி | 450 கிராம் |
| உருளைக்கிழங்கு. | 450 கிராம் |
| தனியா பவுடர். | 10 கிராம் |
| மிளகாய்ப் பொடி. | ½ டீஸ்பூன் |
| மஞ்சள் பொடி. | 1 சிட்டிகை |
| இஞ்சி | 10 கிராம் |
| பூண்டு | 5 கிராம் |
| வெங்காயம் | 115 கிராம் |
| எண்ணெய் | 55 கிராம் |
| உப்பு | 10 கிராம் |

செய்யும் முறை.

1. அரிசியை ஊற வைக்கவும்.

2. உருளைக் கிழங்கை அலம்பி நறுக்கவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும்.

3. பூண்டு, இஞ்சி முதலியவற்றை நசுக்கித் தண்ணீரில் நனைக்கவும்.

4. எண்ணெய்யை விட்டு வெங்காயத்தை வதக்கி, இறக்கிக்கொள்ளவும்.

5. உருளைக்கிழங்கை வதக்கிக் கொள்ளவும்.

6. தனியா பவுடர், மஞ்சள் பொடி, மிளகாய்ப்பொடி இவைகளைப் போட்டு, மெதுவாக வதக்கவும். பூண்டையும், இஞ்சியையும் சாறு பிழியவும். சில நிமிடங்கள் வரை வேக விடவும்.

7. அரிசியைப் பிழிந்து, உருளைக் கிழங்குடன் பாத்திரத்தில் போடவும்.

8. போதுமான தண்ணீரை விட்டு, உப்பைப் போட்டுப் பாத்திரத்தை மூடவும்.

9. நன்றாக வேகும் வரை வைத்து, இறக்கவும்.

10. பிறகு வெங்காயத்தையும், இதர பொருள்களையும் போட்டுக் கலக்கவும்.

—அஞ்சலை


# “சிந்தாமணி”

## கூட்டுறவு சிறப்பு அங்காடி

வட கோவை...... காந்திபுரம்...... உடுமலை.

—:o:—

திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு,
தலைவர்.

சிந்தாமணியின் வணிகச் சிறப்புக்கள்

தரமான பொருட்கள் ! தகுதியான அளவு !!
சீரான விலை ! சிறப்பான விற்பனை முறை !!
பல்பொருள் விற்பனை ! பணிவான சேவை !!

குறள் நெறி வணிகம் :

வாணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின், —குறள்

“ சிந்தாமணி உங்களை வரவேற்கிறது ”

ஜி. வி. இராமசாமி,
செயலாளர்.



# தீராத விளையாட்டுப் பிள்ளை

எஸ். எம். டயஸ். I.P.S

> **இன்று தமிழகக் காவல் துறையில் மாநிலத் துணைத் தலைவர் பதவி வகிக்கும் திரு. எஸ். எம். டயஸ், காவல் துறைக்கு வருமுன், பல ஆண்டுக் காலம் கல்வித்துறையில் புகழ் மிகு பேராசிரியராக இருந்தவர். எனவே இளைஞரின் எதிர் காலம் பற்றி இவர் அளிக்கும் சிந்தனைகள் நம்மையும் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.**

இன்றைய மாணவர் சமுதாயத்தில் அமைதியற்ற ஒரு நிலை பரவலாகக் காணப் படுகின்றது என்பது உலகறிந்த உண்மை. பிரிட்டன், அமெரிக்காவிலும்; பிரான்சு, செர்மனியிலும் ; போலந்து யூகோசுலாவியாவிலும் ; இந்தோனேசியா, வியட்நாமிலும் ; சப்பானிலும், இந்தியாவிலும் கூட, பல கட்டங்களில் இந்நிலை முற்றி, கிளர்ச்சிகளாக மாறி, வன்முறை விளைவுகளில் முடிந்ததை நாம் கண்டிருக்கிறோம், கேட்டிருக்கிறோம், படித்திருக்கிறோம். பல நாடுகளில் நடக்கும் இந்த மாணவர் கிளர்ச்சிகளிடையே தொடர்பு இருக்கிறதென்று சொல்வதற்கில்லை. ஆனால், மாணவர் சமுதாயம் இந்தக் கிளர்ச்சிகளில் அனுபவங்களையும், வழி முறைகளையும் மட்டுமாவது விழிப்புடன் கவனித்துத் தங்களது வருங்கால இயக்கங்களை நடத்துவதில் பயன் படுத்திக் கொள்கின்றது என்பது தெளிவு. இத்தகைய சூழ்நிலையில், இன்று பரவலாகக் காணக் கிடக்கும் தரக் குறைவான சில சினிமாப் படங்களும், ஏடுகளும் மாணவர்களின் எண்ணங்களைச் சீர்கேடான செயல் முறைகளை நோக்கித் திருப்பி விடுகின்றன என்பதில் ஐயமில்லை. காரணத்தோடோ, காரணமின்றியோ செயல்முறைத் தத்துவத்தை மாத்திரம் பின்பற்றுவது மாணவர்களின் அடிப்படைக் குறிக்கோள் என அமைந்து விட்டது. இந்தக் குறிக்கோளைத் திட்ட மிட்டுச் செயல் படுத்த, மாணவர் சமுதாயத்தில் ஆங்காங்கே தீவிர அரசியல் அடிப்படையில் தோன்றிய சில இளந் தலைவர்களும் காணப் படுகின்றனர்.

இந்த அமைதியின்மையின் காரணங்களை ஆராயப் புகுங்கால் அவற்றில் முதன்மையானது, அண்மைக் காலத்தில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள ஆன்மீகப் பற்றற்ற, ஒழுக்கம் குன்றிய சூழ்நிலை தான், என்று கருத இடமிருக்கிறது. ஒரு சமுதாயம் எவ்வளவுதான் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் பெற்றிருந்தாலும், அடிப்படை ஒழுக்க முறைகளை நீக்கி உயர்வு பெறுவது சாத்தியமன்று. மாணவர் அமைதி யின்மைக்கு இன்னொரு காரணம், ‘ தலைமுறை இடைவெளி ’ ( Generation gap ) என்பது. இளைஞர் சமுதாயம், முதியோர் தலைமுறையின் பண்பாட்டு விதிகளும், வழி முறைகளும் தவறானவை என்று கருதுகிறது. தங்களுக்கு முந்திய தலைமுறையோடு வரலாற்றில் ஒரு கட்டமே முடிந்து விட்டது என்றும், அந்தப் பழங்காலக்காட்சிப் பொருட்களோடு தொடர்பு கொள்வதே தவறு என்றும், செயல் முறையே அரசியலிலும் வாழ்க்கையிலும் முற்போக்கு வாதம் என்றும், அவர்கள் எண்ணுகின்றனர். ஆகவே இந்த ‘ இடைவெளி ’ பல சூழ் நிலைகளில் இரு சாராரிடையேயும் சுமுகமான உறவிற்கு இடையூறாக எழுந்து விடுகின்றது. இதன் விளைவுகளே நாம் கேட்கின்ற, காண்கின்ற, அனுபவிக்கின்ற கிளர்ச்சிகள். மேல் நாட்டில் இவை, வியட்நாம் யுத்தம், இயந்திர முறைகளின் வளர்ச்சி, பல்கலைக் கழகச் சீர்திருத்தம், சமூகக் குறைபாடுகள் போன்ற பல கருத்துக்களை யொட்டி எழுந்தன. ஆனால் நம் நாட்டில்பெரும்பாலும், மாணவர் கிளர்ச்சிகள் கல்வி, பொருளாதாரம், அரசியல் துறைகளில் மாணவர் சமுதாயத்திற்கு ஏற்படுவதாக அவர்கள் எண்ணிக் கொள்ளும் உள்ளூர்க் குறைபாடுகளை யொட்டியே அமைவதைக் காண்கிறோம்.

இவற்றின் பயனாக மாணவர்கள், கல்வி முறைகளை மாத்திரமல்ல, உலகின் போக்கு முழுவதையுமே மாற்றி யமைக்கும் எண்ணத்தோடு பெரிய கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்றார்கள். அவர்களது முதல் வேலை ஜே. பி. பிரிச்டிலி ( J. B. Priestley ) கூறுவது போல “ புத்தகங்களைப் படிப்பதற்குப் பதிலாக அவற்றை எரிப்பதும், கட்டடங்களைக் கட்டுவதற்குப் பதிலாக இடிப்பதும் ” ஆகும். ஏன் இப்படி யென்று கேட்டால், இத்தகைய வன்முறைகளில் ஈடுபடாது நாங்கள் என்ன சொன்னாலும் முதியோர் சமுதாயம் கவனிப்பதாகத்தெரியவில்லை என்று பதில் வருகிறது. இந்தப் பிரச்சினையை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த நிபுணர்கள், இந்நிலை இன்றைய சமுதாயத்தில் பல கோணங்களிலும் காணப்படும் குறைபாடுகளின் பிரதிபலிப்பே என்பதை ஓரளவு ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களும், இந்தச் சூழ் நிலை உருவெடுக்க முக்கிய காரணங்களாக, ஆன்மீக குறிக்கோள்கள் ஒன்றும் இல்லாத கல்வி முறையையும் ; மாணவர் ஆசிரியர்களிடையே மன நிறைவு தரும் நல்ல தொடர்பு அமையாத நிலையையும் ; பெற்றோரும், மற்ற முதியோரும், பொது வாழ்வின் தலைவர்களும் மாணவர்கள் பிரச்சினையை உணர்ந்து கொள்ள முயற்சி செய்யாத தன்மையையும் ; அதன் பயனாகச் சில அதி தீவிர அரசியல்வாதிகள் மாணவர் எண்ணங்களைத் திசை திருப்பிட வகுக்கும் திட்டங்களையும், எடுத்துக்காட்டுகின்றனர்.

இவ்வாறு மாணவர் சமுதாயம் ‘ இரண்டுங் கெட்டான் ’ எனப் பாமர மக்களால் வர்ணிக்கப் படும் ஒரு நிலையில், எங்குச்செல்வது, என்ன செய்வது, என்று

தெரியாமல் திகைத்து நிற்கும் கட்டத்தில், அவர்களுக்கு நல்வழி காட்டும் பணியை முதியோராகிய நாம், அதாவது பெற்றோர், ஆசிரியர், பொதுவாழ்வின் தலைவர்கள் எல்லாரும் செய்கின்றோமா என்பது ஆராய்ச்சிக்குரிய பொருள். 'இளங் கன்று பயமறியாது' என்ற நிலையில் தங்கள் தகுதிக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட பல பிரச்சினைகளைத் தங்கள் தலைமேல் இழுத்துப் போட்டுக் கொண்டு, மாணவர் சமுதாயம் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்னலுருதவாறு, முதியோர் தக்க காலத்தில் குறுக்கிட்டு, அந்தப் பிரச்சினைகளைக் கல்வி நிலையச் சூழ்நிலை அளவிலாவது தீர்க்க முயற்சி செய்தோமா என்பது கேள்வி. இவ்வினாவிற்கு 'இல்லை' என்ற பதிலைத் தவிர வேறு ஒரு பதில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்புவதோடு தங்கள் பொறுப்பு முடிந்து விட்டதாக வாளா விருக்கின்றனர். ஆசிரியப் பெருமக்களோ, மாணவர் ஆண்டு இறுதியில் நடக்கும் பரீட்சை தேறப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதோடு தங்கள் கடமை தீர்ந்தது என்று கருதுகின்றனர். பொது வாழ்விலிருப்பவர்களும் பெரும்பாலும், முந்திய இருசாராரையும் குற்றம் கூறுவதோடு, தங்கள் பொறுப்பைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை, அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. அத்தகைய மக்கட்பேற்றைப் பெற்றவர்கள் தங்கள் மக்களை 'அறிவறிந்தவர்'களாகச் செய்தால் மாத்திரமே அந்தப் பேறு உண்மையில்பெரும் பேறாக அமையும். அதைத்தான் ''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்று புறநானூற்றுப் பெண் புலவர் பொன்முடியாரும் கூறிப் போந்தார். 'சான்றோனாக்கும்' இந்தப் பணி இல்லத்திலேயே தொடங்கிக் கல்வி நிலையப் பருவம் முழுவதும் தொடர்ந்து, தந்தை தன் மகனை ''அவையத்து முந்தியிருப்பச்'' செய்யும் வரை நடைபெற வேண்டியது. ஆரம்பத்திலேயே நல்ல குடும்பப் பண்புகளிடையே மக்களை வளர்ப்பது பெற்றோர் கடன். பள்ளியிலும் கல்லூரியிலும் ஆசிரியர்களோடு நல்லுறவு கொண்டு தம் மக்கள் கல்வி வளர்ச்சியிலும் நன்னடத்தையிலும் ஈடுபாடு உடையவர்களாக இருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்கப் பெற்றோர், ஆசிரியர்களோடும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். அதற்கு அண்மைக் காலத்தில் பல கல்வி நிலையங்களில் நிறுவப்பட்டிருக்கும் பெற்றோர்-ஆசிரியர் குழுக்கள் நல்ல முறையிலே உதவக் கூடும். இதைவிட மிக முக்கியமாக, பெற்றோரின் நடத்தை, அகமும் புறமும் தூய்மையானதாக அமைய வேண்டும். அவர்களுடைய பேச்சுக்கும் செயலுக்கும் முரண்பாடிருக்கக் கூடாது. பொருளீட்டுவதிலும், குடும்பம் நடத்துவதிலும், சான்றாண்மையைக் கடைப்பிடித்துப் பெற்றோர் நடந்தால், பிள்ளைகள் தாமாகவே உயர்ந்த பண்புகளைப் பெற்றுச், சான்றாண்மைப் பாதையில் செல்ல வழி காட்டியதாகிவிடும். அப்பொழுதுதான் மக்கள் 'அறிவறிந்தவர்களாகப்' பயின்று, 'முந்தியிருக்கத்' தகுந்தவர்களாக வளருவார்கள். அவர்களுடைய நிலைமையைப் பார்த்து உலகினரும், ''இவன் தந்தை



என்னோற்றான் கொல்'' என்று, வள்ளுவர்வாக்கின் அடிப்படையில் வியக்கத் தோன்றும். இக்கடமையைப் பெற்றோர் வேத வாக்காக மேற்கொண்டு செயல் முறையில் பின்பற்றும்போது, தலைமுறை இடைவெளி சுருங்கி விடுகிறது. நல்லுறவு வளர்கிறது, கிளர்ச்சி மனப்பான்மைக்கு இடமின்றிப் போய்விடுகிறது.

அடுத்து வரும் மிக முக்கியமான பொறுப்பு, ஆசிரியர்களுடையது. இன்றைய கல்வி நிலையங்களிலே பெரும்பாலும் ஆசிரியப் பெரு மக்கள் தங்கள் பணி, பழங்காலப் பாடதிட்டத்திலுள்ள கருத்துக்களை மீண்டும் மீண்டும் கிளிப்பிள்ளைகளுக்குச் சொல்வது போலச் சொல்லி, ஆண்டு இறுதித் தேர்வுத் துறைக்குப்போதிய அளவு மட்டும் மாணவர்கள் தெரிந்து கொள்ளச் செய்வதோடு நின்று விடுவதாகக் கருதுகின்றனர். இது தவறு. உண்மையான கல்வி என்பது, அறிவு வளர்ச்சியையும் அதன் பயனாக ஏற்படும் உண்மை ஞான உணர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டது. முன்னாள் கிரேக்க அறிஞர்கள் சொல்வது போல உண்மையைத் தேடிச் செல்லும் அறிவு வழிப் பயணமே கல்வி. அப்பயணத்தை மேற்கொள்ளும் மாணவர்களுடைய ஆர்வத்தை நிறைவு செய்து, அறிவினை மலரச் செய்து, பண்பினை வளரச் செய்து, 'கசடறக் கற்று அதற்குத் தக நிற்கும்' தகைமையுள்ள அறிஞர்களை உருவாக்குவதே ஆசிரியர்களின் நற் பணியாக அமைய வேண்டும். இந்தப் பணியைச் சரிவரச் செய்யும் ஆசிரியர்கள், தாங்கள் கல்லாதது இன்னும் உலகளவு உண்டு என உணர்ந்து, அறிவு வளர்ச்சிப்பணியில் தாங்கள் தீவிரமாக இறங்கித் தங்கள் மாணவர்களையும் இதில் ஈடுபாடுடையவர்களாகச் செய்ய வேண்டும். இந்நிலை ஏற்படும்போது ஆசிரியர்-மாணவர் தொடர்பு மன நிறைவு தரும் ஆக்கத் தொடர்பாக அமையும். அப்பொழுதுதான் மாணவர்கள் வீணான பொழுது போக்குகளிலும், பொருளற்ற இயக்கங்களிலும், வன்முறைக் கிளர்ச்சிகளிலும் ஈடுபடமாட்டார்கள். இன்று உலகின் பல கல்வி நிலையங்களிலும் நம் நாட்டில் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பெரும்பாலும் ஆசிரியர், மாணவர் தொடர்பு மன நிறைவு தருவதாக அமையவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆசிரியர்கள் - மாணவர் தொடர்பு நல்ல முறையில் உருவாகாதிருப்பதற்குப் பிறிதொரு காரணம், பாடத் திட்டமும் போதனா முறையும் இன்றைய விஞ்ஞான, பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படையில் அமையாதிருப்பது. இதன் விளைவாக மாணவர் இன்று பயிலும் கல்விக்கும், அவர்களிடம் வாழ்க்கையில் எதிர்பார்க்கப் படுகின்ற திறமைக்கும் தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. கார்டினல் நியூமன் காலத்துப் பொதுக் கல்வி நல்லதுதான். ஆனால், இன்றைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய தனிக் கல்வி இல்லாமல் மாணவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புக் கிட்டுவதாக இல்லை. ஆகவே, பொதுக் கல்வியின் தரத்தை உயர்த்தி அளவைக் குறைத்துத் தனிக் கல்வியை விரிவாக்கி, அதன் தரத்தையும் உயர்த்தினால் மாத்திரமே மாண

வர்கள் படிப்புக்கும் வாழ்க்கைக்கும் இடையே பயனுள்ள தொடர்பு ஏற்பட முடியும். இதை உணர்ந்துதான் சமீபத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், பேராசிரியர்களும் மேல்படிப்புப் பாடத்திட்டங்களை நல்ல முறையில் மாற்றி அமைக்க முற்பட்டிருக்கிறார்கள். இடைக் காலத்தில் கல்வித் தரம் ஓரளவு குறைந்ததற்கு முக்கியக்காரணம் சென்ற 20 ஆண்டுகளாகப் போதிய வசதியும் தகுதியுடைய ஆசிரியர்களுமின்றி உயர்கல்வியை வேகமாக விரிவு படுத்தியது தான் என்று பேராசிரியர் பலர் கருதுகிறார்கள். பழங்கால ஆசிரியர்கள் வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்தவர்களாக, அறிவில் சிறந்தவர்களாக இருந்தகாரணத்தால் மாணவர்களுடைய அபிமானத்தையும், மரியாதையையும் பெற்றிருந்தார்கள். இன்றைய நிலை பொதுவாக அவ்வாறில்லை. ஆசிரியர்கள் மாணவர்களின் ஆர்வத்தை முழு அளவில் நிறைவு செய்யாதபோது, தகுதியற்ற மற்ற எண்ணங்களும் செயல் முறைகளும் கல்வி வானில் தோன்றுவதில் வியப்பிற்கிடமில்லை.

மாணவர் சமுதாயத்தில் அமைதியற்ற நிலைக்கு நமது நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலையும் ஒரு பின்னணிக் காரணம் என்று ஒத்துக்கொள்ளவேண்டும். அண்மைக் காலத்தில் கிளர்ச்சி, வன்முறை என்ற அடிப்படையில் தான் பொதுவாக எந்தக் குறைபாட்டுக்கும் தீர்வு காணமுடியும் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டுவிட்டது. முன்பு பெரிய அரசியல், சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற, மாணவர் இயக்கம் அமைந்தது என்றால், இன்று பல்கலைக் கழகத்தில் எழும் சிறிய பிரச்சினைகளுக்காகவும் ஏன் கிளர்ச்சி ஏற்படக் கூடாது என்று மாணவர் கேட்கின்றனர். ஆகவே, தேர்வு முறையை எதிர்த்து இயக்கம், ஆசிரியர் மாற்றத்தைக் கண்டித்துக் கிளர்ச்சி, உணவுத் தரத்தை உயர்த்த ஆர்ப்பாட்டம் என்று பல தரப்பட்ட குழப்பங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. பொது வாழ்விலுள்ள தலைவர்களிடம் மாணவர்களுக்கு முன்பிருந்த அன்பும் மரியாதையும் இன்று அந்த அளவு இருக்கின்றது என்று சொல்லுவதற்கில்லை. இளம் தலைமுறையினர் பெரியோர்களுக்கு மரியாதை செய்யும் பழம் பண்பாடுகளைச்சரிவர மதிக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, முதிய தலைவர்களுடைய பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாட்டினாலும், இளம் தலைமுறையினரோடு அவர்கள் மனம் கலந்து பழகி நல்ல தொடர்பு கொள்ளாத காரணத்தாலும், இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று அறிஞர் கருதுகின்றனர். ஆகவே, சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் எல்லாருக்குமே, இளம் சமுதாயத்தினருக்குச் சொல்லிலும் செயலிலும் நல்வழி காட்டி, அவர்களோடு நல்லுறவு கொண்டு பணியாற்ற வேண்டிய பொறுப்பு, பெரிய அளவில் இருக்கின்றது என்று சொன்னால் அதில் தவறில்லை.

இன்றுள்ள கல்வி முறையில் காணப்படும் முக்கியமான குறைபாடு, வாழ்க்கையின் உண்மைகளைத் தழுவி அந்தக் கல்வி முறை அமையாதது தான் என்று பாரதக் குடியரசின் முன்னாள் தலைவர், டாக்டர் சாகீர் உசேன் அவர்கள், கூறி இருக்கிறார்கள். பாடத் திட்டத்தை வாழ்க்கை முறையோடு இணைந்ததாகச்செய்வதாலும், நூலகம், விளையாட்டு அரங்கம் முதலியவற்றை நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்வதாலும், நடைமுறையில் மக்களோடு மாணவர்கள் நேரடித் தொடர்பு கொள்ளச் செய்வதாலும், இந்தக் குறைபாட்டுக்குத் தீர்வு காணலாம் என்பது அவர்களுடைய கருத்து. இவ்வகையில் மக்களோடு கொள்ள வேண்டிய தொடர்பின் தனிப்பட்ட மூன்று அம்சங்களை இது வரை நான் சிறப்பாக விவரித்தேன். இவை முறையே :—

(1) மாணவர்களோடு அவர்களுடையபெற்றோர்கள் கொள்ள வேண்டிய தொடர்பு.

(2) அன்னாரோடு, அவர்களுடைய ஆசிரியர்கள் வைத்துக் கொள்ள வேண்டிய தொடர்பு.

(3) அவர்களோடு பொதுவாழ்வில் உள்ள தலைவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டிய தொடர்பு—என்பனவாகும்.

இவைகள் எல்லாம் மனநிறைவு தரும் வகையில் அமைந்துவிட்டால் முதியோர் தலைமுறைக்கும் இளைஞர் சமுதாயத்துக்கும் நடுவே, இன்று இருக்கும் 'தலைமுறை இடைவெளி' (Genaration gap) யின் குறுக்காக நல்லதொரு பாலம் நிறுவப்பட்டு விட்டதாகக் கருதலாம். அத்தகைய ஒரு பாலத்தை அமைத்து இளைஞர்களின் பிற்காலத்தைப் பொற்காலமாக உருவாக்குவது முதியோர் சமுதாயத்தின் தலையாய பொறுப்பு.

### உண்மையான வரலாறு தேவை !


உண்மையான வரலாறு எழுதப்பட வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. ஓர் ஊரின் பெயரைக் கேட்டால் அது தோன்றியதற்கு வரலாறு இருக்கும். மணல்மேடு இருந்தாலும் அதற்கு ஒரு வரலாறு இருக்கும். இந்தியா முழுவதிலும்—தூரக்கிழக்கு நாடுகளிலும் எதோடு ஒப்பிட்டாலும் தமிழகத்திற்கு ஒப்பான வரலாறு இருந்தது இல்லை என்று நாம் பார்க்கிறோம். நெப்போலியன் பெயரைக் கேட்டால் இங்கிலாந்து நாட்டில் அழுகிற குழந்தை வாய்மூடி விடும்; நெப்போலியனைப்பற்றி பிரஞ்சு நாட்டில் இருப்பதைவிட இங்கிலாந்து நாட்டில் நூல்கள் ஏராளம். அப்படிப்பட்ட ஆர்வம் வேண்டும்.

தமிழ்நாட்டிலே இருந்து லண்டனுக்குச் செல்லும் எஞ்சினியரிடத்தில் பாண்டிய மன்னனைப் பற்றிக் கேட்டால் தெரியாது என்று சொன்னால் நமக்குப் பெருமையல்ல.

—பேரறிஞர் அண்ணா



PSG



# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

**விவரங்களுக்கு எழுதுங்கள்:**

## பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG *the hallmark of high standard*

**விற்பனைக் கிளைகள்:**

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

# வெண்பாப் போட்டி

## 5. ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று

● கட்புலம் நீர்இறைக்கக் கம்மும் குரலிறைஞ்ச
மட்கலம் சோறேற்று வாட்டுபசிக்(கு) —உட்கொளா(து)
அப்போதும் பிள்ளைக்கே அள்ளியூட்டும் தாயன்புக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கீ. க. இராசேந்திரன், பி.எஸ்ஸி, சென்னை-7.

தந்தையிறந் தாண்டிரண்டில் தாயுமவர் பின்சென்றாள்
சொந்தமெனச் சுற்றமில்லை ! சொத்தில்லை !—நொந்த
யெமை
இப்பாரில் வாழ்விக்க ஈரமிலாக் கொல்பசிக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—செ. நாராயணன், சென்னை -14.

அன்பின் திருவுருவாம் ; ஆர்வத்தின் பேரூற்றாம்
துன்பம் துடைக்கும் துணைஅமுதாம்—மண்புவியில்
எப்போதும் தெய்வம்போல் என்னைக்காத் தாள்தாய்க்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பேகன், மதுரை-1.

செங்கோல் வளையாத செந்தமிழ் நாட்டிடை
மங்காப் புகழ்பெற்ற மாவீரம்—பொங்குமெனச்
செப்புந் தரமிக்க அண்ணாவின் சொல்லுக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—த. உ. சுப்பையன், கோவை.

அண்ணன் அடிபற்றி ஆட்சிசெயும் ஐங்கோடிக்
கண்ணை நிகர்த்த கலைஞரவர்—எண்ணமெலாம்
எப்போதும் நாடுயுர ஏங்குவதால் யாம்அதற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—வி. இரத்தினம், பி.ஏ., பி.எல். பெங்களூர்-21

ஒண்டொடியே, நாதசுரம் ஒன்றேதான் இன்றைக்கும்
தண்டமிழ் நாட்டின் தனிச்சொத்தாம்—கண்டுகொள்வாய்
இப்பாரில் இன்னிசையால் இன்பம் வழங்குமதற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

நாணம் மடம்பயிர்ப்பு நல்லச்சம் நான்கினையும்
பேணும் பெருந்திண்மைக் கற்பினையும்—வேணளவின்
உப்பாக வூடலையும் உற்றதமிழ்ப் பெண்டகைக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—தமிழ்வடிவு, தாராபுரம்.

முந்நூறு நாட்சுமந்து முத்தெனவே பெற்றெடுத்துப்
பண்ணூறு பாட்டினொடும் பாலமிழ்தம்—எந்நாளும்
தப்பாமல் தானளித்துத் தாய்வழங்கும் அன்பினுக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் இரா. கேசவன், ஒசூர்.

எங்கும் தமிழ்முழக்கி ஏழைக்குக் காணிதந்து
பொங்கும் பசிபோக்கிப் பொற்புடன்—மங்கலமாய்
ஒப்பிலாச் சாதனைகள் உண்டாக்கி ஆள்வதுபோல்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—சு. வேல்முருகன், தவளக்குப்பம்.

அப்பாலுக் கப்பால் அருந்தமிழை ஆர்வமுடன்
தப்பாது காக்கத் தமிழரசு—முப்பாலுக்
கிப்பாரில் உள்ளோர்க் கிருக்கின்ற நூல்களிலே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—க. கணேசபிள்ளை, பி.ஏ., திருவனந்தபுரம்.

கற்ற இலக்கணம் கண்டு கவிதைசெயும்
உற்ற புலவருக் கோர்விருந்தாம்—நற்றமிழில்
தப்பாக வன்றித் தகவாகும் வெண்பாவுக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பா. பாப்பு. இராமநாதன், பேரையூர்.

---

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்

திரு. கீ. க. இராசேந்திரன் பி. எஸ்ஸி.
14, பெரியதம்பி முதலி தெரு,
சூளை, சென்னை-7.

காரளிக்கும் வண்மைக் கரத்தமிழர் மாப்புகழைச்
சீரழிக்க வந்தமதத் தீச்சாதிப்—போரழித்து
இப்பார் தனைத்திருத்தும் ஈ.வே.ரா.வின் பணிக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று

—நக்கீரன், நரிக்கல்பட்டி.

பெற்றதனால் பேணி; பிறர்போற்றத் தன்மகனைக்
கற்றவனா யாக்கிக் கருத்தூட்டி—நற்றமிழாய்
இப்பாரில் வாழ ; இயங்குகின்ற தாய்மைக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பேரிறைவன், பழனி.

ஆலைத் தொழிலும் அறிவியல் கல்விமுதல்
மேலான தாய்மொழியும் மேன்மையுறச்—சோலையாய்
செப்பமுடன் வேளாண்மை சீர்பட்ட இந்நாட்டிற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—இரசியா, நத்தம்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியாம் சொல்லரசன்
காட்டுக் குயிலைக் கலைகொஞ்சும்—பாட்டமுதாம்
அப்புகழைப் பாட அணிவிருந்தாம் இன்பிற்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

தோற்றம் தொலைக்கும் தொழுநோயன் ஆயிடினும்
ஏற்றருளும் தாய்மையினை என்னென்பேன் !—சாற்றலரும்
தப்பார்த்துச் சொல்வேன் தமிழரசே, தாய்மைக்கிங்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—வை. இராஜசேகரன், காரைக்கால்.

மஞ்சள் முகமும் மலர்க்குழலும் தன்குழந்தை
கொஞ்சும் இளஞ்சிரிப்புக் கூட்டுக்குள்—தஞ்சமிட
முப்பாலின் மிக்க முலைப்பால் தரும்தாய்க்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—மு. விசுவபாரதி, திருமயம்.

வள்ளுவனே சொல்லிட்டான் ; வாட்டத்தைப் போக்குகின்ற
நல்லுழவே நற்பணியாம் ; நானதனைத்—தள்ளிவிட்(டு)
எப்படி வேறுரைப்பேன் ; ஏருழவர் செய்பணிக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—மு. நாராயணன், அறந்தாங்கி.

செம்பஞ்சுப் பாதங்கள் செக்கச் சிவந்திடவே
பம்பரம்போ லாடுகின்ற பாவனையில்—நம்கண்முன்
இப்புவியின் நற்கலையில் என்றும் பரதத்திற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ச. மாதவன், இராஜபாளையம்.

காடு திருத்திக் கழனிகளாய் மாற்றிநம்
நாடு செழிக்கவைக்கும் நம்உழவன்—பாடுபட்டே
உப்பாகச் சிந்தும் உயர்வியர்வை நீருக்கிங்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—மு. சிவலிங்கம், சிவகாசி.

கன்னித் தமிழைப்போல் கற்றிடவும், கேட்டிடவும்
இன்பந் தரும்மொழி இல்லையே—மண்ணுலகில் ;
எப்போதும் எங்கும் இனிமையில் வெல்லுதற் (கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பெ. பழனிச்சாமி, இராசாக்காப்பட்டி.

காய்விரும்பி நல்ல கனியொதுக்கும் தன்மையைப்போல்
தாய்மொழியை விட்டுப் பிறர் மொழியில்—ஆய்கல்வி
ஒப்பித்து வாழ உரைப்பார்தம் வஞ்சனைக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

முன்னாள் செருவில் முதுதந்தை மாய்ந்துவிடப்
பின்னாள் கொழுநன் பிரிந்துவிட—அந்நாள்தன்
ஒப்பில் ஒருமகனை ஓட்டியதாய் வீரத்திற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கு. பொன்னையா, பி.ஏ., நரிக்கல்பட்டி.

பொன்னும் பொருளொடு போற்றும் பணியாளர்
இன்னமும் மேற்பதவி ஏற்றங்கள்—மின்னிடினும்
துப்பாருஞ் சுத்தச் சுயமரியா தையதற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—எம். எஸ். அழகரசு, சென்னை-33.

பிச்சை யெடுத்துப் பிழைப்பாளைத் துச்சமென் (று)
இச்சைக்குச் சற்றே இணங்கென்றான்—அச்சழகி
அப்படியா என்றே அறைந்திட்டாள் ! அப்பெண்மைக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—இரா. நாராயணன், பி.எஸ்ஸி., பி.டி., காட்டுப்பாடி.

தோளிடித்தேன்! வாயெடுத்தாள்! தூயவளைக் கைப்பிடித்தேன்
தூளியினைக் காட்டியே தூரவென்றாள்!—நாலிரண்டு
இப்போ திருக்கையிலே இன்னுமேன் ? என்றாளுக்கு
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பா. தங்கவேலன், காட்பாடி.

உலகத்தார் வாழ உயர்நெறியைக் காட்டி
நிலவுபுகழ் பெற்று நிலைத்தே—இலங்குகிற
முப்பால் சுவையூட்டி முற்றும் திருக்குறட்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—முத்தரசன், காரைக்குடி-1.

இலையென்றார்க் கில்லையெனு ஏரார் நற்குமணன்
தலைவெட்ட வாள்தந்த தண்ணளிக்குக்-கலைப்புலவர்
ஒப்பாது சென்ற உயர்வான செய்கைக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—செண்பகப் பிரியன், கோவை.9.

வள்ளை ஒலியோடு வார்முரசும் வாத்தியமும்
புள்ளொலியும் பூவையர் பொன்மொழியும்-கள்ளருந்தி
எப்பாலும் வண்டார்க்கும் இன்னிசையும் தம்மழலைக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—சு. செல்லப்பன், நாகர்கோவில்-2.

மழலை மொழிபேசி மண்ணணைந்த கையால்
குழையக் குழையத் தழுவிப்-பழகுநடைத்
துப்பார்வாய்ச் சொள்ளொழுக்கும் செல்வத்துக் கிப்பாரில்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ந. ஒளியரசு, சென்னை-2.

நம்முடலில் ஓடுகின்ற நாடி நரம்புகளால்
செம்மையுறும் மூளையெனும் செல்வமதை-எம்மருங்கும்
எப்போதும் நன்மைதனில் ஏவும் மனத்திற்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் சி. இரத்தினவேலனார், சென்னை-19.

அள்ளக் குறையாத ஆழ்ந்த கருவூலம்
உள்ளத் தெவிட்டாத ஓங்குபுகழ்-வள்ளுவனின்
முப்பாலைப் பெற்றநம் மூவாத் தமிழ்மொழிக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—அ. வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

யாப்பறிவும் நற்கருத்தும் ஆற்றொழுக்குச் சொன்னயமும்
பாப்புனையும் ஒண்டிறனும் பாவலர்க்குப்-பூப்புனைவாய்ச்
செப்புஞ்சீ ரத்தனையுஞ் சேர்ந்திலங்கும் ஆற்றலுக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—எம். முருகன், திட்டக்குடி.

பூவிருக்கும் மெய்தழுவிப் பொற்கொம்பு பூண்டவொரு
கோவிருக்கும் மென்கரங்கள் கோத்திருக்கும்-காவிருக்கும்
செப்பா ரிதழமுதிற் றேய்ந்திருக்கும் நாரிகொடிக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—அ. கிருஷ்ணன், கணியூர்.

பூவிழந்த மங்கை புதுவாழ்வு காணுதற்குப்
பாவினிலே நீதிசொல்லிப் பைந்தமிழ்ப்பூங்-காவினிலே
எப்போதும் கூவு மெழிற்புதுவைத் தீங்குயிலுக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—வே. பாலசுப்பிரமணியன், பட்டுக்கோட்டை.

கண்மலரும் கைமலரும் கால்மலரும் கூத்தாடி
பண்மலரும் நேரத்தில் பாமலரக்-கண்டவர்கள்
முப்பாகக் கூத்தின் முறையறிய ; அம்பலத்தில்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—அன்னைதாசன், பருத்தியூர்.

வெண்பா மனத்தோடு வஞ்சிப்பா ரோடுயர்ந்தாய்
கண்டோர் களிக்கக் கலிப்பாவாய்-பண்பாவாய் !
எப்போ மருட்பாவாய்! என்னு சிரியப்பா
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் ச. பாலுச்சாமி, கோட்டூர்.

அறிவிற்கும் அன்பிற்கும் ஆற்றலுக்கும் நல்ல
செறிவிற்கும் சிந்தனைக்கும் சீரார்-குறிக்கோட்கும்
துப்பிற்கும் தூய்மைக்கும் தொல்லுலகில் யானென்றும்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ந. சுப்பராசு, திருப்பனந்தாள்.

அனிச்ச மலரே ! அணிமயிலே ! அன்பே !
கனிச்சா றளிக்குங் களிப்பே !—தனிச்சீர்மை
தப்பாத இன்பத் தடாகமே ! உன்னன்பிற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—வெண்ணெய் வேலன், ஆனத்தூர்.

நாடு செழித்தால் நலிவாரும் எங்குண்டு ?
காடு திருத்திக் கடுமுழைப்பால்-பாடுந்தான்
எப்போதும் நன்னிறைவை ஏற்கும் நிலையினைத்தான்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—இளமுகிலன், தூத்துக்குடி-2.

தோடுவெடி மாதுளையோ! தோன்றும் இளம்பிறையோ!
நீடுகொற்கை ஈந்தவெழில் நித்திலமோ!-கூடொளிசேர்
துப்போ! மலைமணியோ! தூமொழியே! நின்மூரற்கு
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கோ. மணிமேகலை, குலசேகரன்பட்டினம்.

கொட்டும் புனலாடும் ; கோடை யிடிமுழங்கும் ;
சொட்டுங் கரும்புத்தேன் சூழ்ந்தாடும்-மட்டிலா
எப்பாரும் ஏங்கிடும்எம் அண்ணன் சொற்றமிழ்க்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ப. அ. எழிலன், பி.எஸ்ஸி., புதுவை-1.

காடு புகும்முன் கமண்டலம் ஏந்தும்முன்
நாடு சிலவழியே நாடும்முன்-கூடுகின்ற
ஒப்பில் ஒருவன் ஒருத்தியுளம் ஒன்றுதற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கு. இரமாதேவி, சென்னை-61.

செப்புந் தமிழ்மறையாய் செம்மைக் கினியமுதாய்
முப்பால் முழங்கும் முதுநூலாய்—இப்பாரைத்
துப்பாக்குந் தெய்வப் புலவர் திருக்குறட்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—எழிற்கோவன், ஓசூர்.

ஏணியெனத் தோணியென இன்னும்கை காட்டியென
நீணிலத்தில் வாழும் நிலையினும்—மாணவர்கள்
எப்போதும் நன்மையுற ஏற்றபணி செய்வோர்க்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

திண்மை இலக்கணத்தால் தீஞ்சுவைசேர் நூல்வளத்தால்
பண்ணார் இசைஇளமைப் பான்மையினால்—நுண்மையுறச்
செப்பும் அகம்புறத்தால் தேர்ந்த தமிழ்மொழிக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

நன்றென்று முன்பு நவின்றதனைப் பின்திரித்து
முன்னவனே இன்று முறைகேடாய்—இன்றமிழா
இப்போது பாடமொழி என்பார்தம் கூற்றுக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ஈ. மு. நமசிவாயம், ஈரோடு.

என்ன நினைத்தோ இளைஞர் அணிதிரட்டிக்
கன்னல் தமிழைக் கடிகின்றார் !—அன்னவர்தாம்
தப்பாகப் போரிடினும் தாய்மொழியில் கற்றலுக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

எண்ணில் பெருந்தலைவர் இந்நாட்டில் மாண்டபின்
கண்ணீர் உகுத்தார் கதையொடுநாம்—எண்ணுங்கால்
இப்பாரில் அண்ணா இறுதிநாள் ஊர்வலத்திற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—க. வீ. வரதராசன், சென்னை-23.

வெண்ணிலவில் காலூன்றி வீரத் திறங்காட்டி
கண்ணென் றறிவியலைக் காத்துத்தான்—முன்னின்றே
அப்பால் நிலமாந்தர் ஆற்றும் பெருஞ்செயற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—பி. தனலக்குமி, இராசபாளையம்.

முத்தச் சுவையுணர்வும் முப்பால் தமிழுணர்வும்
சித்தம் மயக்கிவிடும்! சிந்தித்தால்—இத்தரையில்
அப்பா வெனவழைக்கும் அன்பு மழலைக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—இராம. சோமசுந்தரம், த. முருங்கப்பட்டி.

பொதிய மலைதோன்றிப் பூவிரிக்கும் வையை
நதியில் விளையாடி நல்ல—நிதியுற்றாய் !
செப்பு மொழியுள்ளே செந்தமிழே உன்றனுக்கே
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—சேகு. சுப்ரமணியன், எம்.ஏ., புது டெல்லி-1.

கன்னித் தமிழ்நாட்டின் கற்புக்கும், மற்றுமதன்
பொன்னித் திருநதியின் பொற்புக்கும்—மன்னுபுகழ்
செப்பரிய விற்பனனும் செந்நாப் புலவனுக்கும்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—அரங்க பசுபதி, நிர்த்தனமங்கலம்.

மக்களுயிர் கொல்லும் வறுமைப் பசிநீக்கத்
தக்கமணி மேகலையைத் தந்ததனால்—மிக்கபுகழ்
இப்பாரில் சாத்தன் இனிதடைந்தான்; அந்நூலுக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கொ. மா. கோதண்டம், இராஜபாளையம்.

இருளிரிய வெண்சுடரை எங்கும் பரப்பிக்
கருணையினா லெவ்வுயிருங் காக்க—அருமைமிகு
வெப்பங் கொடுக்கும் விரிகதிர்செஞ் சூரியற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—கே. எம். சுப்புராம், திண்டுக்கல்-3.

மாலைக் கதிரவனின் மஞ்சளொளி யில்மூழ்கிக்
கோலத்தென் காலில் குனிந்தாடும்—சீலமுறும்
செப்பரிய நெற்பயிரின் சீரழகிற் கிவ்வுலகில்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—ஜி. வி. அர்த்தநாரி, பி.ஏ.,பி.எல். வேலூர்.

செல்வம் செழித்தோங்கி, தெள்ளறிவு தானோங்கி,
அல்லல், வகைபிணிகள் அற்றழிந்தே—எல்லாரும்
ஒப்பரிய கூட்டுறவாய் ஓர்குலைபோல் வாழ்வதற்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—என். சி. கிருஷ்ணசாமி, பொன்மலை.

ஈன்றநற் றாய்நெஞ்சில் ஈட்டி எறிவதுபோல்
ஆன்ற தமிழை அருந்தாயை—வேண்டாது
தப்பா திகழ்வோர் தகவின்மைக் கிப்பாரில்
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.

—புலவர் கி. காளியப்பன், செட்டியார்பாளையம்

வாய்மையெனும் செல்வமதை வாழ்வில் துணைக் கொண்டு
காய்தலில்லா யாண்டும் கடனாற்றித்—தூய்மையெனும்
துப்பாக்கித் தன்னோடு தொண்டாற்றுந் தோழருக்(கு)
ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று.


—ஆதவன், பெ. வெண்மணி

# செய்திகள்!

# செய்திகள்! செய்திகள்!

## கைரேகை வைத்தியம்

கைரேகையை வைத்து ஆருடம் கூறுகிறார், மரத்தடி ஜோசியர்! ரேகையை வைத்துக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கின்றனர், காவல் துறையினர். விரைவில் கைரேகையைப் பார்த்து நோயைக் கண்டு பிடிக்கப் போகிறார்கள், டாக்டர்கள். விரலிலுள்ள ரேகைகள் அல்லது உள்ளங்கை ரேகைகளை வைத்து என்ன நோயிருக்கிறது அல்லது வரப் போகிறது என்பதை டாக்டர்கள் கண்டு பிடிப்பார்கள். லண்டனிலுள்ள மருத்துவமனையில் பணியாற்றிவரும் டாக்டர் ஜூனியன் வெர்போவ் ஏற்கனவே தோல் வியாதிகளுள்ள நோயாளிகள் பலரின் கைரேகைகளைப் பதிவு செய்து ஆராய்ச்சி செய்து வருகிறார். பிரிட்டனில் பலருடைய கை ரேகைகளில் முடிச்சியும், சுழலும், வளைவுகளும் உள்ளன. சில




நோய்களால் பாதிக்கப்படும் போது இதில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. எடுத்துக் காட்டாக ஒருவிதத் தோல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் ரேகையில் கொஞ்சம் முடிச்சிகளும் அதிகச் சுழல்களும் உள்ளன என்கிறார் அந்த டாக்டர். உடலில் உள்ள திசுக்களில் ஏற்படும் மாறுதலினால் இந்த மாறுபாடு ஏற்படுகிறது என்று அவர் கண்டுள்ளார்.

வருங் காலத்தில் குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களது கைரேகை பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வர இருக்கும் நோயினைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்க அவை பயன்படுத்தப்படும் என்று டாக்டர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## அன்பின் சக்தி!

ஆராய்ச்சிக்காக எலிகளைப் பயன் படுத்துகிறார்கள் அல்லவா? அந்த எலிகளிடம் ஆராய்ச்சியாளர்கள் அன்பு செலுத்தினால், அதன் விளைவு வித்தியாசமாக உள்ளது.



கனடாவில் ஓர் ஆய்வுக் கூடத்திலுள்ள ஒரு பெண் ஆய்வாளர், ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் சீமை எலிகளிடம் மிகவும் அன்பு காட்டினார். ஒவ்வொரு எலிக்கும் ஒரு பெயரிட்டுத்தான் அழைப்பார். எலிகளும் அந்தப் பெண்மணியிடம் அன்பு காட்டின. பலன்! விஷத்தை அவைகளின் உடம்பில் பாய்ச்சிய போது 20 சதவீதம் எலிகள் தான் செத்தன. வேறு யாராவது அந்த விஷத்தினைச் செலுத்தி இருந்தால் 80 சதவீதம் சாவு ஏற்பட்டிருக்கும். "எலிகளுக்கு அந்தப் பெண்மணிடம் ஏற்பட்ட அன்புதான் நச்சை முறித்து விட்டது. வேறு எந்தக் காரணமும் புலப்படவில்லை" என்கிறார் அங்குள்ள டாக்டர்.

## திமிங்கலத்தின் கதை

ஆடு மாடுகளைப் போல் குட்டி போட்டுப் பால் கொடுக்கிறது திமிங்கலம். 16 மாதக் கர்ப்பத்திற்குப் பின், குட்டி பிறக்கிறது. பிறக்கும்போது குட்டியின் எடை ஒரு டன்—அதாவது 2,240 பவுண்டு. சுமார் பத்து தாராசிங்கின் (மல்யுத்த வீரர்) எடைக்குச் சமம். நீளம் நாலரை மீட்டர் (பதினாலே முக்கால் அடி).

பெரிய ஆண் திமிங்கலம் எவ்வளவு பெரிதாக இருக்கும்? 18 மீட்டர் நீளம் (59 அடி). 60 டன் எடை (ஒரு லட்சத்து முப்பத்தி நாலாயிரத்து நானூறு பவுண்டு). ஒரு பெரிய திமிங்கலத்தின் மூளை மட்டும் எட்டரைக் கிலோவுக்கும் அதிகமாக இருக்கும். உலகத்திலேயே மனிதனுக்குத் தெரிந்த அளவில் மிகப் பெரிய மூளை இதுதான். இருதயம் 180 கிலோ எடையிருக்கும். ஒரு இருதயத் துடிப்பிற்குச் சுமார் 20 லிட்டர்




இரத்தத்தை நரம்புகளிலே பாய்ச்சுகிறது திமிங்கலம்.

பெரிய திமிங்கலம் ஒருநாள் சாப்பிடும் உணவு ஒரு டன் இருக்கும்.

திமிங்கலக் குட்டி 9 ஆண்டுகளில் வாலிப வயதை அடைகிறது. 30-லிருந்து 40 ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடைகிறது.

சுமார் 75 ஆண்டுகள் உயிர் வாழ்கிறது.




# 4

இரு மொழிகளையும், ஒவ்வொரு பட்டதாரி வகுப்பு மாணவரும் கற்கும் முறையில் பாடத் திட்டங்களை மாற்றி அமைப்பதென்று, ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.

பினனர், மொழிப்பாடக் குழுக்களின் தலைவர்கள். பிற பாடக் குழுக்களின் தலைவர்களோடு கலந்து ஆலோசித்தார்கள். அறிவியல் துறைப் பாடங்களுக்கும் மானிட இயல் பாடங்களுக்கும் அதிக நேரம் ஒதுக்கினால்மட்டுமே அப்பாடங்களின் தரத்தை நாம் உயர்த்த முடியும். உயர் கல்வியென்பது, மொழிகளைப் படிப்பதோடு நிற்கக் கூடாது ; பிற பாடங்களையும் போதிய அளவு கற்பதாக அமைய வேண்டும். அக் குறிக்கோளை அடைய, அதிக நேரம், பாடங்களுக்கு ஒதுக்க வேண்டும். முன்னர் பி.எஸ். ஸி-க்கு ஒதுக்கியது போல், சில மணிகள் ஒரு மொழிக்கு மட்டும் ஒதுக்குவதும் தீங்காகலாம். இப்போதைக்கு, மொழிப் பாடங்களில் இருந்து விடுபடும் வாரத்திற்கு ஐந்து மணிகளை வைத்துக் கொண்டு, பாட அளவையும், தன்மையையும் சீர் செய்வதென்று முடிவுசெய்தனர், இணைப்புக் கூட்டத்தில்.

அதிகப் பாடங்களைக் கொடுப்பதாலேயே, கல்வியின் தரம் உயர்ந்து விடாது. கற்றுக் கொடுக்கும் போக்கில் சரியான மாற்றம் ஏற்பட வேண்டும். கல்வி, ஒரு வழிப் போர்க்காக இருத்தல் ஆகாது. ஆசிரியர் பொழிய; மாணவர்கள், மெய்ம் மறந்து, ஏற்றுக் கொள்ளும் முறை நீண்ட வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கும் பக்குவத்தை வளர்க்காது. ஏற்றுக் கொண்ட தகவல்களும்செரிக்காது. மாறாகக் கலந்து கற்கும் முறைகளும், கல்லூரிகளில் இடம் பெறவேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துரையாடி,கற்றுக்கொண்டே போவது, நிலைத்து நிற்கும். காலத்திற்கே கை கொடுக்கும். எனவே, முழுக்க முழுக்கச் சொற்பொழிவு என்னும் மரபை மாற்றி, சொற்பொழிவு, கருத்தரங்கு, கலந்துரையாடல், தானே கற்று வந்து விளக்குதல் ஆகிய பல் முறைக் கல்வி, தர உயர்விற்கும் வாழ்க்கைப் பயனுக்கும் உகந்தது என்ற கருத்துக்கள் வெளியாயின. பல்முறைக் கல்விக்கு வழிவகை செய்வதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

பாடங்களின் தரத்தை உயர்த்த, புதிய தலைப்புகள்,புதிய தகவல்கள், புதிய நுட்பங்கள், பாடத் திட்டங்களில் புகுந்தால் போதுமா? போதாது. பேராசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதிலேயும் இடம்பெற வேண்டாமா? வேண்டும்!

தம்தம் துறையறிவு வளர்ச்சியைப் பெறுவதில், எல்லாப் பேராசிரியர்களுக்கும் சமவாய்ப்புகள் இல்லை. சில, சிறந்த கல்லூரிகளில் அறிவியல் இதழ்களையும் நூல்களையும் சுடச் சுட வாங்கி விடுகிறார்கள். அங்கும் கூட, எல்லா ஆசிரியர்களும், அவற்றை ஒரு முறை புரட்டிப் பார்த்து, தங்கள் அறிவை விளக்கம் பெறச் செய்து கொள்கிறார்கள் என்பதற்கில்லை. அப்படிப் பயன்படுத்திக் கொள்வார் ஒருவரானால், சொந்தத் தொல்லைகள் காரணமாக, 'அவற்றால் நன்மை பெற முடியாதவர் பலர் ஆவர். அவர்கள் அறிவினையும், புதுமையோடு, சுடர் விட்டு எரியச் செய்ய வேண்டும். அப்போதே கல்லூரி வகுப்புகளில் பாடங்களில் புத்தொளி வீசும் ஆசிரியர்கள் அறிவினைப் புதுக்கிச் சுடர் விடச் செய்வதற்கு என்ன செய்யலாம்? அவர்களைச் சில நாட்களோ, வாரங்களோ தம்தம் அன்றாட ஈடுபாடுகளிலிருந்து விடுவித்து, சக ஆசிரியர்களோடும், அத்துறை நிபுணர்களோடும் இருந்து, கற்றுப் புதுத்தெளிவும் புதுத் தெம்பும் பெற வைக்க வேண்டும். மறு பயிற்சிவகுப்புகள்—கோடைப் பயிற்சி வகுப்புகள்—இத்தகைய பணிக்குத்துணைகளாகும். எப்போதோ ஒரு முறை, யாரோ சிலருக்கு இத்தகைய பயிற்சிகளை ஏற்பாடு செய்து வந்தார்கள், இதுவரை. நாலாயிரம் ஆசிரியர் உள்ள இடத்தில், இருநூறு முந்நூறு ஆசிரியர்கள் மட்டுமே, மறு பயிற்சி பெறுவது போதாது. இத்தகைய முயற்சிகள், கடலில் கரைத்த

நெ.து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்



சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் "கல்விச் சிந்தனை" என்ற தலைப்பில் எழுதி வரும் கட்டுரைத் தொடர் இத்துடன் நிறைவு பெறுகிறது. "கல்லூரிப் பாடத் திட்ட மறுமலர்ச்சி" குறித்துத் துணைவேந்தரின் தெளிந்த கருத்துக்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். "பல்லாண்டுகளாகக் சிக்கி, ஓடாது நின்றுவிட்டிருக்கும் உயர் கல்வித் தேர், நகர்ந்து சுற்றிவர வழிவிடுங்கள்" என்று, கட்டுரை முடிவில் அவர் விடுத்திருக்கும் உருக்கமான வேண்டுகோள், விழிப்புணர்வு பெற்ற தமிழ்ச் சமுதாயத்திலே நல்லதொரு வளர்ச்சிக்கு வித்தூன்றும் என்பதில் எந்தவித ஐப்பாடும் இருக்க முடியாது.

பெருங்காயமாகி விட்டன. புதிய பாடத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முன் கூட்டியே, அந்தந்தப் பாட ஆசிரியர்கள் அனைவரும், ஆங்காங்கே, நிபுணர்கள் தலைமையில் அடக்கமான குழுக்களாகக் கூடி, மறுபயிற்சி பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மறுபயிற்சி, பாடப் புதுமைக்குப் பயன் படுவதோடு, முறைப்புதுமைகளைக் கற்றுக் கொள்ளவும் துணை புரிய வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு அந்தந்தப் பாடத்திற்கு ஏற்ற மறுபயிற்சிகள் பற்றி விரிவான ஆலோசனைகளைப் 'பாடத்திட்டக் குழுக்கள்' கூறும்.

அனைவருக்கும் மறு பயிற்சி வகுப்புகள் நடத்துவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகுப்புகள் கோடை விடுமுறையின் போது நடந்து விட்டால், அடுத்த கல்வி ஆண்டில், புதிய பாடத் திட்டங்களைப் பின்பற்றலாம்.

மேற்கூறிய முடிவுகளின் அடிப்படையில், பல்வேறு பாடக்குழுக்களும், பாடத்திட்டங்களைப் புதுப்பித்துக் கொடுத்துள்ளன. அடுத்தது என்ன ?

பாடத்திட்ட மறுமலர்ச்சி, பல்லாண்டுகளாக நிகழவில்லை. இப்போது, அதற்கு, முயற்சி உண்டு. காலத்திற்கேற்ப, வழி முறைகளிலும் மறுமலர்ச்சி வந்துள்ளது.

முன்பெல்லாம் பாடக் குழு நிபுணர்கள்-பத்துப் பன்னிரண்டு பேர் கொடுக்கும் பாடத் திட்டங்களைப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவிற்கும் பேரவைக்கும் ஒப்புதலுக்கு வைப்போம். அவர்கள் முடிவே முடிவு. பாடங்களை நடத்தப் போவோர், முன் கூட்டி ஆலோசனை சொல்ல அதிக வாய்ப்பு இல்லை. விழிப்பாகவும் துடிப்பாகவுமுள்ள சிலர், கல்விக் குழுவின் உறுப்பினரையோ, பேரவை உறுப்பினரையோ பிடித்து, மாற்றங்களைச் செய்ய வேண்டும். இத்தகைய மாற்றங்கள், 'பட்டா பாக்கியமாக' இருக்கும். அதற்குப் பதில் இப்போது, புதிய வழியைப் பின்பற்றுகிறோம்.

பாடக் குழுக்கள் நகல் திட்டங்களைக் கொடுக்க வேண்டும். முதல் நிலையில் அந்த நகல்களின் பேரில் பல்கலைக் கழகத்தில் முடிவு எடுக்காமல், அவற்றைக், கல்லூரிகளுக்கு அனுப்புகிறோம். கல்லூரிகளில், பாடங்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள், அவற்றை எடை போட்டுப் பார்த்து, மாற்றங்களோ, கூடுதல்களோ தேவைப்பட்டால் அவற்றைத் தெரிவிப்பார்கள். பல கல்லூரிகளிலும் இருந்து வரும் ஆலோசனைகளின் பேரில், நகல்களை மாற்றிப் பாடத் திட்டங்களைச் செப்பனிட்டுக் கொடுப்பார்கள்.

முதல் முறை கொடுப்பது நகல் ; ஆலோசனைகளுக்கு அப்பால் கொடுப்பது முழுமையாக்கப்பட்டது. அதுவும், முடிந்த முடிவல்ல ; சிற்சில ஆண்டுகளுக்கு ஒரு முறை அடுத்தடுத்துப் புதுப்பிக்கப்படும்.

பரவலாகச் கல்லூரிகளையும், அங்குள்ள நூற்றுக் கணக்கான பேராசிரியர்களையும், ஆயிரக் கணக்கான துணைப் பேராசிரியர்களையும் முதலில் கலந்த பிறகே, நகல் பாடத்திட்டத்தை, உறுதிப்படுத்தும் முறை, புது முறை. புது முறை எளிதாக இருக்குமா ? இராது.

அறிவாளிகள் அத்தனை பேரும் குறிப்பிட்ட அத்தனையையும் அப்படியே ஏற்றுக் கொள்ளும் நிலை, எங்கும் காண முடியாதது ; காணவும் விரும்பக் கூடாது. ஏன் ?

அறிவாளிகளும் 'ஆமாம் சாமிகளாகி' விட்டால், அப்புறம், அறிவு வளர்ச்சி நின்று விடும். அத்தனை பேர் சொல்வதையும் ஏற்றுக் கொள்வதும் ஆகாத செயல். 'குடுகுடுப்பைக்காரன் உடுப்புப் போல்' ஆகிவிடக் கூடாதல்லவா ? அதற்காகப் பழையபடி காதும் காதும் வைத்தாற்போல் , இரண்டொரு நிபுணர்களின் அறிவு அடிப்படையில் திட்டம் தீட்டினால் சொல்லிக் கொடுக்க வேண்டிய நூற்றுக் கணக்கானவர்கள், எப்படித்



## கல்வியின் தன்மை

வாலிப உணர்ச்சிகள் வேகமாக நடைபோடுவது, இயற்கையிலேயே இது உருவானது என்றாலும் அதிகமான வேகம் நீடித்த தன்மையினதாக இருக்காது என்று சொல்லுவார்கள். மாணவர்களிடையே வேகம் தேவைதான். அது ஏற்படுவது இயற்கைதான் என்றாலும் அந்த வேகம் வகைப்படுத்தப் படவேண்டும். முறைப்படுத்த வேண்டும். கல்வியின் தன்மையே வேகத்தை முறைப்படுத்தி வகைப்படுத்துவதுதான்.

தெரிந்து ஈடுபட முடியும்? சங்கடங்கள் விளையலாம் என்று தெரிந்தும் எல்லோரையும் கேட்ட பிறகு, முடிவு செய்ய உறுதி கொண்டோம்.

கேட்டிருக்கிறோம். ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் வரும் என்பது எங்கள் அசையா நம்பிக்கை. பிறர் வீட்டுக் குழந்தைகளோடு பரீட்சை பார்க்கக் கூடாது என்கிற கடமை உணர்ச்சியை — அடிப்படையாகக் கொண்டு, இரு கோடிகளுக்கும் இழுக்கப்படாமல் இருந்து, பெரும்பாலோர் சமாளிக்கக் கூடிய அளவு, பாட மறுமலர்ச்சியை, இப்போதைக்கு நிகழ்த்தி விட்டால், மீண்டும் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படும். மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மேலும், மேலும் தரமான, வளமான பாடத்திட்டங்கள் மலரும். இப்போது காண்பது, முதல் அரும்பு, அவ்வளவே என்பதை எல்லோரும் நினைவிற் கொண்டு, குறிப்பிட்ட தலைப்புப் பற்றியோ, செய்தி பற்றியோ கொண்டுள்ள கருத்து வேற்றுமைகளைத், தற்போதைக்கு ஒதுக்கி வைத்து விட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று மாணவர்களை, ஆசிரியர்களை, பெற்றோர்களை, பொது மக்களை வேண்டிக் கொள்ளுகிறோம். அவர்களைச் சேர்ந்தவர் அவர்களது வளத்தையும் வாழ்வையும் காணக் காத்திருப்பவர்களாக—'காலத்தோடு சேர்ந்து கருத்தாக வளர்க்க உறுதிகொண்டவர்களாக, வேண்டிக் கொள்ளுகிறோம்; பல்லாண்டுகளாகச் சிக்கி ஓடாது நின்று விட்டிருக்கும் உயர் கல்வித் தேர், நகர்ந்து சுற்றிவர, வழிவிடுங்கள்; கை கொடுங்கள்; அப்புறம் வடம் உங்களிடமே!

(முற்றும்)

## நிலையான செல்வம்!

ஒரு நாட்டின் நிலையான செல்வம், நிரந்தரமான செல்வம் அந்நாட்டின் அரசியல் வாதிகள் அல்ல; உண்மையாக உணர்ந்தவன் என்ற முறையில் தெரிவிக்கிறேன். கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள்—பொறியியலாளர்கள் —நிர்வாக நிபுணர்கள்தான் — உண்மையான—நிரந்தரமான அழிக்க முடியாத—அளவிட முடியாத செல்வமாகும். அந்தச் செல்வம் நம்முடைய நாட்டிலே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் புதிய தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாட்டின் நிபுணர்களையும், இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகளையும், ரஷ்ய நாட்டுப் பொறியியலாளர்களையும் தருவிக்கிறோம்.

—பேரறிஞர் அண்ணா.

## சென்னைக்கு நீர் வழங்கும் சீரான வீராணம்!

சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 21·30 கோடி செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இத் திட்டம் நிறைவேறியபின், இத்திட்டத்தைப் பராமரிப்பதற்கு ஆண்டு தோறும் ரூபாய் 45 இலட்சம் செலவாகும்.

வீராணம் ஏரியிலிருந்து 135 மைல் தூரத்திற்கு 66 அங்குல விட்டம் உள்ள கான்கிரீட் குழாய்களை அமைத்து அதன் வழியாகச் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கொண்டுவரப்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்றத் திருவாளர்கள் சத்தியநாராயணா சகோதரர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இவர்கள், கிரீசில் உள்ள 'வாக்கும் கான்கிரீட் (ஓவர்சீஸ்) லிமிடெட்' நிறுவனத்துடன் கூட்டுச்சேர்ந்து கான்கிரீட் குழாய்களை உருவாக்குவார்கள். இக் கூட்டு முயற்சிக்கு இந்திய அரசும் அனுமதி அளித்துவிட்டது.

கான்கிரீட் குழாய்களைத் தயாரிக்க, பண்ணுருட்டியில் ஒன்றும், திருக்கழுக்குன்றத்தில் மற்றொன்றுமாக இரண்டு தொழிற்சாலைகள் வெகுவிரைவில் அமைக்கப்படும். இக்குழாய்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் பொருள்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும்.

# நாடு விட்டு நாடு வரும் பறவைகள் !

சனவரித் திங்கள்—ஆண்டின் தொடக்கம்—நாட்காட்டியின் கணக்கில் ! ஆனால், தமிழகத்தில் செங்கையை அடுத்துள்ள வேடந்தாங்கலில் உள்ள சரணாலயத்திற்கு வரும் பல நாட்டு வண்ணப் பறவைகளுக்கு இது வசந்தத்தின் துவக்கம்—ஆனந்தத்தின் ஆரம்பம் !

ஆகஸ்டுத் திங்களிலே பறவைகள் அங்கே வரத்தொடங்குகின்றன என்றாலும், இந்தப் பருவத்திலேதான் வண்ணப் பறவைகள் எண்ணற்றவை அங்கே வருகை புரிகின்றன. தமிழகத்து மண்ணைத் தொட்ட பிறகுதான், பிறவி எடுத்ததன் பெருமையை அந்தப் பறவைகள் எண்ணி மகிழ்கின்றன என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உன்னதத் தத்துவத்தை உலகுக்கு வழங்கிய புலவர் பூங்குன்றனாரும், "காக்கை குருவி எங்கள் சாதி—நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்று உறவு கொண்டாடிய பாவலன் பாரதியும் பிறந்த மண்ணல்லவா தமிழ் மண் ! அதனால்தான் வண்ணப் பறவைகள் வண்டமிழ் நாட்டைத் தேடி வருகின்றன.


எத்தனை வகைப் பறவைகள் ? எத்தனை விதமான வடிவங்கள் ? உருவத்திலும் வடிவத்திலும் வேற்றுமை இருந்தாலும் அவற்றின் உள்ளங்களில் ஒற்றுமையே உருவாகி நிற்கிறது. வண்ணப் பறவைகள் கூட்டம் கூட்டமாகச் செல்லும் அழகே அழகு ! ஏக காலத்தில் ஏழெட்டு விமானங்களை ஒரே கோட்டில் பறக்கவைத்துக் காட்டுவார்களே விமானிகள், அதைப்போல, நூல்பிடித்தாற்போல், ஒரே கோட்டில் பறந்து செல்லும் பறவைகளைக் காணும்போது, நம்மையறியாமல் நமதுள்ளத்தில் மகிழ்ச்சி அலை மோதுகிறது.


அகலமான ஏரி—அதன் நடுவே—அடிப்பகுதி முழுதும் நீருள் நனைய வைத்து, கிளைகளை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் பெரிய பெரிய மரங்கள்—அந்த மரங்களின் மீது ஏறி விளையாடும் எழில் மிகு பறவைகள்—இவற்றைப் பார்க்கும் போது, கல்மனமும் உருகிவிடும்—களிப்பில் மிதந்துவிடும்.

சைபீரியா—ரஷ்யா முதலிய வெளிநாடுகளிலிருந்தும் இங்கே பறவைகள் வருகின்றன ! ஆம், "பாஸ் போர்ட்" — "விசா" ஆகிய எதுவும் இல்லாமலேயே சிறகின் துணை கொண்டு இந்தப் பறவைகள் நாடு விட்டு நாடு வந்துவிடுகின்றன. அங்கே பத்தாயிரம் பறவைகள் காணப்படுகின்றன என்று பறவை நிபுணர்கள் கூறுகிறார்கள். அவைகளில் குறிப்பிடத் தகுந்தவை—நத்தைக் குத்தி—நாரை—கங்கணம்—நீர்க் காக்கை—நரையான்—வெண்கொக்கு—துடுப்பு மூக்கு நாரை—இளம் வக்கா—ஆகியவை !

இந்தப் பறவைகளின் அணியைக் காணத் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுப் பயணிகள் வருகிறார்கள். மாடமாளிகைகளும் வரலாற்றுப் பின்னணிகளும் கொண்ட இடங்களைத் தான் சுற்றுப்பயணிகள் பார்வையிடுவார்கள் என்பதில்லை—வண்ணப் பறவைகளின் சரணாலயத்தைக் காண்பதற்கும் கூட மகிழ்ச்சியுடன் திரண்டு வருவார்கள் என்பதை—நாள்தோறும் வேடந்தாங்கலுக்கு வந்து செல்லும்—தனியார் பேருந்துகளும், ஊர்திகளும் தெரிவித்து வருகின்றன. சுற்றுலாத்துறையை வளர்ச்சியுறச் செய்வதில் அக்கறை கொண்ட தமிழக அரசு—சென்னைக்கும் வேடந்தாங்கலுக்கும் இடையே பேருந்துப் போக்கு வரத்தை அதிகப்படுத்தி—பயணிகளுக்குப் பேருதவி புரிந்து வருகிறது—பெருமகிழ்வு தந்து வருகிறது.

பறவைகளின் வாழ்வில் புதிய ஒளியையும் புதிய மகிழ்வையும் உருவாக்கும் இந்தச் சனவரித் திங்கள்—புத்தாண்டின் பிறப்பு—தமிழக மக்களின் வாழ்விலும் புதிய மகிழ்வை—புதிய நம்பிக்கையை—புதிய ஒளியை உருவாக்குமாக !


1
வேடந்தாங்கல்
சுற்றுலா செல்வீர்
தாத்தா எங்கே போகணும்?
ஊளூர் போகணும் இந்தக் கூட்டத்திலே எப்படி ஏறுவது? 'கூனை' நிமிர்த்திடு வாங்க போலிருக்கே
2
கவலைப்படாதீங்க தாத்தா! நான் ஏற்றி விடுகிறேன்!
தம்பி! நீ நல்லா இருக்கணும்!
சார்! அப்படியே எல்லோரும் முன்னே போங்க...!
3


4
இதுவும் சீரணிக் காரங்க கட்டியததுதானு?
சீரணிபுரம்
சைதாப்பேட்டை
5
தாத்தா எப்படித்தனியா பஸ் பிடிச்சு வந்தீங்க? அம்மா பயந்துகிட்டே இருந்தாங்க!
யாரோ சீரணிப் பையன் ஏற்றிவிட்டான். பத்திரமா வந்துட்டேன்! இதென்னடா தொப்பியும், கிப்பியும்?
6
ஊநர் சீரணி
உயர் நிலைப் பள்ளி
நானும் சீரணியில் சேர்ந்திருக்கேன் தாத்தா! இந்த உயர் நிலைப் பள்ளிக் கட்டிடம் நாங்கள் கட்டியது தான். இன்றைக்குக்கூட சிறு ரோடு போடத்தான் போகிறேன். எல்லா வேலையுமே அரசாங்கமே செய்ய முடியுமா? அதற்கு ஓய்வு நேரத்தில் உதவுவது தான் 'சீரணி'.
அப்படியா? நாடு வாழ நல்ல தொண்டுபா நீயும், உங்க சீரணியும் சீரோடு வளரட்டும்!
கோபன்

# பார்த்தோம் படித்தோம்




### இனிக்கும் முக்கனி !

'தமிழரசு' இதழை நான் தொடர்ந்து படித்து வருகிறேன். என்னே வியப்பு! எல்லாமே உரையாடலாகவும், கதையாகவும் எழுதி வேளாண்மை பற்றிய குறிப்புக்களைக் கொடுப்பது முக்கனிபோல் இனிக்கிறது. மிகவும் பயன் விளையும் உழவர்களுக்கு.

—எம். கே. எஸ். மணி,
மங்கலப்பள்ளி.

### பாரதி போற்றி !

தமிழரசு டிசம்பர் 16ஆம் தேதி இதழ், அட்டையில் பாரதியின் வீர உருவத்தைத் தாங்கி வந்ததோடு மட்டுமல்ல, கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ''பாட்டுக்கொரு புலவன்'' என்ற மிகச் சிறப்பான கட்டுரை, பாரதியாரின் வீரமொழி, மற்றும் பாரதியாரைப் பற்றிய பல விவரங்கள் அனைத்தையும் மிக அருமையாக ஏந்தி, பாரதி மலராக வெளிவந்திருப்பது பாராட்டுக்குரியது. மற்ற எந்தப் பத்திரிகையும் பாரதியாரைத் 'தமிழரசு' நினைவு கூர்ந்து பாராட்டியது போல் எழுதவில்லை. தமிழரசு ஒன்றுதான் இந்தச் சிறப்பான செயலைச் செய்திருக்கிறது.

—இர. தங்கப்பாண்டியன்,
திருத்தணி.

### அமுதும் தேனும் !

அரசு பங்கேற்கும் அத்துணைச் செய்தியும், மாண்புமிகு முதல்வர் தரும் ''இனியவை இருபதும்'' தித்திக்கும் தேனாக, தெவிட்டாத அமுதமாக உள்ளன.

—சே. ஏகப்பன்,
மணப்பாறை.

### சுற்றுலா—35 காசுகளில் !

தமிழகமெங்கும் உல்லாசப் பயணம் சென்றாலும் சில முக்கிய இடங்களைப் பார்க்கத் தவறுவது உண்டு. ஆனால் ஒவ்வொரு தடவையும், முப்பத்தைந்து காசுகள் கொடுத்துவிட்டு மிக முக்கிய இடங்களைத் தெளிவான படங்களுடன் பார்த்துவிடலாம். வைகை அணைக்காட்சிகள் கண்ணுக்கு விருந்தளித்தன. உண்மையில் 'தமிழரசு' ஓர் உல்லாசப் பயணியாகவும் விளங்குகிறது.

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

### ஆடவர்க்கும் உதவும் மகளிர் பகுதி

தமிழரசில் வெளியாகும் 'மகளிர் பகுதி' எங்களைப்போல் விடுதியில்லாமல் தானே சமைத்து உண்ணும் மாணவர்கட்கு மிகவும் உதவுகிறது.

தக்காளி உருளைக் கிழங்குக் கூட்டுச் செய்து சாப்பிட்டோம்: மிகவும் பிரமாதம் !

—சி. சத்தியநாராயணன்,
பங்கார்ப்பேட்டை.

### சிந்திக்க வைக்கும் கட்டுரை

'தமிழ்நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பா?' என்று மாண்புமிகு அமைச்சர் திரு. செ. மாதவன் தீட்டிய கட்டுரை தாய்மொழியின் தனித்துவத்தைச் சிறப்பித்துக் காட்டித் தன்மானமற்ற தமிழ்த் துரோகிகளைச் சிந்திக்க வைத்து உணர்வூட்டுகிறது.

—ச. ஆ. கேசவன்,
இனாம் மணியாச்சி.

### பாராட்ட வார்த்தைப் பஞ்சம் !

'தமிழரசு' ஒவ்வொரு இதழும் ஒரு மலராகத் திகழ்கிறது. அரசின் சாதனைகளை விளக்கும் அருமையான கட்டுரைகள், எழில் சிந்தும் புகைப்படத் தொகுப்பு, இளம் கவிஞர்களின் உன்னதக் கவிதை வெண்பா, பயன் தரும் துணுக்குகளோடு பவனி வரும் 'தமிழரசு' இதழை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை!

—ஏ. ஆறுமுகம்,
இராசியன்காடு.

### பயிற்சி மொழிக்கு பாரதியின் மேற்கோள்

தண்டமிழ்த் தேர்ச் சாரதி 'பாரதி மலர்'-தமிழரசின் ஒவ்வொரு வரியும், தாய்மொழியாம் தமிழின் பண் பாடி, தாய்மொழியைத் தூற்றும் தறுதலைகளிடம் ''தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா'' எனச்சூட்டுக் கோலிட்டு, தமிழிசை பாடும் கலைஞரின் எண்ணி முடிக்கும் திறனையும், நல்லொழுக்கத்தையும், திண்ணிய நெஞ்சத்தையும், தெளிந்த நல்லறிவையும் பாரதி மூலம் சொல்லாமல் சொல்லி, வனப்புமிகு 'வண்டமிழே' பயிற்சி மொழிக்கு உகந்தது எனும் நற்கருத்தை வலியுறுத்துகிறது.

—நாஞ்சில் எம். எம். மீரான்,
தேங்காப்பட்டணம்.

### தெரியாதன தெரிந்தோம் !

எங்களுக்குத் தெரியாத சில செய்திகளை-'உங்களுக்குத் தெரியுமா?' என்னும் தலைப்பில் பொது அறிவுப் புதிர்களைத் தவறாது அளித்துவரும் 'தமிழரசு' தமிழகத்திற்கு மட்டும் வழிகாட்டியாய் இல்லாது இத்தரணிக்கே வழிகாட்டியாய் விளங்குகிறது. சுவையான பல செய்திகளைச் சுவைப்பதற்கு அளித்துவரும் 'தமிழரசு' இதழுக்குப் பாராட்டுக்கள்.

—த. சிவசுப்பிரமணியன்,
மணச்சநல்லூர்.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

# எவ்வழி நல்லவர் ஆடவர்
# அவ்வழி நல்லை வாழிய நிலனே!

## வெற்றிகள் குவிந்தால் போதுமா?



- பசுமைப் புரட்சி பரவுகிறது!
- புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!
- தொழில்துறையில் புதிய புதிய முயற்சிகள்!
- சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!
- வீட்டுமனைப் பட்டா!
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!
- எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!

அரசு
ஆடவர் ஆரணங்கு

பொறுப்பை உணர்த்தும் சிவப்பு முக்கோணம்.

சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகரமுடிகிறதா?



நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது மக்கள்தொகைப்பெருக்கம்தானே!



## இதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?

**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்
இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.**

வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து

பொங்கல் திருநாளில்

செங்கரும்புப் பரிசுகள்!

புத்தாண்டில் புதுவாழ்வு தரும்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு அளிக்கும்

சிறப்புப் பரிசுகள்

மூதல் பரிசு ரூ. 10 லட்சம்

2 பேருக்கு இரண்டாவது பரிசுகள்
ரூபாய் 5 லட்சம் வீதம் ரூ. 10 லட்சம்

முதல் 5 வரிசைகளுக்கு ஒன்றும்
அடுத்த 5 வரிசைகளுக்கு ஒன்றுமாக
அளிக்கப்படும்.

5 பேருக்கு மூன்றாவது பரிசுகள்
ரூபாய் 2 லட்சம் வீதம் ரூ. 10 லட்சம்

சிறப்புப் பரிசுகள் மட்டும்
பத்து வரிசைகளுக்கும் ரூ. 30 லட்சம்

இது தவிர வழக்கமான பரிசுகள் ஒவ்வொரு வரிசைக்கு ரூ. 3½ லட்சம்

இத்தனைக்கும் பரிசுச்சீட்டு ஒன்றின் விலை ரூ. 2 தான்!

குலுக்கல் நாள் 31-1-71

இன்றே வாங்குவீர்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை-சென்னை-9